பக்கங்கள்: இருபதுநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 03 சனிக்கிழமை (16.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 051

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது

## புதுடில்லியில் வைத்து மாவை சேனாதிராஜா தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் போன்றவை தொடர்பான விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவுகள், அணுகுமுறைகள் போன்றவற்றை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா நேற்றுப் புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தார்.

(21ஆம் பக்கம் பார்க்க)

## தவறிய வாக்காளர் அட்டைகள் தந்தூரிப் பகுதியில் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஜன.16

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகத்தின் போது தவறவிடப்பட்ட வாக்காளர் அட்டைகள் சிலவற்றை கண்டுபிடித்துள்ளதாகத் தபால் மா அதிபர் எம்.கே.பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வாக்காளர் அட்டைகள் மூன்று இடத்தில் வைத்து தவறவிடப்பட்டன எனத் தபால்மா அதிபர் குறிப்பிட்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையரின் ஆலோசனைகள் அரச உத்தியோகத்தர்களால் உதாசீனம்

### 'பவ்ரல்' அமைப்பு குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, ஜன. 16

அரச அதிகாரிகள் தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைகளை மீறியுள்ளனர் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பு சினமன் லேக்சைட் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

17ஆவது அரச சாசனத் திருத்தத்தின் அடிப்படையில், சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு, நீதிமன்ற ஆணைக்குழு, பொலிஸ்துறை ஆணைக்குழு என்பன நியமிக்கப்படாத நிலையில், சுதந்திரமான தேர்தல் ஒன்றை எதிர்பார்க்க முடியாது.

தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களைப் பாதுகாப்பது தொடர்பில் அரச அதிகாரிகளும் பொலிஸாரும் பொது மக்களும் தேர்தல் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களில் பெரும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கொலன்னாவைப் பிரதேச சபை, மாகாண சபைகளின் ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது தாக்குதல்கள்

கொழும்பு, ஜன.16

கொழும்பு கொலன்னாவைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவிற்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களின் வீடுகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் கொலன்னாவை நகரசபை உறுப்பினர் ஜானக நாவுலவின் வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதல் காரணமாக அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜானக நாவுலவின் வீட்டிற்குள் நுழைந்த ஆயுதமேந்திய குழுவினர் அவரை அடித்துக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 25 இலங்கையர்களை விடுவிக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன. 16

மூன்று மாதங்களுக்கு முன்னர் கனடாவுக்குள் நுழையமுற்பட்ட வேளை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 76 பேரில் மேலும் 25 பேரை விடுதலை செய்ய கனேடிய லங்குவேர் அரச நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

'ஓஷியன் லேடி' என்ற கப்பலின் மூலம் கனடா சென்ற இலங்கைத் தமிழர்கள் அங்கு அகதி அந்தஸ்த்து கோரியபோதே இவர்கள் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் குறித்த 25 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் நேரடியான தொடர்பு இருக்கலாம் என்பதன் காரணமாகவே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இதுகுறித்த விசாரணையைக் கனேடியப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டனர்.

அவர்களின் விசாரணைகளின் பின்னர் தடுத்துவைக்கப்பட்டிருந்த 25 பேருக்கும் புலிகளுடன் தொடர்பு இல்லையென்ற நிலையில், அவர்கள் அகதி அந்தஸ்துக் கோரியே கனடா வந்துள்ளனர் எனக் கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் எடுக்கப்பட்டுவருகின்றன. ஏற்கனவே ஒன்பது பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர். (சி)

## ஆணையாளரின் உத்தரவைப் பின்பற்ற ஊடகங்களுக்குக் கண்டிப்பான உத்தரவு

### தேர்தலை ஒட்டி உயர் நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு , ஜன.16

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவினால் விடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைச் சகல ஊடகங்களும் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என உயர் நீதிமன்றம் நேற்றுக் கண்டிப்பான உத்தரவை வழங்கியுள்ளது.

தேர்தல் ஆணையாளர் விடுத்த வழிகாட்டுதல்களை அரச ஊடகங்கள் பின்பற்றத் தவறிவிட்டன எனச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத்

(24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களைப் பரவசப்படுத்திய நேற்றைய கங்கண சூரிய கிரகணம்

யாழ்ப்பாணம், ஜன.16

குடாநாட்டு மக்கள் நேற்று கங்கண சூரிய கிரகணத்தை ஆச்சரியத்துடனும் ஆர்வத்துடனும் பார்த்து பரவசமடைந்தனர்.

நேற்று நண்பகல் வேளையில் காலநிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டது. கடும் உஷ்ணமாக எரிந்த வெயில் மெதுமெதுவாகத் தணிந்து சூழல் குளிர்மை அடைந்தது. தென்றல் காற்று வீசுவது போன்று ஜில்லென்று இருந்தது என்றும் இல்லாத ஒரு சுகானுபவமான உணர்வு தழுவிச் சென்றது.

இந்த ரம்மியமான வேளையில் குடாநாட்டு மக்களில் அநேகமானோர் கங்கண சூரிய கிரகணத்தை பார்த்து ரசித்தனர். கறுப்புக் கண்ணாடிகளை அணிந்தும், பாத்திரங்களிலும் வாளிகளிலும் தண்ணீரை நிரப்பியும் மக்கள் சூரியகிரகண நிகழ்வை பார்த்தனர்.

அவ்வேளையில் சூரியன் நெருப்பு வளையமாக காட்சியளித்தது. அந்தக் காட்சி அபூர்வமாக இருந்தது. நேரம் செல்லச் செல்ல படிப்படியாக அதில் மாற்றங்கள் ஏற்பட்டு சுமார் 3மணியளவில் வழமையான சூரியன் தென்பட்டான்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்பில் மஹிந்தவே முன்னணியில் என்கிறார் ஊடக அமைச்சர்

கொழும்பு, ஜன.16

ஜனாதிபதித் தேர்தலுக்காக நடைபெற்று முடிந்த தபால் மூல வாக்களிப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முன்னணியில் உள்ளார் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ள ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன, ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அரசமைப்பு மாற்றத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

கிராமப்புற மக்களின் வாக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கே கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக உறுதியளித்த சரத் பொன்சேகா தற்போது தான் வென்றால் சில அதிகாரங்களைத் தாம் வைத்திருக்கப் போகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது அவரது முன்னைய கூற்றுகளுக்கு முரணானது.

முன்னர், ஜனாதிபதி அனைத்து அதிகா

(24ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையின் பின்னர் மௌனம் காக்கும் கனகரட்ணம் எம்.பி.

வவுனியா, ஜன. 16

கடந்த மே மாதம் முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் கடந்த புதன்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் தமது குடும்பத்தவர்களுடன், வவுனியாவிலுள்ள அரச சுற்றுவிடுதி ஒன்றில் அவர் தங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வாகன வசதியும் அரசால் வழங்கப்பட்டுள்ளன. எனினும், அவர் அங்

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனாதிபதியின் மகன் நாமல் நடத்துகின்ற அமைப்புக்கு எங்கிருந்து பணம் வருகிறது?

## உண்மையை அம்பலப்படுத்தக் கோருகிறார் மங்கள

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ நடத்திவரும் 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்பின் ஊடாக புலிகளின் கறுப்புப் பணம் வெள்ளைப் பணமாக மாற்றப்பட்டுக்கொண்டு வருகின்றது என்று சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளரும், எம்.பியுமான மங்கள சமரவீர கூறினார்.

நாமலின் வங்கிக் கணக்குகள் எந்தெந்த நாடுகளில் இருக்கின்றன, அவற்றில் எவ்வளவு பணம் இருக்கின்றது என்பது பற்றிய விவரங்கள் அனைத்தையும் நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று அவர் அரசிடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார்.

கொழும்பில் உள்ள சரத் பொன்சேகாவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் சர்வதேசப் புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தர் எமில் காந்தனும், மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமலும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப் படம் ஒன்று எம்மிடம் சிக்கியுள்ளது. இந்த எமில் காந்தன் தான் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது என்னைச் சந்தித்தவர்.

2005 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களை வாக்களிக்கவிடாமல் தடுப்பதற்காக பஸில் ராஜபக்ஷ இவர் ஊடாகத்தான் புலிகளுக்குப் பணம் கொடுத்தார். இதை நான் ஏற்கனவே நாடாளுமன்றில் கூறியிருக்கின்றேன்.

எமில் காந்தன் என்னை மாத்திரமின்றி பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பி.பி.ஜயசுந்தர ஆகியோரையும் சந்தித்தார். பிறகு பஸில் தான் எமிலுடன் தொடர்பைப் பேணி வந்தார்.

தேர்தல் முடிந்த பிறகும் பஸிலுக்கும், எமிலுக்குமிடையில் தொடர்பு இருந்ததை நாம் அறிந்தோம். இப்போது ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ அந்தத் தொடர்பை எமிலுடன் பேணி வருகின்றார்.

எமில் காந்தனும், நாமலும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் எமது கையில் சிக்கியுள்ளது. வேறு நாட்டில் என்றால் மகன் செய்த இந்த வேலைக்காக ஜனாதிபதிப் பதவியில் இருந்து அப்பா விலகியிருப்பார்.

நாமல் ராஜபக்ஷ நடத்திவரும் 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்பின் வங்கிக் கணக்கின் ஊடாகவே புலிகளின் கறுப்புப் பணம் வெள்ளைப் பணமாக மாற்றப்பட்டுக் கொண்டு வருகின்றது.

நாமலுக்கு இலங்கையில் எத்தனை வங்கிக் கணக்குகள் இருக்கின்றன? அவற்றில் எவ்வளவு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது? பணம் எப்படிக் கிடைக்கின்றது? வெளிநாடுகளில் நாமலுக்கு வங்கிக் கணக்குகள் இருக்கின்றனவா? சுவிஸ் வங்கியில் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளதா? - போன்ற கேள்விகளை நாம் அரசிடம் முன்வைக்கின்றோம்.

எமது மேற்படி கேள்விகளுக்கு ஜனாதிபதியால் பதிலளிக்க முடியாதுவிட்டால், பிரதமராவது பதிலளிக்கவேண்டும். இரண்டு நாள்களுக்குள் நாம் பதிலை எதிர்பார்க்கின்றோம்.

இம்மாதம் 27 ஆம் திகதிக்குப் பிறகு நாம் மேலும் பல மோசடிகளை வெளிப்படுத்துவோம். - என்றார் மங்கள சமரவீர.

(அ-சி)

(மற்றொரு செய்தி 21 ஆம் பக்கத்தில்)






## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை செல்வி அருந்ததி துரைராஜா அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி திலகவதி துரைராஜா

அவர்களின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி/5641147)

## கண்ணீர் அஞ்சலி



யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் வே.சுந்தரதாஸ் அவர்களின் பாரியார்

### அமரர் உருக்குமணி சுந்தரதாஸ்

(எமது முன்னாள் ஆசிரியரும், கனடா பழைய மாணவர் சங்கத் தலைவரும்)

அவர்கள் 14.01.2010 வியாழக்கிழமை இந்தியாவில் காலமாகியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத் துக்கும், உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய். - மெமோறியல் குடும்பம் -

(93921)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கனகசுந்தரம்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கனகசுந்தரம் நேற்று (15.01.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், கருணாவதி, கனகபூசணி, சறோஜினிதேவி, கருணாகாந்தன், காலஞ்சென்ற கௌசலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் சின்னத்தம்பி, அமரர். பொன்னம்மா, அமரர். ஆனந்தசுந்தரம், இ.தருமலிங்கம், இ.நடராசா, இ.விஸ்வலிங்கம் இ.சுப்பிரமணியம், இ.தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அ.மகேஸ்வரன், சு.சந்திரலிங்கம், க.சத்தியநாதன், க.தமிழ்ச்செல்வி, வ.புண்ணியமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2010) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

தகவல்: க.கருணாகாந்தன் (மகன்).


MICRO PC SYSTEMS

இடமாற்ற அறிவித்தல்

யாழ்.நகரில் முன்னணிக் கணனி நிறுவனமாகிய

Micro PC Systems (Pvt) Ltd

175/3 Kasthuriar Road, Jaffna

என்ற விலாசத்தில் இருந்து இன்று 16.01.2010 சனிக்கிழமை முதல்

218, Hospital Road இல் House of VSRP

எனும் புதிய கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் தேவைக்கேற்ப கணனிகளையும், கணனித் தொகுதிகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும் கணனி சம்பந்தமான திருத்தவேலைகள், பராமரிப்புச் சேவை என்பவற்றையும் எம்மிடம் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். 11.30 am முதல்

MICRO PC SYSTEMS

House of VSRP Building,
218, Hospital Road, Jaffna.
021-222 5893/0217913020
0773126712/0773963280





DEVELOP YOUR CAREER PATH THROUGH IMPROVING LANGUAGE SKILLS & COMPUTER LITERECY...

ENGLISH FOR BUSINESS & COMMUNICATION & SINHALA LANGUAGE DEVELOPMENT PROGRAMME



அனுபவமிக்க ஆசிரியர்களினால்........

* அடிப்படையில் இருந்து கற்றுக்கொள்ள........
* உங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ள விசேட பயிற்சிகள்....
* வசதியான நேரத்துக்கு வகுப்புக்களை அமைத்துக்கொள்ள ......
* வகுப்புக்களில் வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர் (10 - 15பேர்)....
* 100 மாணவர்கள் மட்டும் முதல் 6 மாத கால கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படுவர்.....

COMPUTER COURSE (கீழ்வரும் கற்கைநெறிக்கான சான்றிதழ்கள் யாவும் கொழும்பு I. S.S COMPUTER SYSTEM (AN ACCREDITED ACADEMY OF TRANS ATLANTIC COLLEGE LONDON (UK) நிறுவனத்திடமிருந்து வழங்கப்படும்)

01) MS OFFICE 02) D.T.P 03) HARDWARE 04) INTERNET & E - MAIL

பதிவுகளை 25.01.2010 இற்கு முன் மேற்கொள்ளவும்.

ALLIANCE INSTITUTE,
NO.25, SOMASUNDARAM AVENUE, CHUNDIKULI, JAFFNA
T.P - 021222 8193 / 0215670350 / 0773296407

(சி/564152)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நியாயத் தீர்வே தமிழர்கள் கேட்பது தெற்கு விட்டெறியும் பிச்சையை அல்ல

''நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரம் அல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'' - என்பது சட்ட மற்றும் நீதித்துறை தொடர்பான ஓர் ஆன்றோர் மொழியாகும்.

இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்துக்குத் தீர்வு காணும் விவகாரத்திலும் கூட அதுதான் நியாயம். அதுவே நிலைநாட்டப்பட வேண்டிய முறையுமாகும். ஆனால் அதுபற்றி யாரும் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட தரப்பு சிறுபான்மையினரான தமிழர்கள்தாம்.

தமக்கு நீதி கோரி, நியாயம் வேண்டி, கௌரவ வாழ்வுரிமை தேடி, சுதந்திரம் நாடி பல்வேறு வழிகளிலும் போராடிய தமிழர் தரப்பு இன்றும் அடக்கப்பட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் காந்திய நெறியில் - அஹிம்சைப் பாதையில் - அறவழியில் - அவர்கள் தமது உரிமைகளுக்காகத் தொடுத்த போராட்டமும், பின்னர் அதே இலக்கோடு அவர்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டமும் ஆட்சி, அதிகாரத் தரப்பின் பலாத்கார வலிமை மூலம் அடக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் துவண்டு கிடக்கும் தமிழினத்துக்கு நீதி செய்யவேண்டிய - நியாயம் இயற்ற வேண்டிய - தனது பொறுப்பைச் செய்யாது தட்டிக் கழிக்கின்றது தென்னிலங்கை.

நீதி, நியாயம் கோரும் தமிழர் தரப்புக்கு உரியதை - அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற ஒழுங்கு முறைகளை - வழங்காது வேறு வியாக்கியானம் செய்ய முற்படுகின்றது தென்னிலங்கை.

போரியல் வெற்றிக்களிப்பின் உச்சத்தில் நிற்கும் கொழும்பு தான் தமிழர்களுக்கு எதை வழங்க முடியுமோ - வழங்க விரும்புகின்றதோ - அது மட்டுமே தீர்வாக இருக்கமுடியும் என்று கூறுகின்றது.

அதாவது, இலங்கைத் தமிழர்கள் இரப்பவர்கள் போலவும், கொழும்பு ஆட்சியாளர்கள் இரந்துவக்கின்றவர்கள் போலவும், தமிழர் பிரதேசத்துக்கு ஆட்சித் தரப்பு விட்டெறியக் கூடிய பிச்சை போன்ற விவகாரமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழருக்கு வழங்கப்படக்கூடிய சகாயங்கள், சலுகைகள் குறித்துப் பேசுகின்றது தென்னிலங்கை ஆட்சித் தரப்பு.

தமது பாரம்பரிய தாயகத்தில், தங்களைத் தாங்களே நிர்வகிக்கின்ற தமது கட்டமைப்பு முறையை - காலங்காலமாகத் தமது பிரதேசத்தில் விளங்கி வந்த சுயாட்சி முறையை - தமது வரலாற்று ரீதியான உரிமைகளை - மீண்டும் நிலைநாட்டுவது குறித்தே தமிழர்கள் பேசுகின்றார்கள். அதற்காகவே அவர்கள் போராடுகின்றார்கள். அதையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழர்களின் அந்த நீதியான அபிலாஷைகளைக் கருத்தில் எடுக்காது, தாங்கள் எதை விட்டுக் கொடுக்க முடியும் என்பதைப் பற்றியே தென்னிலங்கையும், அதன் ஆட்சித் தலைமையும் பிரபலாபிக்கின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்துக்கு இடக்கூடிய 'பிச்சை' பற்றிய விடயம் போல கையாளப்படக்கூடாது. பெரும்பான்மையினரான சிங்களவர்கள் எதை விட்டுக்கொடுக்கத் தயாரோ, அதுவே இணக்கமான தீர்வாக இருக்கமுடியும் என அர்த்தப்படுத்தவும் கூடாது; அர்த்தப்படுத்தவும் முடியாது.

எண்ணிக்கையின் - ஆள் எண்ணிக்கையின் - அடிப்படையில் - அதிகாரம் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் மாண்பு ஜனநாயகத்திற்கு உரியது.

ஆனால் நீதி, நியாயம் எது என்பதை எண்ணிக்கையை வைத்துத் தீர்மானிப்பது தப்பு. பெரும்பான்மையானோர் அநீதியை விரும்புகின்றார்கள் என்பதற்காக அது நீதியாகிவிட முடியாது; நியாயமாகிவிடவும் இயலாது.

எனவே -

இனப்பிரச்சினையின் மூலங்களாகப் புதைந்து கிடக்கும் வரலாற்றுப் பின்புலங்களையும், சரித்திர உண்மைகளையும், பக்கம் சாராது உள்வாங்கி, இது வரையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்போது இணக்கம் காணப்பட்ட அம்சங்களையும் கருத்தில் எடுத்து, அவற்றின் அடிப்படையில் தமிழர் தரப்பு முன்வைத்திருக்கும் அவர்களின் அபிலாஷை பற்றிய வேணவாவையும் கவனத்தில் கொண்டு, அவற்றின் அடிப்படையில் தான் இனப்பிரச்சினைக்கான நீதியான தீர்வு வகுக்கப்பட வேண்டும்.

அதை விடுத்து, பெரும்பான்மை இனம் என்ற பலத்தை வைத்துக்கொண்டு, அதன்மூலம் தனக்குப் பெற்றுக்கொள்ள முடிந்த இராணுவ வெற்றியின் சிகரத்தில் ஏறி நின்றபடி, தான் தூக்கி வீசுவதை சிறுபான்மை இனம் பவ்வியமாக அடங்கிப் பெற்றுக் கொள்வதே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்று கொழும்பு ஆட்சித் தரப்பு தனது வழமையான மமதைப் போக்கில் நம்புமானால் அது அபத்தமின்றி வேறில்லை.


அத்தகைய மமதைப் போக்கில் ஆட்சித் தரப்பு பிடிவாதமாக இருக்குமானால், இந்த நாட்டில் மற்றொரு விபரீதத்துக்கு வினை விதைக்க அது விரும்புகிறது என்பதே அர்த்தமாகும் அல்லவா?

# பொலிஸார் எனக்கூறி குடாநாட்டில் பொதுமக்களிடம் பணம் கறக்கும் கும்பல்

## உண்மை நிலையைத் தெளிவுபடுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடமாடும் ஒரு குழுவினர் தம்மைப் பொலிஸார் என அடையாளப்படுத்தி பொதுமக்களிடம் பெரும் எடுப்பில் பண வசூலிப்பில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இது தான் அந்தப் பற்றுச்சீட்டு

கொழும்புத்துறை, சண்டிலிப்பாய், மானிப்பாய், உடுப்பிட்டி போன்ற பகுதிகளில் இக் குழுவினர் பண வசூலிப்பில் ஈடுபட்டதாகப் பொதுமக்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

குறித்த பகுதிகளில் குழுவாகச் செல்லும் இவர்கள் பின்னர் தனித் தனியாகப்பிரிந்து வீடுகளுக்குச் செல்கின்றனர். அங்கு தம்மைப் பொலிஸாரெனக் கூறி அடையாளப்படுத்துகின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி சேகரிப்பில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும், அதற்கு நீங்கள் பங்களிக்க வேண்டுமெனவும் கொச்சைத்தமிழில் இவர்கள் பேசுகின்றனர். இவர்கள் சிவில் உடையில் இருந்தாலும் பொலிஸார் தானோ என்ற பயத்தில் பல பொதுமக்கள் 200ரூபா, 500 ரூபா எனத் தம்மாலியன்ற பணத்தை இவர்களிடம் வழங்குகின்றனர். பணத்தைப் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டையும் வந்தவர்கள் வழங்குகின்றனர்.

எனினும் வந்தவர்கள் உண்மையிலேயே பொலிஸார் தானா? அவர்களுக்கு இவ்வாறு நிதி சேகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என்பன போன்ற சந்தேகங்களை அரச அதிபரோ, பொலிஸ் அதிகாரிகளோ விளக்க வேண்டுமெனப் பொதுமக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் இது போன்ற பாணியில் காணாமல் போனோரின் உறவினர்களிடம் சிலர் தம் கைவரிசையைக் காட்டி பெருந்தொகை பணத்தையும் சுருட்டிக்கொண்டு மாயமாக மறைந்தமை குறிப்பிடத்தக்கது. (04-50-224)

## மக்கள் குடியமர்ந்துள்ள அறுகுவெளிப்பகுதியிலுள்ள

# கட்டாக்காலி கால்நடைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் படையினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16

மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட அறுகுவெளிப்பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை ஒரு இடத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க படையினர் நடவடிக்கை எடுப்பதாக 523ஆவது படையணியின் அதிகாரி லெப்.பி.எம்.பி.ரட்ணசிறி தெரிவித்தார்.

மிகவும் கூடுதலாகக் காணப்படும் இந்த மாடுகள் உரிமையாளர்களிடம் சேர்க்கப்படும் எனவும், உரிமையாளர்களற்ற மாடுகளை விவசாயிகளுக்கு வழங்கவும் ஏற்பாடுகள் செய்வதாகவும், எக்காரணம் கொண்டும் அவற்றை இறைச்சிக்காக வெட்ட அனுமதிக்கப்படமாட்டாதெனவும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

விறகு வெட்டுதல், திருட்டுக்கள் இடம்பெறாதவகையில் பதிவு செய்யப்பட்டவர்கள் தவிர ஏனையோரைத் தமது பகுதிக்குள் அனுமதிக்கக் கூடாதெனவும் மக்கள் கேட்டுக் கொண்டனர். (50-111)

# யாழ்.-வவுனியா தனியார் பஸ்களில் அனுமதியின்றி பணம் வசூலிக்கும் தரகர்கள்

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு சேவைக்கட்டணம் என்ற பெயரில் பணம் வசூலிக்கும் தரகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் இவ்வாறு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களின் உரிமையாளர்களிடம் பல்வேறு விதமான தரகர்கள் சேவைக்கட்டணம் என்ற பெயரில் கூடுதலான பணத்தை வசூலிப்பதாகப்பாதிக்கப்பட்ட மினிபஸ் உரிமையாளர்கள் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான போலித்தரகர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு சேவைக் கட்டணமாக தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் 100ரூபா மட்டுமே அறவிடுகிறது. அதற்கான பற்றுச்சீட்டு மினிபஸ் உரிமையாளர்களிடம் உடனடியாக வழங்கப்படுகின்றது.

இது தவிர மேலதிகமாக எந்தவித சேவைக்கட்டணத்தையும் பஸ் உரிமையாளர்கள் எவருக்கும் வழங்க வேண்டாம் என்றும் இது விடயத்தில் பஸ் உரிமையாளர்கள் விழிப்பாக இருக்குமாறும் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-9)

# கல்வி மேம்பாட்டு விழா

கைதடி,ஜன.16

புலம்பெயர் வாழ் கைதடி உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம் நடத்தும் மாபெரும் கல்வி மேம்பாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மண்டபத்திலே நடைபெறவுள்ளது.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத்தின் தலைவர் லயன் தி.வி.செல்லத்துரை தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி எஸ்.ஜமுனாந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக கல்விசார் உத்தியோகத்தர்களும் கௌரவ விருந்தினர்களாக புலம்பெயர்வாழ் உறவுகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில் மாணவர்கள் கௌரவிப்பு, மாணவர் ஊக்குவிப்பு என்பவற்றுடன் நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன. (50 - 288)

# யாழ்.பல்கலை. குமாரசாமி விடுதி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.பல்கலைக்கழக குமாரசாமி ஆண்கள் விடுதி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான உடனடித் தீர்வை வலியுறுத்தி பல்கலைக்கழக வளாக முன்றிலில் நேற்றுக் காலை 8 மணியளவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஆண்கள் விடுதியில் மலசல கூடங்கள் சீராக சுத்திகரிக்கப்பட வேண்டும், மாணவர்களுக்கான தண்ணீர் வசதிகள் சீரான முறையில் ஏற்படுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என். சண்முகலிங்கன் மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதுடன் விடுதியில் வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் உறுதியளித்தார்.

துணைவேந்தரின் உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கலைந்து சென்றனர். (ஒ-9)

# கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம்

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு கணக்காளர்அலுவலகத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. அதனைத் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து அலுவலகநாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நாளை

| | | |
|---|---|---|
| தை 4 | | 17.01.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | | துதியை |
| | | பி.ப. 05.07 வரை |
| நட்சத்திரம்: | | திருவோணம் |
| | | மு.ப. 09.29 வரை |
| சுபநேரம்: | | 09.56-11.05 வரை |
| ராகுகாலம்: | | 05.05-06.35 வரை |

# யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்த சிங்களப்பெண் தொய்வு நோயால் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.16

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணி ஒருவர் திடீரெனத் தொய்வு நோய் ஏற்பட்டதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

மத்துக்கமவைச் சேர்ந்த விஜய குமார ஆராச்சிய விசிநோனா (வயது -62) என்ற பெண் மணியே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

ஏ-9 தரைப்பாதை மக்கள் போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து பெரும் எண்ணிக்கையான தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வருகின்றனர். இந்தவேளையில் நீண்டகாலத்தின் பின் தென்பகுதிச் சுற்றுலாப் பயணி ஒருவர் யாழ்.நகரில் இயற்கை மரணத்தை சம்பவித்து இருப்பது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகின்றது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழங்குநர்களை பதிவு செய்தல்
### வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் 2010ஆம் ஆண்டிற்கு பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 28.01.2010ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

வை.செல்வராசா,
வலயக்கல்வி பணிப்பாளர்,
வடமராட்சி.

தொலைபேசி: 021 226 4162

(சி/564151)

## சனச அபிவிருத்தி வங்கியின் சேவைகள்

சனச அபிவிருத்தி வங்கி யாழ்.நகரில் 19.01.2010 அன்று இல 212, ஸ்ரான்லி வீதியில் கோலாகலமாகத் திறந்து வைப்பதை முன்னிட்டு வாடிக்கையாளருக்கு அரிய பல சேவையினை ஆற்ற உள்ளது.

நிலையான வைப்பு வாடிக்கையாளருக்கு சமன் செய்ய முடியாத வட்டியினை வழங்குகின்றது.

| | |
|---|---|
| 01மாத நிலையான வைப்பு - | 7% |
| 03மாத நிலையான வைப்பு | 8.5% |
| 06மாத நிலையான வைப்பு - | 9.5% |
| 01வருட நிலையான வைப்பு | 10.5% |
| 02வருட நிலையான வைப்பு | 11.5% |
| 03வருட நிலையான வைப்பு - | 12% |
| 04வருட நிலையான வைப்பு - | 12.5% |
| 05வருட நிலையான வைப்பு - | 13% |

அத்துடன் எமது வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் 'வடக்கின் வசந்தம்' செயல்திட்டத்தின் கீழ் வடபகுதியினை அபிவிருத்தி செய்வதற்கான நிதிநிறுவன கட்டமைப்பில் ஒரு பங்காளியாக இணைந்து சுயதொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கி வருவதோடு அரச, அரசசார்பற்ற ஊழியர்களுக்கும் மற்றும் வியாபாரிகள், தனிப்பட்டவர்களுக்கும் கடன்களை வழங்கி வருகின்றது.

அத்துடன் உங்களுடைய அவசர பணத்தேவைகளுக்காக தங்க நகை அடகுச்சேவை மூலம் நீங்கள் 24Kt தங்கப் பவுண் ஒன்றிற்கு ரூபா 27,000.00 வரையான அடகு முற்பணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

★ குறைவான வட்டி ★ கூடுதலான முற்பணத் தொகை
★ விரைவான சேவை ★ உச்ச பாதுகாப்பு

என்பவற்றுடன் தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான வாகன குத்தகை கடன் (Leasing) வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 021 222 1280 (93919)
சனச அபிவிருத்தி வங்கி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியுடைய சுப்பிரமணியம் தங்கமலர் என்பவரின் தே.அ.அட்டையும் (595142822V), இராணுவ அ.அட்டையும் (0902012397) குளப்பிட்டிச் சந்தி ஆனைக்கோட்டை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

## வீடும் காணியும் உடன் விற்பனைக்கு

மருத்துவ பீடத்திற்கு அண்மையில், கொக்குவில் கோணாவளை வீதியில் (கருவப்புலம் வீதி) அமைந்துள்ள 12 பரப்பு காணியும், கல் வீடும், உடனடியாக விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவர்களுக்கு வழங்கப்படும்.

தொடர்பு: பிரபா (கனடா) - 4165629745
பிரபா (சங்கானை) - 0214591811
0213214954, 0776476864

## விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு (காளி கோவில் முன்பாக) பொற்பதி வீதியில் 2 ½ பரப்புக் காணியும், கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் (வன்னியசிங்கம் லேன்) 3 ½ பரப்புக் காணி வீட்டுடனும் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு 077 9938378

## கலாசார மண்டபத்திற்கு இன்று அடிக்கல் நடுகை; நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.16

ஆனைக்கோட்டை வீரமா பிடாரி அம்பாள் ஆலய கலை, கலாசார மண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணி தொடக்கம் 12மணி வரையான வேளையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா கலந்து கொண்டு மண்டபத்திற்கான அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார்.

இந்தச் செய்தி தொடர்பான விளம்பரம் இன்றைய உதயனில் ஆறாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் முன்னர் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அந்த நேரம் இப்போது செய்தியில் குறிப்பிட்டவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஒ-201)

## மட்டுவில் வாசிக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.16

கசிப்பு வைத்திருந்த மட்டுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதி மன்றால் 10ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித்திணைக்களத்தினரால் இந்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் 6மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் அத்துடன் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

(ஒ-207)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 15 ★ 06 ★ 1952
ஆண்டவன் அடியில் 15 ★ 12 ★ 2009

**அமரர் இரத்தினம் ஜெயரட்ணசிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அவனியில் பெருமகனாய்
எம் உள்ளத்தில் நிலை பெற்ற இதய தெய்வமே
எம்மை விட்டுச் சென்றீரோ?
இன்று எம் குடும்பம் தீராத வேதனையால்
துடிக்குதையா!
இப் புவியில் நாம் உள்ளவரை எம்
உள்ளத்தில் என்றும் அழியாது
நிலைத்திருப்பீர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(93907)

173, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்,
மனைவி, மக்கள், சகோதர சகோதரி, மைத்துனர்கள்.

## 33 ஆம் நாள் நினைவில்



மண்ணில் 30 ★ 04 ★ 1966
விண்ணில் 15 ★ 12 ★ 2009

**அமரர் தில்லையன் சிவக்கொடி (கட்டி)**


கடந்த 15.12.2009 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் மறைவு கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மரணச்சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (16.01.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
(91027) அண்ணா சிலையடி, கரணவாய், கரவெட்டி.

## மரண அறிவித்தல்

### நாகர் ஆறுமுகம் (J.P)

(கரன் உள்நாட்டு, வெளிநாட்டு மதுபான விற்பனைநிலைய உரிமையாளரும், பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதி, இணுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகர் ஆறுமுகம் 13.01.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகன் - தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சறோஜினி தேவி, ரஞ்சினிதேவி, ராஜினி தேவி (டென்மார்க்), யோகினி தேவி (ஜேர்மனி), ஸ்ரீதரன் (பிரான்ஸ்), கெங்காதேவி, கெங்காகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தேவரத்தினம் (லங்கா சிமெந்து தொழிற்சாலை), அற்புதசிகாமணி (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), திருநாவுக்கரசு, கங்கேஸ்வரன், தாரணி, சகாதேவன், சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஷா, சிறோம், சரளா, கௌரீஷன், செந்தூரன், அருண், சதீஸ், அனோஜா, றொமினா, அனுஷ்ரன், அரவிந்த், அக்ஷயன், ஆரவி, அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
இணுவில் - 021 222 5716
சிறீதரன் - 00331 48953236
திருநாவுக்கரசு - 0045 97852334
கங்கேஸ்வரன் - 0049 283198367
கெங்காதரன் - 0047 21960838

பாரதி வீதி,
இணுவில்.

(93819)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கந்தசாமி (செல்லம்மா ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியர்)



சுழிபுரம் பறாளாய் வீதியைச் சேர்ந்த செல்லம்மா ரீச்சர் 08.01.2010 அதிகாலை சிலாபத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (பிரதம எழுது வினைஞர்)யின் மனைவியும், சந்திரா (சிலாபம்), இரஞ்சனி (அவுஸ்திரேலியா), மோகன் (அவுஸ்திரேலியா), தாசன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகலிங்கம், கணேசராஜா, கௌரி, கஜேந்திரராணி (வசந்தி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தியாகேஷன், ராகுலன், ஷர்மிலா, நிவேதன், மிதுன், சரண் ஆகியோரின் அன்புப் பாட்டியும், நாகம்மா ரீச்சர் காலஞ்சென்ற இரத்தினவேல் (A.G.A) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09.01.2010 மாதம்பை இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி சந்திரவதனி தியாகலிங்கம் 011 2366084
க.குகதாசன் 021 2223853
(சி/563794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கு மாகாண சபைக்குத் தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசிய பின்பே தீர்வுத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்

## அதற்குமுன் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டுவிடும் என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண

## சரத்பொன்சேகா விடுகின்ற அறிக்கைகள் ஒருவிதம்; அவரை ஆதரிக்கின்ற கட்சிகள் விடுகின்ற அறிக்கைகளோ இன்னொருவிதம்

## மகிந்த மீண்டும் ஜனாதிபதியானால் நாட்டைப் பொருளாதாரத்தில் மேம்படுத்துவதற்கு உரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படும்

நேர்காணல்:
-துருவியன்-



வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசிய பின்பே இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

அத்துடன் சகல இனமக்களும் சம உரிமைகளோடு வாழ்வதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்புச் சட்டமொன்றும் உருவாக்கப்படும்.

- இவ்வாறு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சரும் சர்வகட்சிகளின் பிரதிநிதிகளின் தெரிவுக்குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண நேற்று யாழ்.வந்திருந்தபோது உதயனுக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் குறிப்பிட்டார்.

அந்தப் பிரத்தியேகச் செவ்வியின் முழுவடிவமும் வருமாறு:

*கேள்வி: அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் தெரிவுக்குழுவின் முயற்சிகள் எந்த அளவில் உள்ளன?*

பதில்: அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அமர்வுகளில் அங்கம் வகித்த 18 கட்சிகள் இணக்கம் கண்ட விடயங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட ஆவணம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. அதன் பிரதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

அந்த ஆவணத்தை ஆராய காலஅவகாசம் தேவை என்றும் அதை ஆராய்ந்த பின்னர் அடுத்த கட்டத்தைப் பற்றி முடிவு செய்வோம் என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் இது விடயத்தை ஆராய்வதென முடிவு செய்யப்பட்டுள் ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவுக்குழுவின் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

நான் கையளித்த ஆவணத்தை ஜனாதிபதி ஆராய்ந்தபின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி ஆகியவற்றுடன் கலந்துரையாடி இணக்கத்தை ஏற்படுத்ததும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

### நின்று நிலைக்கும் வகையில் தீர்வு

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தி, அத்தேர்தலில் வெற்றிபெறுபவர்களுடன் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மாகாணசபையை நிர்வகிக்கப் போகும் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிக்கொண்டு வரப்படும் தீர்வே நின்று நீடிக்கும் வகையில் அமையும்.

*கேள்வி: ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த ஆவணத்தில் எந்தவகையான யோசனைகள் அடங்கியிருக்கின்றன?*

பதில்: ஆவணத்தில் இடம்பெற்ற முழு விவரத்தையும் வெளியிட முடியாது. தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்குபற்றியவர்கள் இணக்கம் கண்ட விட்யங்கள் அந்த ஆவணத்தில் இடம் பெற்றுள்ளன.

மத்திய அரசுக் கும்- மாகாணத்துக்கும் இடையில் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பான முடிவுகள் அந்த ஆவணத்தில் உள்ளன. இணைப்பிரதி இன்றி அதிகாரங்கள் பகிரப்படும். அதிகாரப் பகிர்வு மாகாண மட்டத்தில் மட்டும் நிற்காது, மாவட்ட, கிராம மட்டத்திலும் இடம்பெறும். கிராம மட்டக்குழுக்கள் மீண்டும் அமைக்கப்படும். ஜனாதிபதி இந்த ஆவணத்தை ஏற்றுள்ளார்.

அதிகாரப் பகிர்வுடன் செனட் சபை ஒன்று உருவாக்க வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறோம். சகல இன மக்களின் பிரதிநிதிகளும் இந்தச் சபைக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

### தேர்தலில் மறுசீரமைப்பு

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பாகவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. தொகுதி அடிப்படையில் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வசதி செய்யப்படும். அதன் அடிப்படையில் தேர்தல் முறை மறுசீரமைப்புச் செய்யப்படும். ஏற்கனவே நடைமுறையில் இருந்த தேர்தல் தொகுதி முறையில் நாடாளுமன்றத்துக்கு, விரும்பிய வேட்பாளரைத் தெரிவு செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதுவும் ஜனாதிப்தியால் ஏற்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு ஏற்ற சிபார்சுகளை நாம் செய்துள்ளோம். பிரச்சினைக்குரிய விடயங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக, அமர்வுகளில் கலந்துகொண்ட கட்சிகளின் ஆலோசனைகளும் யோசனைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. அவற்றை ஜனாதிபதியும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் ஏற்பார்கள் என நம்புகிறோம்.

*கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.கட்சி தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்குபற்றவில்லை. அவர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுக்கள் நடத்துவீர்களா?*

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நான் அழைத்திருந்தேன். ஆரம் பத்தில் அல்ல. தெரிவுக்குழுவின் பணி அரைவாசி பூர்த்தியான நிலையில் அழைப்பு விடுத்தேன். அந்த நேரத்தில் கூட்டத்தில் சமுகமளிக்க முடியாது என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறிவிட்டார்.

அந்தநேரத்தில் விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கும் நிலை காணப்பட்டது. தற்சமயம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு என்ற நிலை முடிவுக்கு வந்துவிட்டது.

நாங்கள் அழைத்தால் கூட்டமைப்பினர் நிச்சயம் பேச்சில் கலந்துகொள்வர். அவர்களுடன் உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை தற்போது நடத்திவருகி றோம். அவர்கள் உத்தியோகபூர்வ பேச்சுக் களில் பங்குபற்றுவார்கள் என நம்புகி றோம்.

*கேள்வி: ஐ.தே.கட்சியின் பங்கு எவ்வாறு அமையும்?*

பதில்: ஐ.தே.கட்சி தெரிவுக்குழுவின் ஆரம்பகால அமர்வுகளில் பங்குபற்றினார்கள். கருஜெயசூரியவுடன் அவரது சகாக்கள் அரசுடன் இணைந்ததுடன் அவர்கள் அமர்வுகளைப் புறக்கணித்தனர். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். தெரிவுக்குழு அமர்வுகளில் பங்குபற்றுவோம் என அவர்கள் பகிரங்கமாக அறிவித்துள்ளனர். அவர்கள் எதிர்கால அமர்வுகளில் பங்குபற்றுவார்கள் என நம்புகிறேன்.

*கேள்வி: ஜே.வி.பி, ஹெலஉறுமய ஆகியவற்றின் நிலைப்பாடு.....?*

பதில்: ஜே.வி.பி ஆரம்பத்திலேயே தெரிவுக்குழு அமர்வை பகிஷ்கரித்தது. அமர்வில் பங்குபற்றி வந்த ஹெல உறுமயவும் அமர்வை பகிர்ந்தது. இந்தத் தெரிவுக்குழுவின் பணியில் பங்கேற்க அவர்கள் அச்சம் கொண் டுள்ளார்கள் என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர், பொது ஆவணத்தில் அவர்களின் கருத்துகளை இடம்பெறச் செய்ய முயற்சிப்பேன்.

### தீர்வுத்திட்டத்தில் சேர்க்க முடியாதவை

தீர்வுத் திட்டத்தில் என்ன விடயத்தை சேர்க்கவேண்டும், என்ன விடயத்தை விடவேண்டும் என்பது குறித்து நாங்கள் முடிவு செய்வோம். ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகியவற்றின் கருத்துக்கள் தீர்வுத் திட்டத்துக்குள் புகுத்த முடியாதவை. அவர்களை இந்தக் கட்டத்தில் உள்ளே அனுமதித்தால், முழுத்திட்டமும் இல்லாமல் போய்விடும். கடைசிக் கட்டத்தில் அவர்களின் கருத்து சேர்க்கப்படும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ.தே. கட்சியும் ஒன்றாக ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்களானால், எந்தக் கட்சியின் அரசு வந்தாலும் தமிழருக்கான தீர்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தக் கூடிய சூழல் உருவாகும்.

இந்த நாட்டில் இவ்விருகட்சிகளே மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற வரலாறு தொடர்வதால், இருகட்சிகளும் தமிழருக்கான தீர்வு விடயத்தில் இணக்கப்பாடு கண்டால் தமிழர் விவகாரப் பிரச்சினைக்கு எந்தக் காலத்திலும் சிக்கல் ஏற்படாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

*கேள்வி:- ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வி கண்டால் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் நிலை எவ்வாறு இருக்கும்?*

பதில்:- பொன்சேகா வெற்றி பெற்றால் என்ன நடக்கும் என இப்போது கூறமுடியாது. காரணம், பொன்சேகா ஒரு விதமாக அறிக்கைகள் விடுகிறார். அவருக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளின் தலைவர்கள் வேறு விதமாக அறிக்கைகளை விடுகிறார்கள்.

பொன்சேகாவும் அவரது ஆதரவுக் கட்சித் தலைவர்களும் என்ன செய்யப் போகிறார்கள் என்று இப்போது எதுவும் கூறமுடியாது.

பொன்சேகா தெரிவு செய்யப்பட்டாலும், ஜனாதிபதி ஒழிப்போ அல் லது தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதோ அல்லது அரசமைப்பை மாற்றுவதோ முடியாது. அவை எல்லாம் நாடாளுமன்றத்தின்கைகளிலேயே இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் இவற்றில் எதையும் செய்ய முடி யாது.

### என்ன நடக்குமென்று எவருக்கும் தெரியாது

ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்த அணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றால் மட்டுமே பொன்சேகாவால் எதையும் செய்யமுடியும். ஆனால் அந்தக்கட்சிகளுக்கு இடையே பல வேறுபாடுகள் உண்டு. இந்நிலையில் யாருக்குத்தெரியும் என்ன நடக்கப் போகின்றது என்று. பொன்சேகா வந்தால் என்ன நடக்கும் என இப்போது கூறமுடியாது. எதிரணியில் உள்ள கட்சிகளின் கொள்கைகள் வேறுபாடாக இருப்பதால், பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்கம் அமையுமா என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கின்றது. அப்படியான நிலையில் காபந்து அரசு ஒன்று தேவைப்படும் நிலை தோன்றலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி காபந்து அரசாங்கத்தைப் பொறுப்பேற்று இராணுவ ஆட்சியைப் பின்னர் தொடர வாய்ப்பு உண்டு. முழு இராணுவ, பொலிஸ் அதிகாரமும் அவரிடமே இருக்கப் போகின்றது. இராணுவத்தின் தலைவராக முன்பு இருந்ததைப் போல அன்றி முழுப்படைகளும் அவர் வசமேயிருக்கப் போகின்றது. இப்படியான சிக்கலான சூழல் வரலாம்.

*கேள்வி: ஜனாதிபதி மஹிந்த வெற்றி பெற்றால் அனைத்துக்கட்சிக்குழுவின் யோசனை நடைமுறைக்கு வரும் எனக் கூறுகிறீர்களா?*

பதில்: ஆம்! அவர் முன்பே தெரிவித்துவிட்டார். அவர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அவர் இதைக் கூறிவிட்டார்.

*கேள்வி:- ஜனாதிபதி வென்றால், ஏதாவது கால அட்டவணை முன்வைக்கப்படுமா? தீர்வுத்திட்டம் இத்தனை மாதத்துக்குள் முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுமா?*

பதில்:- கால அட்டவணை முன்வைக்கப்படமாட்டாது. ஆனால் முன்னுரிமை வழங்கப்படும்.

### சகல மக்களுக்கும் சம உரிமை

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் ஆகிய சமூகங்களைக் கொண்ட இலங் கைத் தேசத்தில் சமாதானத்தைக் கொண்டு வந்து நாட்டை பொருளாதார வளமாக்க முயற்சி எடுப்போம்.

எல்லா மக்களும் சம உரிமையுடன், சமவசதிகளுடன் வாழ்வதற்காக வழி ஏற்படுத்தப்படும். அத்தகைய நிலையைத் தோற்றுவிக்க புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும். அதில் சகலரின் உரிமைகள், வசதிகள் உறுதி செய்யப்படும்.

*கேள்வி:- விடுதலைப்புலிகளை தோற்கடித்து, யுத்தத்தில் வென்றவுடன் தீர்வுத்திட்டத்தை முன் வைப்பேன் என ஜனாதிபதி அறிவித்திருந்தார். யுத்தம் முடிந்து எட்டு மாதங்களாகியும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படாததால், ஜனாதிபதி மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் எனக் கூறப்படுவது பற்றி...?*

பதில்:- ஜனாதிபதி தனது சொந்த யோசனைகளை உடன் முன்வைப்பதாகவே கூறினார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் யோசனைகளைப் பெற்று அவற்றின் அடிப்படையிலும் தான் முன்வைத்த யோசனையின் அடிப்படையிலும் தீர்வை முன்வைக்கவே ஜனாதிபதி விரும்பியுள்ளார்.

2008 ஆம் ஆண்டில் அவருக்கு அழுத்தங்கள் வந்தன. விரைவாக யோசனைகளை முன்வைக்குமாறு எனக்குக்கூட அவர் அழுத்தம் தந்தார்.

எங்கள் ஆலோசனைகள் முடிவடையவில்லை. இதன் காரணமாக தீர்வு யோசனையை முன்வைக்க முடியாது என்று ஜனாதிபதியிடம் கூறிவிட்டேன். (ப-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைக்கோட்டை வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தான "கலை கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்

காலம்: 16.01.2010 இன்று சனிக்கிழமை.
இடம்: வீரமாபிடாரி அம்பாள் ஆலயம், ஆனைக்கோட்டை.

அடிக்கல் நாட்டுதல்: திரு.இ.புஸ்பராசா தலைமையில் சமூக சேவைகள், சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களால் இன்று 16.01.2010 காலை 9 மணிமுதல் 10 மணிவரையும் உள்ள சுபமுகூர்த்த வேளையில் கலை கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெறவுள்ளது.

அம்பிகை அடியார்கள் அனைவரும் வந்து இவ்வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(சி/564138) நிர்வாக சபை.

"ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக"

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னைமடியில் 1994 09 11



இறைவனடியில் 2009 01 27

**செல்வன் இளங்கோவன் நிதர்சன்**
(பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன்)
திதி:- 16.01.2010 (பூர்வபக்ஷ பிரதமை)

**"எங்கள் அன்புச் செல்வனின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாள் துணை புரியட்டும்"**

ஆண்டு ஒன்று போனதுவோ
ஆருயிரே உனைப் பிரிந்து
கண்டுகொள்ள ஏங்குகின்றோம்
கண்ணெதிரே வாராயோ
பதினைந்து வயதினிலே
பரிதவிக்க எம்மை விட்டு
சதி செய்து பிரித்து விட்டான்
ஈரமில்லாக் காலனவன்
கெதியேதுமில்லாது நாமெல்லாம்
உருக்குலைந்து போனோமே
விதியே இது தானோ என்றெண்ணி
பேதலித்து நிற்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும் - அப்பா, அம்மா, தம்பிமார், அன்புத் தங்கை, பேரன், பேத்திமார், உற்றார், உறவினர்.
இல : 7, பிறேசர் அவனியு, தெகிவளை.


## ஜயோதா
### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701163652 முதல் 701178245 வரை. சீட்டிழுப்பு இல. 614 திகதி 14-01-2010

வெற்றி எண்கள்
04 06 25 43 A (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,003,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,003,650/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 293 | 1,000/= | 293,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 504 | 1,000/= | 504,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12,329 | 60/= | 739,740/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5,833 | 40/= | 233,320/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 145,185 | 20/= | 2,903,700/= |
| | | மொத்தம் ரூ. 5,111,760/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - E.P.K. கொலொன்னே - பதுளை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - J.K. சுரங்கி - அக்குரஸ்ஸை.

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பதுளை | 701171630-6-19 |
| களுத்துறை | 701168556-3-13 |
| கண்டி | 701172876-4-23 |
| கொழும்பு | 701177321-5-15 |
| திருகோணமலை | 701174985-1-18 |
| மட்டக்களப்பு | 701174023-0-23 |
| காலி | 701173349-3-17 |
| பொலன்னறுவை | 701165293-4-00 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 5,511,760/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 11,396,500/=

தொடர் இல. 601187647 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 18 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் குருந்தடிப் பிள்ளையார் கோயிலடியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774372463, 0773400918, 0776991051, 0213001692 (93906)

## தவறிவிட்டது

33, பிரம்படி ஒழுங்கை கொக்குவில் முகவரியையுடைய நற்குணராசா அகிலன் என்பவரது தே.அ.அ (750891985V), தொழில் அ.அ, மோட்டார் வாகன அனுமதி அட்டை, இராணுவ அ.அ என்பன சாவகச்சேரிக்கும், மீசாலை புத்தூர்ச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: ந.அகிலன், மீசாலை வடக்கு, கொடிகாமம் தொ.பே: 0774952024 (93911)

## கார் விற்பனைக்கு

Hyundai matrix Full option wp-JT xxxx இலக்கமுடைய நல்ல பாவனையிலுள்ள கார் விற்பனைக்குள்ளது.
(93900) தொடர்புக்கு: 0773580778

## அரங்கேற்ற நிகழ்வு

திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் நடன மாணவியான தர்மதேவன் பாதுஜாவின் நடன அரங்கேற்ற நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (04)

## மொழி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிவகுப்புக்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. க.பொ.த பரீட்சைக்குத் தோற்றியோரும், தொழில் புரிவோரும் இக்கற்கை நெறியில் சேரமுடியும். க.பொ.த பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான பிரத்தியேக வகுப்புக்களும் பட்டப்படிப்புக்குமான தமிழ், ஆங்கில வகுப்புக்களும் நடைபெறவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு செயலாளர், கீழைத்தேயகல்விக் கல்லூரி, 223 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். அல்லது சங்கத் தலைவர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருடனோ தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்.

## கரப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.மாவட்டகரப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கரப்பந்தாட்டச்சங்கத்தில் இணைந்துள்ள கழகங்களின் இரண்டு பிரதிநிகளை பொதுக்கூட்டத்துக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் எஸ்.மனோகரன் கேட்டுள்ளார். (50-23)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஜன.16

1999இல் நியமனம் பெற்ற பட்டதாரி அலுவலர்களான பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், மருத்துவ ஆவண உதவியாளர்கள், திட்டமிடல் உதவியாளர்கள் ஆகியோருக்கான வாய்மொழி பரீட்சை - எழுத்துப்பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இதில் 47 பரீட்சார்த்திகள் வடமாகாணத்தில் தோற்றியிருந்தனர்.

இவர்களில் எழுத்துப் பரீட்சையில் 39 பேரும், வாய்மொழிப் பரீட்சையில் 13 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

வாய்மொழி மற்றும் எழுத்துப்பரீட்சை ஆகிய இரண்டு பரீட்சைகளிலும் 13 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50-302)

## கால் கோள்விழா

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையின் கால்கோள்விழா நாளைமறுதினம் 18ஆம் திகதி பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சிக் கல்விவலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.சிறிஸ்கந்தராஜா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை பாடசாலையின் [illegible] அதிபர் எஸ்.பத்மநாதனும் வழங்குவர். (04)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை



மூர்த்தி வீதி, தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறையை நிரந்தர வதிவிடமாகவும், குமரகோட்டம் கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை (13.01.2010) அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ரஞ்சிதமலர் (கனடா), சந்திரமலர், பிரேமதாசன் (ஆசிரியர்), நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ரவீந்திரநாதன், சகிலா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா மற்றும் திருமதி மாணிக்கவாசகர் விசாலாட்சி, தம்பிராசா (ஓய்வு பெற்ற பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரியும், சறோஜாவின் மைத்துனியும், திருமதி சிறிதரன் றெஜினா, திருமதி ஈசன் செல்வி, திருமதி விஜயகுமார் லோஜினி, மதீசன், தீபன், சஜீவன், வாசுகி, சயந்தன், சரண்யா, கஜேந்தினி, டிலக்சன் ஆகியோரின் பேர்த்தியும், மல்லிகாதேவி, சிறினிவாசன், ஜெனீந்தா, ரஜனி, ஜெகநாதன் (நியூசிலாந்து), பவநேசன் (T.A) ஆகியோரின் பெரிய தாயும், தனுஜா (லண்டன்), சலூஜா (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும், பிரகாஸ், பிரியங்கா, யவர்னா, திலக்சனா ஆகியோரின் பூட்டியுமாவார்

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (17.01.2010) பி.ப 2 மணியளவில் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம், கோண்டாவில். (93913) தகவல்: க.பிறேமதாசன்

### திலகவதி துரைராஜா

மட்டுவில் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும், திருநெல்வேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திலகவதி துரைராஜா நேற்று (15.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி- அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும், சச்சிதானந்தம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் திருச்செல்வம், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் சீதாலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தன் (காப்பாளர், இ.போ.ச, பருத்தித்துறை), அருந்ததி (ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), காஞ்சனா (ஆசிரியை, யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), மயூரதி (ஆசிரியை, யா/செங்குந்தா இந்துக்கல்லூரி) ஆகியோரின் தாயாரும், சிவஞானம்மா (திக்கம்), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், விகாஷின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.01.2010) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.137, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (93914) தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

### நல்லதம்பி நாகம்மா (குரும்பசிட்டி கிழக்கு)



குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நாகம்மா (14.01.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-விசாளாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கஜேந்திரன், தங்கராணி மற்றும் தங்கரத்தினம், தங்கமணி, தங்கமலர், தருமராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம் காலஞ்சென்ற மாதகமணி மற்றும், பற்மநாதன், உதயன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16.01.2010 சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு ஏழாலை யிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிலா உதயன் போட்டா, களவோடை, ஏழாலை தெற்கு. (93910) தகவல்: குடும்பத்தினர்.

### மருதைனார் பசுபதிப்பிள்ளை



வேலணை 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மருதைனார் பசுபதிப்பிள்ளை அவர்கள் 14.01.2010 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்மாவின் (கனடா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா (காந்தி), ராசேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி (ஜேர்மனி) காலஞ்சென்ற சிவலோக நாதன் மற்றும் கலைமகள் (யாழ்ப்பாணம்), விமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசேஸ்வரி (கனடா), திருப்பதி சிவம் (கனடா), அம்பலவாணர் (ஜேர்மனி), சிவகாமஈஸ்வரி (கனடா), கருணாநிதி (ஆனந்தி-யாழ்ப்பாணம்), கணேஷ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

193/3 அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.No: 0214590390
CANADA T.P .No: 0014162876269
(99896)
தகவல்: வே.கருணாநிதி (ஆனந்தி-மருமகன்) க.கலைமகள் (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனங்கிளப்புச் சந்தியிலிருந்து அறுகுவெளி வரையான 640 ஏக்கர் விவசாய நிலங்கள் மக்களிடம் கையளிப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்

நல்லூர், ஜன.16

தென்மராட்சி, தனங்கிளப்புச் சந்தியில் இருந்து சங்குப்பிட்டி வீதியில் அறுகு வெளிப்பகுதிவரை சுமார் 640 ஏக்கர் விவசாய நிலங்கள் நேற்று அந்தப்பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு மேற் படி விவசாய நிலங்களைக் கையளித்தார்.

அறுகுவெளிப் பகுதியில் உள்ள மக்கள் தமது காணிகளில் உடனடியாகவே மீளக் குடியமர முடியும் எனவும், நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டது போன்ற உதவிகள் இவர்களுக்கும் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்ட அமைச்சர், முன்னதாக இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தனங்கிளப்பு கிராம அலுவலரிடம் தமது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

பதிவுகளை மேற்கொண்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பதால் இந்தப் பகுதியில் மீள் குடியமரவுள்ளவர்கள் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், பதிவு செய்தவர்களே மீள் குடியமர்வுக்கான உதவிகளைப் பெறத்தகுதியுடையவர்கள் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

மீளக் குடியமர்பவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கான அனுமதி மீளக்குடியேறிய பின்னர் வழங்கப்படும் எனவும் இதற்கான நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அதிகாரிகள் வழங்குவார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் ஏற்கனவே 400 குடும்பங்கள் வசித்துவந்துள்ளன. தற்சமயம் 250 குடும்பங்கள் வரை மீளக் குடியமரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் தமக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் மற்றும் மின்சாரம், குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக் கொண்டனர். இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முதலில் மீள் குடியமர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தேவைகள் விரைவில் நிறைவேற்ற உதவுவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் 523 ஆவது பிரிகேட் லெப்டினன்ட் பி.எம்.பி.ரட்ணசிறி உட்பட படையினரும் பெருந்தொகையான மக்களும் கலந்து கொண்டனர். (50-111)

### குப்பைகள் குவிக்கப்படுவதால் மக்கள் போக்குவரத்தில் சிரமம்

நவாலி, ஜன.16

நவாலிக் கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஏனைய சில பகுதிகளிலும் இலகு வேலைத்திட்டத்தின்கீழ் வீதிகள் துப்புரவு செய்யப்படும்போது அதிலிருந்துவரும் குப்பைகள் வீதியோரக் குடியிருப்பாளர்களின் வீட்டுவாசலுக்கெதிரே குவித்து விடப்படுவதால் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட வேலையின் குப்பைகள் இதுவரை அள்ளப்படவில்லை. இவற்றுடன் தற்போதைய வேலைத்திட்டத்தின் போதும் கழிவுகள் வெட்டிக் குவிக்கப்பட்டுள்ளதால் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஏனைய சில கிராம சேவையாளர் பிரிவுகளில் அந்தந்த இடங்களிலேயே இந்தக் குப்பைகள், குழிகள் வெட்டிப் புதைத்து வருகின்றதைக் காண முடிகின்றது. (50-100)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு தென்பகுதியிலிருந்து 20 தாதியர்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்கு தென்பகுதியிலிருந்து 20 தாதியர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தத் தாதியர்கள் போதனா வைத்தியசாலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வைத்தியசாலையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்தே இந்தத் தாதியர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை டெங்குநோய் மற்றும் சாதாரண காய்ச்சல் போன்றவற்றால் தினமும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. (50-224)

# டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மாவட்ட, பிரதேச,கிராமிய மட்டங்களில் குழுக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்.மாவட்டத்தில் தீவிரமாகப் பரவி வரும் டெங்குநோய் பரம்பலை கட்டுப்படுத்த அரச அதிபர் தலைமையில் மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டங்களில் டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் உள்ள சகல தரப்புக்களையும் உள்வாங்கி இத்திட்டத்தை வெற்கரமாக நடத்தி டெங்குநோய்த் தாக்கத்தை விரைவில் இல்லாது ஒழிப்பதே இத் திட்டத்தின் நோக்கம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்ட டெங்கு கட்டுபாட்டு குழுவின் தலைவராக அரச அதிபரும், செயலாளராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இருப்பார்கள்.

உறுப்பினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மேலதிக மாகாணக்கல்வி பணிப் பாளர், தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்கள் அங்கம் வகிப்பார்கள். இதேபோன்று பிரதேச மட்ட, கிராம மட்டடெங்கு கட்டுப்பாட்டு குழுக்களும் அமைக்கப்படவுள்ளன. (50-302-9)

### தீவக லயன்ஸ் ஏற்பாட்டில் சேவைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சேவைத்திட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு சர்வோதய தொண்டர் திருநாவுக்கரசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் பொது மருத்துவ பரிசோதனையும் மருந்து வழங்கலும், கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கல், மரக்கன்று நடுகை, விழிப்புணர்வுக் கருத்தரங்கு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பரிசோதனையும் ஆலோசனை வழங்கலும், சிறுவர்களுக்கான சத்துணவுப் பொருள்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (50-204)

# தேசிய கராத்தே போட்டியில் ஆழிக்குமரன் முதலிடம் பெற்றார்

யாழ்ப்பாணம், ஜன.16



கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சிறுவர்களுக்கான தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் 12 வயதின் கீழ் உள்ளவர்களுக்கான போட்டியில் இன்பசிட்டியைச் சேர்ந்த ஈ. ஆழிக்குமரன் முதலாம் இடம்பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். இவர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவனும், பருத்தித்துறை தற்காப்புக் கலையகப் பிரதம ஆசிரியர் மா.இரத்தினசோதி (5ஆவது கறுப்புப்பட்டி-யப்பான், லண்டன்), எஸ்.சந்திரமோகன் (2ஆவது கறுப்புப்பட்டி) ஆகியோரின் மாணவனும் ஆவார்.

இப்போட்டிகள் சிறிலங்கா விளையாட்டு அமைச்சின் சிறிலங்கா கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்டன. (50)

### நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி

நலன்புரி நிலையங்களிலிருந்து வந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை லண்டன் ஸ்ரீகனக துர்க்கா ஆலயத்தின் சார்பில் நிதிஉதவிகள் வழங்கப்படவுள்ளதாக ஸ்ரீகனக துர்க்கா அம்மன்ஆலய இணை அமைப்பாளர் கலாநிதி அப்பையா தேவசகாயம் தெரிவித்தார்.

281 மாணவர்கள் வரை இந்த நிதி உதவியைப் பெற்றுக்கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும். (50-111)

### விபத்தில் வயோதிபர் பலி

நவாலி, ஜன.16

ஆனைக்கோட்டையில் கடந்த செவ்வாய்க்கிழமை சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான அதே இடத்தைச் சேர்ந்த க.கணேசமூர்த்தி (வயது-85) என்பவர் தமது வீட்டிற்குச் சமீபமாக வந்துகொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அங்கு மரணமானார். (50-100)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் குடாநாட்டில் நேற்று முன்தினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் இந்த வாக்காளர் அட்டைகள் விநியோகித்து முடிக்கப்படும் என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்களுக்கு தபாலகத்தில் உள்ள விசேட கருமபீடத்தில் வைத்து அவற்றை விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (50-224)

### கிரிக்கெட் பயிற்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.16

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மகளிர் கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி இன்று காலை 9 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்ட அனைத்து வீராங்கனைகளையும் தவறாது பயிற்சிக்குச் சமுகமளிக்குமாறு பயிற்றுவிப்பாளர் வி.கே.சண்முகலிங்கம் கேட்டுள்ளார். (50-23)

### டெங்கு ஒழிப்புக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டத்தினை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தினை யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சிச் சபைகளின் ஊடாக நடைமுறைப்படுத்த ஒரு மில்லியன் ரூபாவை ஆளுநர் ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-302)



524 ஆவது படையணி நடத்திய பொங்கல்விழா நேற்றுமுன்தினம் வடமராட்சி மாலிசந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது.
இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 52 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க மங்கள விளக்கை ஏற்றுவதை முதல் படத்திலும், போட்டியில் வெற்றியீட்டிய ஒருவருக்குப் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும், இந்த விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



தடை, தாமதமின்றி சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். நீண்ட நாள் பிரச்சினை ஒன்று இன்று நல்லவிதமாக முடிவிற்கு வரும். வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும். விருந்து, விசேஷங்களால் மகிழ்ச்சி, உற்சாகம் பெறுவீர்கள். பெண்கள் தரப்பில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம்.

### இடபம்



எதிர்பார்த்த ஒன்று நடப்பது தள்ளிப் போகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சுபகாரிய விடயங்களில் திருப்பங்களைக் காணலாம். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைப்பீர்கள். சில விஷயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். கனவுத் தொல்லையுண்டு.

### மிதுனம்



எதிலும் விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். உடல்நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருக்கு அவசரப்பட்டு வாக்குக் கொடுத்துவிட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். மறதியால் அவதியுண்டு.

### கடகம்



காலை நேரத்தில் மனதிற்கு சந்தோஷம் தரும் அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் உருவான மனக்குழப்பங்கள் தீரும். தாய் வழியில் உதவிகள் கிடைக்கும். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள்.

### சிங்கம்



எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்ப உறுப்பினர்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உறவினர் ஒருவருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்து பெருமை அடைவீர்கள்.

### கன்னி



காரியங்கள் விரைவாக நடைபெற முன்யோசனையுடன் செயல்பட வேண்டும். சில வேலைகளை முடிக்க வெளியிடங்களில் காத்திருக்கலாம். அரசியல்வாதிகள் திடீர் வெளியூர் பயணங்களால் அலைச்சல்களுக்குட்படலாம். ஒரு விடயம் பற்றி பெரிய அளவில் மனக் கோட்டை கட்டுவீர்கள்.

### துலாம்



உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மாலை நேரத்தில் முக்கியமான செய்தி ஒன்றைக் கேட்கலாம். நடக்காதது போல தோன்றிய காரியம் ஒன்று திடீரென நடந்து விடலாம்.

### விருச்சிகம்



சுறுசுறுப்பு, உற்சாகமாக செயல்படும் நாள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்ல விதமாக முடிவிற்கு வரும். பெரிய பிரச்சினையாகி விடுமோ எனப் பயந்த விடயம் ஒன்று சுமூகமாக முடிவுக்கு வரும். வெற்றிச் செய்தி கேட்கலாம்.

### தனுசு



பொதுவாழ்வில் உள்ளோர் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். சிலரின் ஏச்சு, பழிப்பேச்சுக்களை எதிர்கொள்ளலாம். இதுவரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிகளுக்கு உட்படலாம். மாணவர்கள் கல்வியில் அதிக நாட்டம் காட்டுவர். காதலர்களுக்கிடையே மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

### மகரம்



நிதி நிலைமையில் மேம்பாடு காண்பீர்கள். என்றோ நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்று திடீரென நடக்கலாம். பழைய சம்பவங்களை அசை போட்டுப் பார்ப்பீர்கள். சிலருக்கு பணம் கைமாற்றாகக் கொடுப்பீர்கள். குடும்ப உறுப்பினர் ஒருவரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாட்டால் எரிச்சல் அடையலாம்.

### கும்பம்



கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். வாகனங்களால் செலவு ஏற்படும். எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் ஏமாற்றம் அடையலாம்.

### மீனம்



சுபச் செய்திகளைக் கேட்கலாம். நண்பர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். அயலாரிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடிவரலாம். உறவினர்களுடன் வெளியிடங்களுக்கு செல்லலாம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 07 . 04 . 1932



மறைவு 18 . 12 . 2009

அமரர்
**பஞ்சரட்ணேஸ்வரி சிவசுப்பிரமணியம்**

கடந்த 18.12.2009 வெள்ளிக்கிழமை அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் பங்கு கொண்டோர், துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (16.01.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சகுந்தலம்"
மயிலணி வீதி, சுன்னாகம்.
தொ. பே: 0212240605, 021321.8007

குடும்பத்தினர்.
(93394)

## காணி, வீடு விற்பனைக்கு

இருகாணிகள் வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தேவாலய வீதி, சாவகச்சேரி.
தொடர்பு கொள்ள :- செ. கிருஸ்ணகுமார்
விதானை வளவு,
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
தொ.பே: 077 2338084, 021 222 7802

## காணி, வீடு விற்பனைக்கு

உரும்பிராய், சிவன் வீதியில் 7 பரப்புக் காணி சுற்றுமதில், கிணறுடன் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. அத்துடன் பலாலி வீதி, மடத்தடி உரும்பிராயில் 30 பரப்புத் தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு.
குறிப்பு - தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு : 0773164399

## விற்பனைக்கு

புதிய 6'நீள Tution மேசை, வாங்குகள் -3250/=, Sony T.V 20" 12000/=, புத்தக அலுமாரி-2000/=, Screen stand 2000/=, விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0777959991

## விற்பனைக்கு

Concise English Grammar and Vocabulary
T.P. 0776624455
விலை: ரூபா 250.00
கல்லூரி அதிபர்கள், ஆங்கில ஆசிரியர்கள் மேற்கூறிய இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.


## இணுவிலில் இன்று பொங்கல் விழா

மருதனார்மடம், ஜன.16

இணுவில் திருவூர் ஒன்றியமும், அறநெறிப்பாடசாலைகளும், முன்பள்ளிகளும் இணைந்து நடத்தும் மாபெரும் பொங்கல் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு இடம்பெறவுள்ளது.

இணுவில் கந்தசாமி கோயில் முன்றலில் உள்ள இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்விற்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரனும், சிறப்பு விருந்தினராக லண்டனைச் சேர்ந்த ந.சச்சிதானந்தனும் கலந்து கொள்வர்.

(ஓ-55)


## காணி தேவை

ஏ-9 வீதியில் சாவகச்சேரிக்கும் இயக்கச்சிக்கும் இடையில் 5 ஏக்கர் காணி நிறுவனக் கொள்வனவுக்குத் தேவை :
உடன்தொடர்பு கொள்ளவும் : 0777557971

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670




ஏக விநியோகஸ்தர்கள்:

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.





வலிகாமம் கிழக்கு - கோப்பாய்ப்பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வருடாந்த ஒன்று கூடல் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதேச செயலர் கிறிஸ்தோப்பர் அன்ரன் மோகன்றாஸ் தலைமை உரையாற்றுவதையும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ. குணநாதன் பட்டிமன்ற நிகழ்வுக்கு நடுவராகப் பணியாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள் - மருதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு தலைவர்களால் முடியாமல் போன யுத்தத்தை ஜனாதிபதி மஹிந்தவே முடித்தார்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கூறுகிறார்



கொழும்பு, ஜன. 16

இந்த நாட்டை ஆண்ட நான்கு தலைவர்களுக்கும் எட்டு அரசுகளுக்கும் தோற்கடிக்க முடியாமல் போன யுத்தத்தை மக்கள் வழங்கிய ஆணைக்கு இணங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றுமுழுதாக முறியடித்தார் - என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி உடரட்டை கலைச்சங்க மண்டபத்தில் கடந்த புதனன்று இடம்பெற்ற கண்டி, செங்கடகல, தேர்தல் தொகுதிகளின் அமைப்பாளர்கள் அடங்கிய 'வெற்றி இன்றும் நாளையும்' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சியினர் என்னை சிறைக்கூடத்தில் போட்டு அடைக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள். இந்த நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டமைக்கு அவர்கள் தரும் பரிசு இது தானா?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவை மிகுந்த நம்பிக்கையுடனேயே மக்கள் வெற்றிபெறச் செய்தனர். தேர்தல் வரலாற்றில் அதுவொரு முக்கிய நிகழ்வு. ஏனெனில் இந்த நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பயங்கரவா தத்தை முழுமையாகத் தோற்கடிக்கும் பொருட்டு மக்கள் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கையே அவரது வெற்றியாகும். மக்களின் இந்த எண்ணம் வீண் போகவில்லை.

நான்கு தலைவர்களுக்கும் 8 அரசுகளும் தீர்க்க முடியாத இந்தப் பிரச்சினையை இரண்டரை வருடங்களுக்குள் அவர் தீர்த்து வைத்தார். இதன் மூலம் நாடு இன்று பாரிய அபாயத்திலிருந்தும் தப்பிவிட்டது.

இந்த யுத்தம் பற்றி இந்திய அரசுடன் அவர் பேசினார். இராணுவ படைப் பிரிவுகளில் போதிய வீரர்கள் இல்லாமை குறித்தும் ஜனாதிபதி மிகுந்த கவனம் எடுத்தார். இதனையடுத்து அவர் படை வீரர்களின் எண்ணிக்கையை மூன்று மடங்காக அதிகரித்தார். அனைத்து வேலைத் திட்டங்கள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் தந்திரமாகவே இந்த யுத்தம் முனைப்புடன் முன்கொண்டு செல்லப்பட்டது.

இவற்றையெல்லாம் புரிந்துகொண்ட சர்வதேச சமூகத்தின் உந்தல்கள் தொடர்ந்து அரசை நெருக்கிக் கொண்டே வந்தன. வெளி நாடுகளிலிருந்து இரண்டு வெளிநாட்டு அமைச்சர்கள் கூட இங்கு வந்தனர். அவர்களின் உந்தல்களையும் ஜனாதிபதி பொருட்படுத்தாது தனது வேலைத்திட்டத்தை முன்னெடுத்தார்.

முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்பு அணி ஆகியவை எல்லாமே இந்த யுத்தத்தில் பெரும் பங்காற்றின. பல கோடி ரூபாய்களை செலவழித்து யுத்தத்தை முன்னெடுத்த பொழுதும் நாட்டின் அபிவிருத்தியை ஜனாதிபதி ஒருபோதும் கைவிடவில்லை.

இதன் மூலம், நாட்டில் சிறந்ததோர் அரசியல் நிலைப்பாடும் உருவாக தொடங்கியது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு யுத்தம் முன்னெடுக்கப்பட்ட காலம் அதில் பாரிய வெற்றியை அடைய முடிந்தது - என்றார். (சி)

# பொன்சேகாவை ஆதரிக்கும் கூட்டமைப்பின் தீர்மானம் தீர்க்கதரிசனமான ஒன்று என்கின்றார் ரவூப் ஹக்கீம்



கொழும்பு, ஜன. 16

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதன் மூலம் இலங்கை வரலாற்றின் முக்கிய தருணத் தில் மிகவும் தீர்க்கதரி சனமான முடிவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மூத்த தலைமைகள் எடுத்துள்ளன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திருகோணமலையில் தெரிவித்தார்.

அவர் அங்கு ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்துத் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்ட போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

''திருகோணமலை நகரில் ஐந்து இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளை விசாரிக்கவென ஒரு ஆணைக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் ஒரு பயனும் இல்லை. மூதூரில் சர்வதேச தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்படுகொலைகளை விசாரிக்கவும் சாட்டுக்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் விசாரணைகளைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆனால், நடந்தது என்ன? சர்வதேச கண்காணிப்புக் குழு சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு இடை நடுவில் செயல் இழக்கச் செய்யப்பட்டது.

திருகோணமலை மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ள இந்தப் படுகொலைகளை சரியான முறையில் விசாரணை செய்யாமல் மூடி மறைக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வந்துள்ளமை நிருபணமாகின்றது.

இன்று திருகோணமலை மக்களின் வாக்குகளை வெட்கமில்லாமல் பிச்சை கேட்டு வந்த வண்ணம் உள்ளனர். சிங்கள மக்களிடம் யுத்த வெற்றியை விற்பனை செய்பவர் மஹிந்த. அவர் இந்த வெற்றியை குடும்ப அரசியலுக்குப் பயன்படுத்தி வருபவர். எனவே, அவருக்குப் போட்டியாக ஜெனரல் சரத் பொன்சேகாவை களத்தில் இறக்கியுள்ளோம்.

ஆகவே, மக்கள் அனைவரும் எதிர்வரும் 26 ஆம் திகதி இன, மத, மொழி வேறுபாடுகள் இல்லாமல் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்து அவரை நாட்டின் ஜனாதிபதியாக்க வேண்டும்.'' (சி)




# பொன்சேகாவின் அலுவலகங்கள் மீது பொலன்னறுவையில் மீண்டும் தாக்குதல்

கொழும்பு, ஜன. 16

பொலன்னறுவையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் அலுவலகங்கள் மீண்டும் தாக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல் கண் காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

புதன்கிழமை இரவும், வியாழக்கிழமை அதிகாலையும் அரச ஆதரவாளர்களால் சரத் பொன்சேகாவின் ஐந்து பிரசார அலுவலகங்கள் தாக்கப்பட்டுள்ளன. இதன் போது பெரும் சேதமேற்பட்டுள்ளது எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமை இரு தரப்பிற்கும் இடையில் அப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதன்கிழமை இரவு கொழும்பு, கொலன்னாவையிலும் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மீது ஆயுதமேந்திய கும்பலொன்று தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

பொலன்னறுவையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பாக மூவரைத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# மலையக அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் வாக்களியுங்கள்!

## பிரதி சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

பதுளை, ஜன.16

எமது சமூகத்திடையே ஒற்றுமையும், ஐக்கியமும் மேலோங்கி, அரசியல் ரீதியிலான பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதில்தான் எமது சமூகத்தின் மேம்பாடு தாங்கியுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்திலிருந்து இரு தமிழர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகினர். இம்முறை தேர்தலில் அந்த எண்ணிக்கை மூன்றாக அதிகரிக்கப்பட வேண்டும் - என்று பிரதி சுகாதார அமைச்சரும், பெருந்தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

பதுளை அஞ்சல் நிலையக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற வளப் பகிர்வு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென லீட்ஸ் வேலைத் திட் டத்தின் கீழ் 60 கோடி ரூபாவைப் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

பதுளை மாவட்டத்தின் 68 பெருந்தோட்டங்களிலிருந்தும் 19 தோட்ட வைத்திய சாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. இவ்வைத்தியசாலைகள் நகர வைத்தியசாலைகளுக்கு நிகரான வகையில் செயற்படுகின்றன.

பாழடைந்த கட்டடங்களாகவும், கால் நடைகளின் தொழுவங்களாகவும் இருந்த பெருந்தோட்ட வைத்தியசாலைகள் அரசால் பொறுப்பேற்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதற்கென 22 கோடி 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

அரசினால் பொறுப்பேற்கப்பட்ட 19 பெருந்தோட்ட வைத்தியசாலைகளிலும் எம்.பி.பி. எஸ். தரத்திலான வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இத்தகையதோர் மாற்றம் ஏற்படுவதற்கு வித்திட்டவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. எனவே, எமது மக்கள் நடைபெறப் போகும் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெற வைக்க வேண்டும்.

அவ்வெற்றி மூலம் பெருந்தோட்டப் பகுதிகளின் மேம்பாடுகளுக்கென பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் முடியும்-என்றார்.

# ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு முதுகெலும்பிருந்தால் பொன்சேகாவுடன் நேரடி விவாதத்துக்கு வரட்டும்!

## திரும்பவும் சவால் விடுக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முதுகெலும்பு இருந்தால் அவர் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் நேரடித் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் ஈடுபட வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய தேர்தல் விஞ்ஞாபனமாக அவரால் முன்வைக்கப்பட்ட 'மஹிந்த சிந்தனை' யின் விரிவாக்கமே தற்போது அவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

'மஹிந்த சிந்தனை' வாக்குறுதிகளுள் அதிகமானவை நிறைவேற்றப்படவில்லை. அனைத்தும் பொய் வாக்குறுதிகள். இப்போதும் பொய் வாக்குறுதிகளைத்தான் அவர் முன்வைத்துள்ளார்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துகொண்டுபோகும் நிலையில் மஹிந்த வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படக்கூடியவையல்ல. நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டதாக சர்வதேச சமூகம் அறிவித்தால் இலங்கைக்கு சர்வதேச நிதி உதவிகள் கிடைக்காது. அவ்வாறு அறிவிக்கப்படுவதைத் தவிர்க்கவே இந்த ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த அறிவித்துள்ளார்.

நாட்டைத் தொடர்ந்தும் நிர்வகிப்பதற்கு அரசிடம் பணம் இல்லை. ஊழல், மோசடி நிறைந்த குடும்ப [illegible] மைக்குக் காரணம்.

அரசின் இந்த ஊழல், மோசடிகள் தொடர்பாக பகிரங்கத் தொலைக்காட்சி விவாதம் ஒன்றை நடத்துவதற்கு வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எமது பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா அழைப்பு விடுத்துள்ளார். அந்த அழைப்புக்குரிய பதில் இல்லை.

ஜனாதிபதியிடம் கேட்பதற்கு நாம் பல கேள்விகளை வைத்திருக்கின்றோம். விவாதத்தின் போது பொன்சேகா அக்கேள்விகளை ஜனாதிபதியிடம் கேட்பார்.

அமெரிக்காவில் கூட ஜனாதிபதித் தேர்தலின் போது பிரதான வேட்பாளர்கள் இருவருக்கிடையில்தான் விவாதம் இடம்பெறுவது வழமை. ஆனால் மஹிந்தரோ தாம் விவாதத்திற்கு வராது தமது குட்டிகளை விவாதத்திற்கு அனுப்புகிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முதுகெலும்பு இருந்தால் தமது குட்டிகளை [illegible] அவரே விவாதத்துக்கு [illegible]. எமது வேட்பாளர் பொன்சேகா மஹிந்தவுடனான விவாதத்துக்குத் தயாராகவே இருக்கின்றார் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கல்வி வீழ்ந்தது எப்படி? எழுந்து நிற்கும் காலம் வருமா?

- அவ்வை



மொழிதான் மாந்தரின் அறிவுவிழி அம்மொழியின் அடிப்படையிலேயே மக்கள், இனம் பகுக்கப் பெற்றுச் சமுதாயமாகச் சேர்ந்து வாழ்கின்றனர். மொழி சிதைந்தால் இனமும் சமுதாய அமைப்பும் கட்டழிந்துபோகும். இம்மெய்ப்பொருளை (தத்துவத்தை), மொழி தோன்றியபின் அது செம்மைப்படுத்தப்பட்ட காலத்திலேயே 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' கண்டுணர்ந்து மொழிக்கு 'முதனூல்' செய்து வைத்துள்ளான். உலக முதன் மொழியும் 'உலக உயர்தனிச் செம்மொழியுமாகிய எமது தமிழ் மொழிக்கு இலக்கண முதனூல் தோன்றிய காலம் தோராயமாக (ஏறத்தாழ) கி.மு 10, 000 ஆண்டுகள் என்று மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் ஆராய்ந்து உரைத்துள்ளார். இன்று நமக்குக் கிடைக்கப்பெற்ற தொல்லிலக்கண நூலாகிய 'தொல்காப்பியம்' கி.மு 700 ஆம் ஆண்டளவில் தோன்றிய ஒரு வழிநூலே என்பதும் அப்பேரறிஞரின் முடிவாகும். தொல்காப்பியத்திற்குப் பின் அதற்கு வழிநூலாக அல்லது சார்பு நூலாக 'நன்னூல்' தோன்றியது என்பர். (நூல்கள், முதனூல்-வழிநூல்-சார்புநூல் என மூவகையினவாகும்)

மொழி சிதையாமல் வழங்குவதற்காகவே இலக்கணம் என்னும் வரம்பிட்டனர் சான்றோர். மொழி இலக்கணம் வழி வழியாகத் தொடரப்படவேண்டியது; அதனால், இலக்கணத்துக்கு 'மரபு' என்றும் ஒரு பெயர் வழங்கும். மரபு திரிந்தால் (வேறுபட்டால்) மொழியும் வேறு வேறாகிச் சிதைந்து அழியும் என்பதை ''மரபுநிலை திரியின் பிறிதுபிறிதாகும்'' என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆகவே, மரபு மாறாத இலக்கண-இலக்கிய அறிவே முதலில் மாணவருக்குப் புகட்டப்படல் வேண்டும்.

இக்காலம் தமிழ்மொழிக் கல்வியில் மொழிநூற்றுறை அல்லது மொழியியற்றுறை வளர்ச்சியடைந்து வருகின்றது. அது உயர்நிலைக் கல்வியில் (பட்டப்படிப்பில்) அத்துறையை விரும்பும் மாணவருக்கு-அவர் மரபுவழி மொழிக் கல்வியில் நன்கு தேர்ச்சிபெற்றவராயின்-மொழிநூற்றுறையில் தெளிந்த அறிவும் ஆற்றலும் உள்ள நல்லாசிரியரால் கற்பிக்கப்படல் வேண்டும். நிற்க,

இன்று மாணவர் (பிள்ளைகள்) பாடசாலைகளில் மரபுவழி மொழிக்கல்வியைக் கற்கத் தொடங்கவேண்டிய காலத்திலே மொழிநூற்கல்வி (மொழியியற்கல்வி)யைப் புகுத்துமுகமான தொடக்க முயற்சியும் (மரபு வழி வரும் இலக்கண அமைதியையும் கருத்துக்களையும் ஒதுக்குதல் அல்லது நீக்குதல்) பாடநூல்களில் நுழைக்கப்பட்டுள்ளது. இன்னும், பாடநூல்களில் காணப்படும் பல்வகை மொழி வழுக்களோ எண்ணில் அடங்கா!

அம்முயற்சியால் தமிழ் மரபு இலக்கண இலக்கியங்கள் , ''புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டம்-1999'' என்னும் பெயரில் குழப்பப்பட்டு - சிதைக்கப்பட்டு - சிறுமைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்முயற்சியின் மூலகாரணர் பற்றிப் பாடசாலை, பல்கலைக்கழகங்களில் உயர்தரத்தில் கற்கும் மாணவர் சிலரிடம் சில கருத்துக்கள் உலாவுகின்றன. அவை வருமாறு: அவர் ஒருவகையான தமிழர் என்பது, வர்ணனை மொழிநூல் (Descriptive Linguistics) கொள்கையாளர் என்பது (இம்மொழிநூலின் வழுவியலை மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் விளக்கியுள்ளார்), அவர் கல்விக் கழகமொன்றின் தமிழ்த்துறைத் தலைவராகவும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் (தமிழ்) நூலாக்க ஆலோசனைக் குழுவினரிடையே 'செல்வாக்கு'ப் பெற்றவராயும் உள்ளவர் என்பது போன்றவை.

எது எப்படியோ, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் 1999ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நூலாக்கக் குழுவில் இருந்த உண்மைத் தமிழறிஞர் ஒருவருமே இப்பொழுது இல்லை என்பதும் பாடஅலகுகளும் தரமுள்ளவர்களால் எழுதப்பட்டனபோல் தோன்றவில்லை என்பதும் உண்மையே.

புதிய கருத்துக்களைக் கற்பிப்பதற்கும் காலம், இடம் முதலிய அறிந்து கற்பிக்கும் முறையறிந்து செயலாற்றல் வேண்டும். மாணவரிடையே அவர் முன்பெற்ற அடைவுகளில் (Achievement) ஒரு முதிர்ச்சி (Maturity) ஏற்பட்ட பின்பே புதியவை புகட்டப்படல் வேண்டும் என்பது கல்வியாளர் கருத்தாகும்.

முன்னர் சொன்ன குழப்பங்களாலேயே உயர்தர அல்லது பல்கலைக்கழக மாணவரிடையே தமிழ்மொழிக் கல்வி வீழ்ச்சியடைந்து வருகிறது என்பது தெளிவாகும். இந்நிலை மாறுபட்டும் உயர்கல்வியில் மாணவர் தமிழ்மொழித்துறையை நாடமாட்டார். இக்காலம் தமிழ், கொடுமையும் கொச்சையும் பெருகி, இனிமையும் மேன்மையும் கெட்டுப்போய்க் கிடக்கிறது; தமிழ், தாழ்நிலையற்றுச் செத்துக்கொண்டிருக்கிறது.

தமிழின் அழிவைத் தடுத்து பண்டுபோல் உயர்தனிச் செம்.

மொழியாக்க வேண்டுமென்றால், தமிழ்க்கல்வியை, தமிழை நன்கறிந்த - தமிழ்ப்பற்றுள்ள பேரறிஞரே திட்டமிடவும், தமிழிற் புலமையுடைய நல்லாசிரியர் கற்பிக்கவுமான ஒருகாலம் வரல் வேண்டும்! அக்காலம் வருமா?

# பாம்பைக் காணத் திரளும் படைகள்



பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பாம்பைக் கண்டு படைதிரள்வதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

தற்போது நகரின் வீதிகளில் இவ்அற்புதக் காட்சிகளைக் காணக்கூடியதாக உள்ளது. இதை அறிய ஆர்வமாக உள்ளதா தொடர்ந்

நான் வீதியால் அவசர அவசரமாகச் சென்று கொண்டிருந்தேன். சிறி

காணப்பட்டனர்.




அதைப் பார்த்த எனக்கு ஒ
நடந்துவிட்டதோ அ
மலிந்திருந்த துப்பா
வினாவியபோது ஒ
வேறொன்றும் இல்
படமெடுக்கிறார்.''
சனக்கூட்டத்தின்
அட என்ன அ
நாகபாம்புகள் சில
மக்கள் படை எடு
தற்போது தென்
வித்தைக்காரர்கள் யாழ்.நக
காட்டி வருகின்றனர்.
இவர்களுக்குப் பொதுமக்கள் மத்தி

# இதுவா நன்றி...?



''யாழ்ப்பாணத்திலே பல கல்விமான்களை உருவாக்குகின்ற அந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவிய நிறுவுனரின் நினைவுதினம் இன்று நடக்குது. கட்டாயம் அந்த நிகழ்வுக்குப் போகவேண்டுமென்று'' எனக்குள்ளே நினைத்தபடி....

அந்த நிகழ்வு தொடர்பாக பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்தியை வாசித்து நிகழ்வு நடைபெறும் நேரத்தையும், இடத்தையும் அறிந்துகொண்டேன்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக அந்த கல்விச்சாலையின் வளாகத்திற்குள் நுழைந்துவிட்டேன்.

நுழைந்தபோது அந்த வளாகத்தினுள் இளைஞர்கள், யுவதிகள் குழுகுழுவாக நின்றுகொண்டிருந்தனர்.

''சேர்.பொன்.இராமநாதனின் நினைவுதினம் எங்க நடக்குது''.... என்று அதில் நின்ற இளைஞர் குழுவிடம் கேட்டபோது''....

அதில் நின்ற இளைஞர்கள் எதுவும் தெரியாதவர்களாய் முழித்துக்கொண்டனர்.

அப்படி ஒரு நிகழ்வு நடப்பதென்பதை அறிந்திருக்கவில்லை என்பதுபோல அவர்களின் முகபாவனை அமைந்திருந்தது.

''என்னடாப்பா, தங்கட வளவுக்குள்ள நடக்கிற ஒரு பெரியாரின் நினைவுதினத்தைப்பற்றி அறிந்திருக்காதவராய் இருக்கிறாங்கள்'' என்று எனக்குளே நினைத்தவாறு...

அடுத்தபடியாக மற்றொரு பகுதியில் நின்ற இளைஞர்களிடமும் கேட்டேன்... அங்கும் அதே உணர்வு, அதே பதில்தான்...

ஒருவாறு திக்குமுக்காடி நிகழ்வு நடக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டேன்.

அப்போது அங்கே நிகழ்வில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அந்த நினைவுதின விழா மண்டபத்தைப் பார்த்தவுடன் அதிர்ந்துபோனேன்.

அதிர்ந்துபோகுமளவுக்கு என்னதான் அப்படி அங்கு

நடந்தது என்று
நி[illegible]பது எம[illegible]
அந்த ம[illegible]
நினைவுப் பேரு
விரிவுரையாளர்
அத்துடன் மண்
பேர் மட்டுமே உ
இந்த விடய
யாழ்ப்பாணத்
உருவாக்குவதற்
கல்விக் கொடை
பங்குகொள்ளும்
நினைக்கும்போது
இந்த நிகழ்வி
பங்குகொள்ளா
நிகழ்வின் ஏற்பா
மத்தியில் வழங்கி
விட்டார்களா? அ
அசண்டையாக வ
ஒருபுறமிருக்கட்டு
அந்தக் கல்வி
களியாட்ட நிகழ்வ
க[illegible]துகொள்வ
அத்தகைய ஆ
[illegible]ருந்தகைகளை
காட்டாமல் விடுவ
இனிமேலாவது
அக்கறையுள்ளவர்
பொக்கிஷங்களை
நினைவு தினங்கள்
பணிகளுக்கு மதிப்
அது காலத்தின் தே
கடமையுமாகும்.

## நாடும் நடப்பும்




# வீரமணி ஐயரின் நாட்டிய ந

(சென்ற வாரத்தொடர்ச்சி)

சந்தர்ப்பங்களை விளக்கும் பொருத்தமான சொற்பிரயோகங்கள் ஓசைநயம், அடுக்குச்சொற்கள், சிலேடைகள் எனப் பல அற்புத விடயங்களைக் கொண்டமைந்தவை. இவரது நாட்டிய நாடகங்களில் ''விஸ்வரூப தரிசனமும்'' ஒன்று. சிவபெருமானின் அடியையும், முடியையும் பிரம்மாவும் விஷ்ணுவும் தேடிய புராணக் கதையைக் கூறுவதாகும். இங்கே முதலாவது காட்சியில் திருக்கைலாய மலையிலே இறைவனும் இறைவியும் நாட்டியமாடுவதை (நாட்டியத்தின் தோற்றமெனக் கூறலாம்) தேவர்கள், முனிவர்கள் யாவரும் பார்த்திருப்பதாக வடிவமைத்திருக்கின்றார். இதில் சிவபெருமான் ஆடும் பாடலாக்கத்தில் வல்லினச் சொற்கட்டுக்களைப் பயன்படுத்தியும் பார்வதி ஆடும் பாடலாக்கத்தில் மெல்லின[illegible] தாண்டவம், லாஸ்யம் என்றும் நாட்டியத்தின் இருபெரும் பிரிவுகளை மறைமுகமாக விளக்கியுள்ளார். காட்சியமைப்பிலே இவர்களது நாட்டியத்திற்குப் பக்கவாத்தியமாக நந்திதேவர் மிருதங்கம் வாசிக்க, பிரம்மதேவர் தாளம்போட, சரஸ்வதி வீணை வாசிக்க, தும்புருநாரதர் தோத்திரம்பாட, ஸ்ரீகிருஷ்ணன் புல்லாங்குழல் வாசிக்க நாட்டியம் இடம் பெறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இதேமுறையில் இன்றும் பரத நாட்டியக் கச்சேரி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. வித்துவானின் நாட்டியச் சிறப்பிற்கும் நாட்டிய அறிமுறைச் சிறப்பிற்கும் இதுபோன்று பல உதாரணங்களைக் கூறலாம்.


வித்
நாட்டிய
சிறப்பி
நாடகத்
எம்பெ
அவர் அ
சந்தர்ப்
துடியத
ஆரம்பி
தாண்ட
தாண்ட
அம்சய
சிறப்ப
நாயகி
இலட்
வெளி
சிறப்
சப்தா
இரன்
பாடு
சப்த
முரு
(வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா அண்மையில் நடைபெற்றபோது நிலைய கீதம், வில்லிசை பாடிய செல்வன் நடராசா சுதர்ஷனை பிரதம விருந்தினர் கவிமணி க.ஆனந்தராசா கௌரவித்துப் பரிசில் வழங்குவதையும் அருகில் நிலையத் தலைவர் ச.ஏகாம்பரநாதன் (J.P), பொருளாளர் வீ.புஸ்பநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



ஆனைக்கோட்டை ஜே/133 பிரிவிலுள்ள கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் இலகு வேலைத்திட்டத்தின் கீழ் சிரமதானம் செய்யப்படுவதைக் காணலாம். (100)



சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இந்த ஆண்டுக் கான கால்கோல் விழா கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றுவதைக் காணலாம். (167)




யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் வல்வெட்டித்துறை திருமகள் முன்பள்ளிக்குத் தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



கோண்டாவில் இந்து மகா வித்தியாலய கனடா வாழ் பழைய மாணவர் தி.கேமநாதனின் அனுசரணையுடன் வருடா வருடம் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கான தங்கப் பதக்கம் வழங்கும் வைபவம் பரிசளிப்பு விழாவின்போது இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி கடம்பமலர் விமலராஜா மாணவி ஒருவருக்குப் பதக்கம் அணிவிப்பதைப் படத்தில் காணலாம். இந்நிகழ்வில் மூன்று பேர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (-16)



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆரம்பக்கல்விக் கண்காட்சி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் அதிபர் க.சந்திரசேகரன், சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி துரைஎங்கரசு, வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.மாதவகுமார், எஸ்.குகவேள் ஆகியோர் கண்காட்சியினைப் பார்வையிடுவதைக் காணலாம். (28)



அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம்.

இதன்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினர் லயன் டாக்டர் வை.தியாகராஜா, அமைச்சின் செயலாளருக்குப் பொன் [illegible] பதைப் படத்தில் காணலாம்.அருகில் கல்லூரியின் பீடாதிபதி எஸ் [illegible] டுகிறார். (-16)



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களில் 2009ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சண்டிலிப்பாய் கோட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## மேரி திரேசா கிறிஸ்ரின் சூசைப்பிள்ளை
(புஸ்பம்)

பிறப்பு: 24★07★1941
இறப்பு: 17★12★2009

எம் இனிய அம்மாக்குட்டி, ஏனம்மா எங்களை விட்டு போனீர்கள்?? தவித்துப்போவீர்களே, சிறிய எங்கள் முகவிட்டத்தில், பரிதவித்து நிற்கிறோம்.....

எங்கே அந்தச் சிரிப்பு...! இதயம் வரை சென்று வருடிக்கொடுக்கும் கைகள்...!! இஞ்சேரும் ...! பிள்ளை..! தம்பி..! இன்னும் இன்னும்... அந்தக்குரல்..???

எங்கள் முன்னால் அம்மா..? கால் பெருவிரல்களைக் கட்டிக்கொண்டு கைகளுக்கு உறைபோட்டு, கழுத்தில் மாலை போட்டு, கால் நீட்டி நீண்ட நேரம் உறங்கியதை..! முதல் முதல் அம்மா எங்கள் முன் உறங்கியதை..!! பார்த்தோமம்மா, முடியவில்லையே...

சின்ன வயசில சின்னதா அம்மாவின்ரை மத்தியான நித்திரையை சீராகக் கொள்ள விடாமல் குதித்துக் கும்மாளமடிப்போம்... ''ஒருக்கா கண்ணயர விடுகுதுகளே..'' அம்மா எழும்புவா புல்லுக்கடகத்துடன் ... முன்னால நடப்பா.. பின்னால குறுகுறுப்பும் முறுமுறுப்புமா.. நாங்கள்... ஆட்டுக்குப் புல்லுக்கு, அடுப்புக்கு விறகிற்கு, பினாட்டுக்கு பனம்பழத்திற்கு...

இப்ப ஊருமில்லை..! ஆடு நிற்க வீடுமில்லை..! முன்னாலை நடக்க அம்மாவுமில்லை..! பின்னாலேயே நடந்து பழகிவிட்டோம்.. முன்னாலை நீங்களில்லை அம்மா..! எங்காலை நாங்கள் போறது..???

நாங்கள் பெருமைப்பட்டோம்.. நாங்கள் தான் அம்மாவில நேசமெண்டு.. ஆண்டவன் நிரூபிச்சிட்டான் இல்லை தான் தான் எங்களிலும் என்று. ஆரோ ஒருவன் என்றால் அடித்துப்பறித்து வந்திருப்போம் உங்களை.. ஆண்டவன் அழைத்துச் சென்றுவிட்டான்.. அவனுடன் எப்படி...??

எங்களை உடைத்தெறிந்த உங்களது கடைசி நேரப்போராட்டத்தில் உங்கள் உடல் தளர்ந்து, கை கால துவண்டு.. கடைசி உங்கள் கண்ணீர்த்துளியை கை எடுத்து துடைக்க முடியாமல் போனபோது என்னம்மா நினைத்தீர்கள்..? எங்களுக்குச் சொல்ல ஏதாவது..? தெரியவில்லையே..!!....

இறைவனே எங்களால் முடியவில்லையையா... தொடக்கி வைத்து அன்பை அம்மாவில் காட்டி, முடித்து வைத்து எடுத்துச் சென்றுவிட்டாய் நீ தானே எடுத்துக் கொண்டாய் இனி உன் பொறுப்பு, உன் வீட்டில் உனது பக்கத்தில் எம் அன்பைவிடப் பெரியது எனச்சொல்லும் உன் பேரன்பில் எங்கள் அம்மாவைப் பக்குவமாக வைத்துக்கொள்ளும்..! கவனமாக பார்த்துக்கொள்ளும்...!!

அம்மாவின் இறுதி நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த வண.ஆயர், குருக்கள், துறவிகளுக்கும், என்றும் இனிய உறவினர்கள், தூரத்தில் இருந்தும் கூட வந்து கலந்து கொண்ட நண்பர்கள், தொலைவில் இருந்தும் தொடர்பு கொண்ட நேசங்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

16.01.2010 அன்று தற்காலிக முகவரியான கீரி, மன்னார் கர்த்தர் கோயில் அம்மாவின் ஆன்மாவிற்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அந்த நேசத்தாயாருக்காக இறைவனிடம் அனைவரையும் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.
கர்த்தர் ஆலய வீதி, கீரி, மன்னார்.
(C/564122)

# டெங்குப் பிரசாரமாகத் தெருக்கூத்து

யாழ்ப்பாணம், ஜன.16

குடாநாட்டில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்தவும் அந்த நோயின் விபரீதங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுவருவதுடன் தெருக்கூத்துக்களையும் அரங்கேற்றி வருகின்றது.

தெருக்கூத்தை மக்கள் தமது பகுதிகளில் அரங்கேற்றுவதற்கு விரும்பினால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், தலைமை அலுவலகம், 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)



# திருப்பணி நிதி
## முருக பக்தர்களுக்குப் பணிவான வேண்டுகோள்

கரணவாய் தெற்கு, முதலைக்குழி முருகமூர்த்தி ஆலய திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மூலஸ்தானம், மகா, ஸ்நபன மண்டபங்களுடன் கோயிலின் சுற்றுமதில், பரிவார மூர்த்திகளின் கட்டுமானங்கள் முடிவடைந்து தற்சமயம் வசந்த மண்டபத்திலிருந்து நுழைவாயில் வரைக்கான கட்டுமாணப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவ்வேலைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு போதிய நிதி தேவைப்படுகின்றது.

முருக பக்தர்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து தங்களால் இயன்ற பண உதவியைச் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பணம் செலுத்துவோர் இலங்கை வங்கி, நெல்லியடிக்கிளையில் உள்ள முதலைக்குழி முருகமூர்த்தி ஆலய சேமிப்புக் கணக்கு இல. 9966064 இற்கு பணத்தை அனுப்பி வைப்பிலிடுவதுடன் வங்கிப் பற்றுச்சீட்டின் நிழற் பிரதியைப் பொருளாளர் திரு. வீ.தர்மகுலசிங்கம், தூதாவளை, கரணவாய், கரவெட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பி சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.அல்லது அவரிடம் நேரில் பணத்தைக் கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். பொருளாளரின் தொலைபேசி இல. 021 3002595 தொடர்புகொள்ளும் பொழுது தங்களின் பெயர், விலாசம், அனுப்பிய தொகை போன்றவற்றை அறிய வைத்தால் பற்றுச்சீட்டு அனுப்பிவைக்க இலகுவாக இருக்கும். தங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கி முருகப்பெருமானின் திருப்பணி இனிதே நிறைவேற உதவிபுரிந்து முருகப்பெருமானின் ஆசியைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

திருப்பணிக்குழு,
முதலைக்குழி முருக மூர்த்தி ஆலயம்,
வீரப்பதிராயன்.
கரணவாய்தெற்கு,
கரவெட்டி.
(93791)

# வரலாறு எம்மை விடுதலை செய்யட்டும் !

## இலங்கையின் எதிர்காலம் எங்கே செல்கிறது?

## பொதுக் கூட்டம்

அனைவரும் வருக !

யாழ். வீரசிங்கம் மண்டபம்
ஜனவரி 16
பி.பகல் 3.00-6.00
சனிக்கிழமை

### பேச்சாளர்கள்:

தோழர்கள்

- **பேராசிரியர் திஸ்ஸ விதாரன** - லங்கா சமசமாஜக் கட்சி
  (நா.உ., விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சர்)
- **டியூ. குணசேகரா** - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
  (நா.உ., அரசியல் யாப்பு விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர்)
- **திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா** - யாழ். மாநகர முதல்வர்
- **வாசுதேவ நாணாயக்கார** - ஜனநாயக இடதுசாரி முன்னணி
- **தர்மலிங்கம் சித்தார்த்தன்** - தலைவர், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
- **தி.சிறீதரன்** - செயலாளர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா)
- **மனோரஞ்சன்** - சுதந்திர ஊடகவியலாளர்
- **டக்ளஸ் தேவானந்தா** - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
  (நா.உ., சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர்)

ஒழுங்குகள் : குடிமக்கள் குரலுக்கான மேடை - ***Forum for Citizen's Voice***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பி, நம்பி, நாம் கெட்டோம்!

# என்று தணியும் இந்த நம்பிக்கை மோகம்?

சட்டத்தரணி சி.வி.விவேகானந்தன்.



முதலாவது படலம்

மகாத்மா காந்தி துவக்கின்றி, இரத்தம் இன்றி 'சத்தியாக் கிரகம்' என்ற ஆயுதம் கொண்டு இந்திய சுதந்திரத்திற்காகப் போராடினார். செய்தார். அதன் எதிர் விளைவு ஆங்கில அரசின் அடக்குமுறை, தடியடி, துப்பாக்கிச்சூடு. அதனால் இரத்தம் ஓடத்தான் செய்தது. அதன் பின்விளைவாக பகவத்சிங் போன்றோர் தோன்றத்தான் செய்தனர். படை கொண்டு மோதுவதற்கு சுபாஷ் சந்திரபோஸ் புறப்பட்டார். ஆனால், இலங்கையில் அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை.

1848 இல் கிறிஸ்தோப்பர் எலியற் என்ற ஆங்கிலேயர் அரசியல் சீர்திருத்தத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்தார். அவரைத் தொடர்ந்து வேகஷன், டிக்பி போன்றோர் கடிதங்களும் மனுக்களும் அனுப்பிக் கொண்டே இருந்தனர். ஆங்கில அரசும் அரசமைப்பில் பல விதமான சீர்திருத்தங்களைச் செய்தது. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்ற குரலை பொன்னம்பலம் அருணாச்சலம் முதல்முறையாக ஜூன் மாதம் 1902 ஆம் ஆண்டு முன்வைத்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பிதாவும் அவரே.



மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், யாழ்ப்பாணத்தார், மட்டக்களப்பார் என்று பல விதமாகப் பிரிந்திருந்தவர்களை 'இலங்கையர்' என்ற ஒரு குடைக்குள் அவரே கொண்டு வந்தவர். இலங்கைத் தேசிய காங்கிரஸை ஸ்தாபித்தார். அவரின் விடாமுயற்சியால் தமிழர் ஒருவரைத் தெரிவு செய்யும் வண்ணம் கொழும்பில் ஒரு தேர்தல் தொகுதியை உருவாக்க சிங்களத் தலைவர்களை உடன்படச் செய்தார். 1918 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் திகதி சிங்களத் தலைவர்கள் தங்களது உடன்பாட்டைத் தெரிவித்தனர். சிங்களத் தலைவர்களை அருணாசலம் நம்பினார். இந்த உடன்பாட்டின் பிரகாரமே தூர விலகி நின்ற யாழ்ப்பாணத்து மக்களையும் இலங்கைத் தேசிய

## நீண்டு செல்லும் ஏமாற்றுப் படலங்கள்

காங்கிரஸின் கீழ்க் கொண்டுவந்தார். தங்களுடைய காரியங்கள் நிறைவு பெற்ற பின் உடன்பாட்டிலிருந்து விலகிக் கொண்டனர் சிங்களத் தலைவர்கள். ஏமாற்றப்பட்ட அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்தும் விலகிக்கொண்டார். இவ்வாறு செய்வதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கு அவருக்கு தமிழ் மக்கள் பலம் இருக்கவில்லை.

'தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்களல்லர். மக்கள் தொகையில் குறைந்தாலும் அவர்கள் ஒரு தேசிய இனம். தேசிய இனத்திற்கு பாதுகாப்புக்கள் தேவையில்லை' - என்ற கருத்தை முன்வைத்து உடன்படிக்கையை கைவிட்டனர் சிங்களத் தலைவர்கள்.

### இரண்டாவது படலம்

1931 ஆம் ஆண்டிற்கு முன் 'இலங்கை ஒரு நாடு, அதில் இரு தேசிய இனங்களான சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் ஆகியன வாழ்கின்றன, என்பதனை அன்றைய சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆங்கில ஆட்சியும் அக் கொள்கையை ஏற்றுக்கொண்டு அரசியல் நியமங்களைச் செய்தது. கண்டிய சிங்களவர் இதன் அடிப்படையில்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து, தமிழர்களுக்கு சமஷ்டி அரசியல் அலகு வழங்கப்பட வேண்டுமென டொனமூர் ஆணைக்குழு முன் வேண்டுகோள் விடுத்தனர்.

1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. 1931 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது சட்ட நிரூபண சபைக்கு இந்த அடிப்படையில்தான் தேர்தல் நடத்தப்பட்டது. சர்வஜன வாக்குரிமையுடன் சிங்களவர்களின் பிரதிநிதித்துவம் கூடியது. தமிழர்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்தது. பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள், தமிழர்கள் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை ஏற்க மறுத்துவிட்டனர். தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்கள் என்று நடத்தத் தொடங்கினர். தமிழ்த் தலைவர்கள் செய்வதறியாது வேதனைப்பட்டனர்.

### மூன்றாவது படலம்

1944 ஆம் ஆண்டளவில் ஆங்கில அரசால் சோல்பெரி ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. சிறுபான்மையினருக்கு சிறந்த பாதுகாப்புகளை வழங்கும்படி பரிந்துரைக்கப்பட்டது. அவர்களும் சிறந்த முறையில் சிபாரிசுகள் செய்தனர். டி. எஸ். சேனாநாயக்கா அவற்றை ஏற்கவில்லை. அவரது அமைச்சரவை அரசியல் சீர்திருத்தத்துக்காக ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையை அமைச்சராக இருந்த அருணாசலம் மகாதேவா ஏற்கவில்லை. சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுக்கென பிரத்தியேகமாக ஓர் ஆணைக்குழு அமைத்து, அதன் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். சிங்களத் தலைவர்கள் அருணாசலம் மகாதேவாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவேயில்லை.

"தமிழ் அரசர்களும் சிங்கள அரசர்களும் இலங்கையை மாறி மாறி ஆண்டனர். சிங்களவர்களும் தமிழர்களும் உடன்பிறப்புக்கள் போல ஒற்றுமையாக வாழ்ந்தனர். என்னை நம்புங்கள் தமிழர்களுக்குத் தீங்கு செய்யமாட்டேன்" - என்று திரும்பத் திரும்ப டி. எஸ். சேனநாயக்கா வேண்டுகோள் விடுத்தார். தமிழ்த் தலைவர்கள் பலரும் அவரை நம்பினர். மகாதேவாவும் டி. எஸ்ஸயே நம்பினார். தனது அறிக்கைக்கு எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்காது கைவிட்டார் அருணாசலம் மகாதேவா. ஆனால் டி. எஸ். சேனநாயக்காவோ சோல்பெரி அரசமைப்பின் 29 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைக் காப்புக்களை நெருடி பலவீனமடையச் செய்தார். குறிப்பாக சோல்பெரி ஆணையாளர் 'சமூகம்'(community) [illegible] பொருள்கோடல் செய்திருந்தனர். 'இந்திய வம்சாவளியினர்' ஒரு சமூகம் என்று வியாக்கியானம் கொடுத்திருந்தனர். அப்பொருள்கோடலை டி. எஸ். சேனநாயக்கா மிகச் சாதுரியமாக அரசமைப்பிலிருந்து விலக்கிவிட்டார்.

அதன் பின்விளைவு பின்னர், பிரஜாவுரிமைச் சட்டத்தில் தெரியவந்தது. அச்சட்டத்திற்கெதிராக கொடக்கம்பிள்ளை என்பவர் வழக்குத் தொடுத்தார். 'பிரிவியூ கவுன்ஸில்' வரையும் அது சென்றது. இந்திய வம்சாவளியினரை ஒரு சமூகம் என்று பொருள் கோட முடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளை நம்பினோம்; நட்டாற்றில் நின்றோம்.

### நான்காவது படலம்

அமைச்சரவையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஒரு குறித்த எண்ணிக்கை அமைச்சர்களை நியமிக்க வேண்டும். அவ்வாறு சோல்பெரி அரசமைப்பில் குறிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை சில தமிழ்த் தலைவர்கள் முன்வைத்தனர். அவ்வாறான கோரிக்கையை முன்வைக்க வேண்டாமென்றும், இலங்கைத் தமிழர்கள் சிங்களவர்களின் உடன் பிறவா சகோதரர்கள் என்றும் டி. எஸ். சேனநாயக்காவும் மற்றைய சிங்களத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்தனர். இலங்கைத் தமிழர் கேட்கும் தொகைக்கும் கூடுதலாக அமைச்சர் பதவிகள் கொடுக்கப்படும் என்று நம்பிக்கை ஊட்டப்பட்டது. தமிழ் தரப்பினர் நம்பினர்.

தொடக்கத்தில் மூன்று அமைச்சர் பதவிகள் தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்டன. 1949 ஆம் ஆண்டின் பின் அது இரண்டானது. 1956 தொடக்கம் 1965 ஆம் ஆண்டு வரையும் தமிழர்கள் எவருமின்றி அமைச்சரவை அமைக்கப்பட்டது. முன்பும் சட்ட நிரூபண சபையிலும் தனிச்சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டது. இன்று அமைச்சர் அந்தஸ்துள்ள ஒரு சிறு அமைச்சர் பதவி இலங்கைத் தமிழருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எக்காலத்திலும் கல்வி அமைச்சோ, நிதி அமைச்சோ தமிழர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

### இன்றும் நம்புகின்றோம்

விக்கிரமாதித்தன் கதையில் ஒரு வேதாளமுண்டு. வேதாளம் எப்போதும் முருங்கை மரத்தில் ஏறி விடக் கூடியது. முருங்கை மரம் மனிதனின் பாரத்தைத் தாங்காது முறிந்து விடும். அவ்வாறான முருங்கையில் ஏறி வேதாளத்தை தோளில் சுமந்து கொண்டே கீழே இறங்குவான் விக்கிரமாதித்தன். வேதாளம் கதை கூற, விக்கிரமாதித்தன் கவனம் சிதறடிக்கப்படும். அவ்வேளையில் வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறிவிடும். விடாமுயற்சியைத் தளரவிடாது விக்கிரமாதித்தன் மீண்டும் மீண்டும் முருங்கை மீது ஏறுவான். அவன் எவ்வளவு முயற்சித்தாலும் வேதாளத்தை முருங்கையிலிருந்து இறக்கி கீழே நிரந்தரமாக வைத்திருக்க முடியவில்லை. இன்னும் முயற்சிதனை விக்கிரமாதித்தன் கைவிடவில்லை.

தமிழர்களாகிய நாமும் நம்பிக்கையை இழக்கவில்லை. இன்னும் நம்புகின்றோம். ஆறு அம்சத்திட்டங்கள், பத்து அம்சத்திட்டங்கள் என்று பல திட்டங்களை முன்வைத்தோம். கண்ட பலன் ஏமாற்றமே. ஏமாற்றப்பட்ட வரலாற்றைத் திரும்பிப் பார்க்க மறுக்கின்றார்கள். இம்முறை அவ்வாறு [illegible] என்று நம்பப்படுகிறது. ஒவ்வொரு முறையும் அவ்வாறே நம்புகின்றோம். நம்பி நம்பி கடந்து வந்த அந்த வரலாற்றுப் படிவங்களை மீண்டுமொரு முறை பார்ப்போம்.



### ஐந்தாம் படலம்

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தின் பின் நியாயமான தமிழ் உபயோகத்திற்காக சட்டம் கொண்டு வரப்பட்டது. நியாயமானதாக அவர்கள் கூறியதைக் கூட நடைமுறைப்படுத்தவேயில்லை. நீதிமன்ற தமிழ் மொழி விசேட சட்டம் இயற்றப்பட்டது. அதன் பின் அது மூலையில் முடக்கி வைக்கப்பட்டது.

1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதுவதற்கு முயற்சிகள் நடைபெற்றன. அப்பொழுது தந்தை செல்வா பிரதமர் பண்டாரநாயக்கவைப் பார்த்து "இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஏதாவது ஒன்று செய்தாக வேண்டும். நாங்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறினோமேயானால், எம் மரணத்தின் பின், இப்பிரச்சினை நாட்டுக்குப் பெரும் சேதத்தை விளைவிக்கும்" என்று வேண்டுகோள் விடுத்தார். (You must do something to solve this problem. If we fail to solve this problem now, after our death, It will cause great havoc to this country) அதே ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சிங்கள தேசம் கிளர்ந்தெழுந்தது. ஒப்பந்தம் சின்னாபின்னமாகக் கிழித்தெறியப்பட்டது. நாம் மீண்டும் ஏமாந்தோம்.

### ஆறாவது படலம்

உண்ணா விரதம், சத்தியாக் கிரகப் போராட் டங்கள் யாவற்றிலும் தமிழர்களின் இரத்தம் சொட்டப் பட்டது. 1958 இல் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாடு வவுனியாவில் நடைபெற்றது. அதனைக் குழப்புவதற்காக தொடங்கிய கலவரம் நாடு முழுவதும் பரவியது.



தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். உயிருடன் பலர் எரிக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் யாவும் சூறையாடப்பட்டன. தீயில் இடப்பட்டு நீறாக்கப்பட்டன. தந்தை செல்வா 58 ஆம் ஆண்டின் இனக்கலவரத்தின் பின் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடத்தவில்லை. தமிழ் மக்களை இரத்த ஆற்றில் நீந்தவிட அவர் விரும்பவில்லை. அரசுகளை அமைப்பதற்கு உதவி செய்வதன் மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பெற முயற்சித்தார்.

### தொங்கு நாடாளுமன்றம்

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த தேர்தலில் தொங்கு நாடாளுமன்றமொன்று ஏற்பட்டது. அரசு அமைப்பதற்கு சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முயற்சித்தன. தமிழரசுக்கட்சி எந்தக் கட்சிப் பக்கம் சேருமோ அந்தக் கட்சி அரசை அமைக்கக்கூடிதாக இருந்தது. தந்தை செல்வா இரு பெரும் கட்சிகளின் தலைவர்களோடும் மாறி மாறிப் பேசினார். விவாதித்தார். இரு கட்சிகளும் எழுத்துமூலம் உடன்படிக்கை செய்ய மறுத்துவிட்டன.

சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் 1958 இல் கிழித்தெறியப்பட்ட பண்டா - செல்வா உடன்படிக்கைய அமுல்படுத்துவதற்கு உடன்பட்டனர். அந்த உடன்பாட்டின் காரணமாக சுதந்திரக்கட்சி அரசு அமைப்பதற்கு தமிழரசுக்கட்சி ஆதரவு அளிக்குமெனத் தந்தை செல்வா அறிக்கை விட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம்
# ELECTIONS OFFICE, Jaffna
## சனாதிபதித் தேர்தல்- 2010.01.26

### யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகம் செய்தல், வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல் தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல்

எதிர்வரும் 26.01.2010ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய வாக்கெடுப்புப் பிரிவுகளில் பருத்தித்துறை வாக்கெடுப்புப் பிரிவில் வாக்கெடுப்பு மாவட்ட இல.36 இலிருந்து இல.43 வரையும், காங்கேசன்துறை வாக்கெடுப்புப் பிரிவில் வாக்கெடுப்பு மாவட்ட இல.21 இலிருந்து இல.25 வரையும், வாக்கெடுப்பு மாவட்ட இல.30 இலிருந்து இல.58 வரையுமான வாக்கெடுப்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வாக்கெடுப்பு நிலைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 2008ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களுக்கு தேருநர் இடாப்பில் குறிப்பிட்ட முகவரியில் 11.01.2010ஆம் திகதி முதல் அஞ்சல் திணைக்களம் ஊடாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வாக்கெடுப்புப் பிரிவின் வாக்கெடுப்பு மாவட்ட இல.36இலிருந்து இல.43 வரையிலான வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கமைய குடத்தனை இடைத்தங்கல் நிலையங்களில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் குடத்தனை உபதபாலகத்தில் வைக்கப்படும். வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு அஞ்சல் அலுவலகத்திலிருந்து அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும்.

காங்கேசன்துறை வாக்கெடுப்புப் பிரிவின் வாக்கெடுப்பு மாவட்ட இல.21 இலிருந்து இல.25 வரையும், வாக்கெடுப்பு மாவட்ட இல.30 இலிருந்து இல.58 வரையான வாக்கெடுப்பு நிலையங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கமைய வாக்களிப்பு நிலையங்களில் அமைக்கப்படவுள்ளன. இந்த வாக்கெடுப்பு நிலையங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்கள் அவர்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு மருதனார்மடத்திலுள்ள காங்கேசன்துறை தபால் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

தேர்தல் மாவட்டம் இல.10- யாழ்ப்பாணம் — வாக்கெடுப்பு பிரிவு 'இ' காங்கேசன் துறை

| கிராம அலுவலர் பிரிவு | வா.மா.இல. | வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|
| ஜே/221- இளவாலை வடக்கு<br>ஜே/222- இளவாலை வடமேற்கு | 21 | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் (மண்டப இல.02) |
| ஜே/221- இளவாலை வடக்கு<br>ஜே/223- வித்தகபுரம்<br>ஜே/224- பன்னாலை<br>ஜே/225- கொல்லங்கலட்டி | 22 | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் (மண்டப இல.03) |
| ஜே/226- நகுலேஸ்வரம் | 23 | யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் (மண்டப இல.04) |
| ஜே/223- வித்தகபுரம் | 24 | யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (மண்டப இல.01) |
| ஜே/224- பன்னாலை<br>ஜே/225- கொல்லங்கலட்டி | 25 | யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (மண்டப இல.02) |
| ஜே/230- தந்தை செல்வாபுரம்<br>ஜே/232- மாவிட்டபுரம் தெற்கு | 30 | யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி (மண்டப இல.04) |
| ஜே/228-தெல்லிப்பழை<br>ஜே/230- தந்தை செல்வாபுரம் | 31 | யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ( மண்டப இல.05) |
| ஜே/223- வித்தகபுரம்<br>ஜே/225- கொல்லங்கலட்டி | 32 | யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ( மண்டப இல.06) |
| ஜே/231- மாவிட்டபுரம்<br>ஜே/232- மாவிட்டபுரம் தெற்கு | 33 | யா/மல்லாகம் மகாவித்தியாலயம் (மண்டப இல.02) |
| ஜே/225- கொல்லங்கலட்டி<br>ஜே/226- நகுலேஸ்வரம்<br>ஜே/231- மாவிட்டபுரம்<br>ஜே/232- மாவிட்டபுரம் தெற்கு<br>ஜே/237- பளை- வீமன்காமம் தெற்கு | 34 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.03) |
| ஜே/234- காங்கேசன்துறை மத்தி | 35 | யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (மண்டப இல.02) |
| ஜே/233- காங்கேசன்துறை மேற்கு | 36 | யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (மண்டப இல.03) |
| ஜே/235- காங்கேசன்துறை தெற்கு | 37 | யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (மண்டப இல.04) |
| ஜே/236- பளை- வீமன்காமம் வடக்கு | 38 | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (மண்டப இல.02) |
| ஜே/250- தையிட்டி தெற்கு | 39 | யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (மண்டப இல.05) |
| ஜே/247- தையிட்டி கிழக்கு<br>ஜே/249- தையிட்டி வடக்கு | 40 | யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் (மண்டப இல.06) |
| ஜே/248- மயிலிட்டித்துறை தெற்கு<br>ஜே/249- தையிட்டி வடக்கு<br>ஜே/251- மயிலிட்டித்துறை வடக்கு | 41 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.04) |
| ஜே/248- மயிலிட்டித்துறை தெற்கு | 42 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.05) |
| ஜே/234- மயிலிட்டித்துறை தெற்கு<br>ஜே/251- மயிலிட்டித்துறை வடக்கு | 43 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.06) |
| ஜே/243- குரும்பசிட்டி கிழக்கு | 44 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.07) |
| ஜே/240- தென் மயிலை<br>ஜே/242- குரும்பசிட்டி | 45 | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (மண்டப இல.03) |
| ஜே/238- கட்டுவன் | 46 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.08) |
| ஜே/240- தென்மயிலை<br>ஜே/241- வறுத்தலைவிளான் | 47 | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (மண்டப இல.04) |
| ஜே/246- மயிலிட்டி வடக்கு | 48 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.09) |
| ஜே/246- மயிலிட்டி வடக்கு | 49 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.10) |
| ஜே/245- வயாவிளான் மேற்கு<br>ஜே/252- பலாலி தெற்கு | 50 | யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம் , சுன்னாகம் (மண்டப இல.01) |
| ஜே/255- பலாலி வடமேற்கு<br>ஜே/256- பலாலி மேற்கு | 51 | யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் (மண்டப இல.02) |
| ஜே/253- பலாலி கிழக்கு | 52 | யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் (மண்டப இல.03) |
| ஜே/254- பலாலி வடக்கு | 53 | யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் (மண்டப இல.04) |
| ஜே/252- பலாலி தெற்கு<br>ஜே/253-பலாலி கிழக்கு | 54 | யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் (மண்டப இல.05) |
| ஜே/236- பளை- வீமன்காமம் வடக்கு<br>ஜே/237- பளை- வீமன்காமம் தெற்கு | 55 | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், (மண்டப இல.05) |
| ஜே/237- பளை- வீமன்காமம் தெற்கு | 56 | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (மண்டப இல.06) |
| ஜே/238- கட்டுவன் | 57 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் (மண்டப இல.11) |
| ஜே/239- கட்டுவன் மேற்கு | 58 | யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் (மண்டப இல.02) |

தேர்தல் மாவட்டம் இல.10 -யாழ்ப்பாணம்
வாக்கெடுப்புப் பிரிவு 'எ' பருத்தித்துறை

| கிராம அலுவலர் பிரிவு | வா.மா.இல. | வாக்கெடுப்பு நிலையம் |
|---|---|---|
| ஜே/426- செம்பியன்பற்று<br>ஜே/427- செம்பியன்பற்று தெற்கு | 36 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.01) |
| ஜே/428- மருதங்கேணி | 37 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.02) |
| ஜே/428- மருதங்கேணி<br>ஜே/429- வத்திராயன் | 38 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.03) |
| ஜே/430- உடுத்துறை | 39 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.04) |
| ஜே/431- ஆழியவளை | 40 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.05) |
| ஜே/432-வெற்றிலைக்கேணி<br>ஜே/433- முள்ளியான் | 41 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.06) |
| ஜே/434- போக்கறுப்பு | 42 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.07) |
| ஜே/435- சுண்டிக்குளம் | 43 | குடத்தனை இடைத்தங்கல் நிலையம் (மண்டப இல.08) |

(சி/564128)

க.கணேஷ், தெரிவத்தாட்சி அலுவலர்,
[illegible]

## நம்பி, நம்பிக் கெட்டோம்.......

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரக் கட்சி, தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மகா தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகாவைச் சந்தித்தனர். அரசின் முழு ஆயுட் காலமான நான்கு வருடங்களுக்கும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றப் பிரதிநிதிகள் யாவரும் சுதந்திரக்கட்சி அரசை ஆதரிப்பர் என சேர் ஒலிவரிடம் தந்தை செல்வா தெரிவித்துக் கொண்டார். ஆனால், சேர் ஒலிவர் டட்லி சேனநாயக்காவை அரசு அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சி அரசை அமைத்தது. சிம்மாசனப் பிரசங்கத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியின் உதவியின்றி ஒரு நாளுக்காவது அரசைத் தக்கவைக்க முடியாது என்பது உண்மையான நிலையாக இருந்தது. மீண்டும் இரு கட்சிப் பிரமுகர்களும் தமிழரசுக் கட்சித் தலைவர்களை அணுகினர். சுதந்திரக்கட்சித் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசை ஆதரிக்க வேண்டாமென்றும் சுதந்திரக்கட்சி அரசை அமைக்கின்ற பொழுது பண்டா - செல்வா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவார்கள் என்றும் அழுத்தமான வாக்குறுதி அளித்தனர். தந்தை செல்வா சுதந்திரக்கட்சித் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகளை நம்பினார். சிம்மாசனப் பிரசங்கம் (THRONE SPEECH) தோற்கடிக்கப்பட்டது.

மீண்டும் தேர்தல் 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. அத்தேர்தலில் தம்மை ஆதரித்தால் பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்துவார்கள் என சுதந்திரக்கட்சித் தலைவர்கள் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறினர். தந்தை செல்வா அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்.

"தேர்தலில் அமோக வெற்றிபெற்று, தமிழரசுக் கட்சியின் உதவியின்றி அரசு அமைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அச்சந்தர்ப்பத்தில் சுதந்திரக்கட்சி என்ன செய்யும்? " என்ற கேள்வியைத் தந்தை செல்வா மிகப் பவ்வியமாகக் கேட்டார்.

அவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டால் கூட தமது வாக்குறுதியிலிருந்து விலக மாட்டார்கள் என்று சகல சுதந்திரக்கட்சித் தலைவர்களும் கூறினர். இரண்டு காரணங்களுக்காக பண்டா - செல்வா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்று அவர்கள் சபதம் செய்தனர். முதலாவதாக, இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதனால் இலங்கையைக் கட்டியெழுப்பலாம் என்ற காரணத்தை முன்வைத்தனர். இரண்டாவதாக, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விசுவாசமாக, தங்களை ஆதரித்தமைக்காக உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவோம் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்தனர். தந்தை செல்வா அவர்களது வாக்குறுதியை நம்பினார். வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களில் வதியும் தமிழர்களை சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்கும் வண்ணம் வேண்டிக்கொண்டார்.

தேர்தலில் சுதந்திரக்கட்சி அமோக வெற்றி பெற்றது. சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானார். வெற்றிபெற்ற பின் சுதந்திரக் கட்சிப் பிரமுகர் எவரும் தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் கதைக்கவே மறுத்துவிட்டனர்.

### ஏழாவது படலம்

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் தொங்கு நாடாளுமன்றமே ஏற்பட்டது. இரு கட்சியினரும் மாறி மாறித் தமிழரசுக் கட்சியினருடன் கதைத்தனர். "முப்பது வருட அரசியல் வாழ்க்கையில் நான் கொடுத்த வாக்குறுதியை மீறவில்லை" என்று தனது நம்பகத்தன்மையை விளம்பரப்படுத்தினார் டட்லி சேனநாயக்கா. எழுத்துமூல வாக்குறுதிதரும்படி தந்தை செல்வா கேட்டுக் கொண்டார். டட்லி - செல்வா உடன்படிக்கை கைச்சாத்தானது. அவ்வுடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காகவே தமிழரசுக் கட்சியின் திருச்செல்வம் அமைச்சராக்கப்பட்டார். அந்த உடன்படிக்கையையும் கைவிட்டுவிட்டனர் பேரினவாதிகள்.

### மீண்டும் நம்பிக்கை

இவ்வாறு நம்பி நம்பி ஏமாறிய படலங்கள் ஏராளம். முருங்கை மரத்தில் ஏறும் வேதாளத்தை மீண்டும் மீண்டும் பிடித்துவரும் விக்கிரமாதித்தன் போல 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரையும் தீர்வெதுவும் எட்டாமல் ஓடிவிடும் பேரினத் தலைவர் பின்சென்றார் செல்வநாயகம். ஒவ்வொரு முறையும் நம்பினார்; ஒவ்வொரு முறையும் ஏமாற்றப்பட்டார்; தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு வழியொன்றும் தெரியாது திகைத்து நின்றார். அச்சூழ்நிலையில் தான் "ஆண்டவன்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று இறைஞ்சி நின்றார்.

யுத்தத்தின் பின் பொதுப் பிரச்சினைகளே தவிர ஓர் இனத்திற்கென்று பிரத்தியேகப் பிரச்சினைகள் ஏதும் இங்கு இல்லை, எல்லோரும் ஒற்றுமையாகிவிட்டோம் என்று பரப்புரை செய்யப்படுகின்றது. இரத்த ஆறு ஓடியதனால் பேரினத் தலைவர்கள் மனம் மாறுவார்கள் என்றும் தமிழர்களின் நியாயமான உரிமைகளை இம்முறை வழங்குவார்கள் என்றும் தமிழர் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் ஆற்றைக் கடக்கும் வரை உரிமைகளை வாரி வழங்குவோம் என்பர். தேர்தல் முடிந்தபின் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறமாட்டாது என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

### பகிஷ்கரிப்போர்

முன்னைய போராளிகள் ராஜபக்ஷவை நம்புகின்றனர். கூட்டமைப்பு பொன்சேகாவை நம்புகின்றது. இவ்விருவருக்கும் வாக்களிக்க விரும்பாதவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள்தான் தேர்தலைப் பகிஷ்கரிப்போம், வாக்குகளைப் பழுதாக்குவோம் எனக் குரல்கொடுப்போர். அவர்கள் சிறு தொகையினராகவும், இருக்கலாம். பகிஷ்கரிப்பு வேண்டாமென வாக்குகளைப் பழுதாக்க வேண்டாமென வேண்டுகோள் விடுக்கப்படவில்லை. ஆனால் சிவாஜிலிங்கத்துக்கு வாக்களிக்கவேண்டாமென ஆணை இடப்பட்டுள்ளது.

இராமன் மாயமானைப் பொன்மான் என்று எண்ணி பிடிக்கச் சென்றான். சீதையை (அரசியல் உரிமைக்கு குரல் கொடுப்போரை) காத்து நிற்கும்படி கூறிச் சென்றான். இங்கு, 'மாயமானல்ல, பொன்மானே. அதனைப் பிடித்தே திருவோம் நீ எதற்குக் காவல்? என்ற தோரணையில் சிவாஜிலிங்கத்திற்கு வாக்களிக்க வேண்டாமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவு வேதனையிலும் முடியலாம். "யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை முடித்தோம், தேர்தலின் மூலம் தமிழரின் உரிமைக்குரலை முடித்தோம். அபிவிருத்தியை முன்னெடுப்போம். நாட்டை முன்னேற்றுவோம்" என்ற குரல் மட்டும் கேட்கத்தான் செய்யும். 'பழைய குருடி கதவைத் திறவடி' என்று தமிழர்களைத் தட்டிப் பார்ப்பார்கள். அதன் பின்விளைவை மறுதலிக்கத் தாக்கமான வாக்குகளை சிவாஜிலிங்கம் பெற்றிருக்க வேண்டும். தமிழர்கள் விரும்பும் நியாயமான அரசியல் உரிமைகள் வழங்கப்படாவிட்டால் கிளர்ந்தெழுவதற்கு ஒரு தொகையினர் தயாராகவே இருக்கின்றனர். அதனால் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற எண்ணம் பேரினத் தலைவர்களுக்கு விதைக்கப்பட வேண்டும். நம்பிச் சென்றவர்களுக்குக் கைகொடுக்கும் சக்தியும் அரசியல் உரிமைக்கு குரல் கொடுப்போருக்குண்டு. ஆகவே, தேர்தலைப் பகிஷ்கரிப்போர், வாக்குகளைப் பழுதாக்குவோர் அவ்வாறு செய்யாமல், தமிழருக்கு அரசியல் உரிமை வேண்டுமெனப் பகிரங்கமாக முழங்கும் சிவாஜிலிங்கத்தை ஆதரிக்க வேண்டும். அது வருங்காலத் தமிழர் சந்ததிகளுக்குச் செய்யும் கடமையாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...ள்ளதா தொடர்ந்து படியுங்கள்.
...ாடிருந்தேன். சிறிது தூரத்தில் மக்கள் கூட்டமாக வீதியில் திரண்டு

...ார்த்த எனக்கு ஒரே பதற்றம். ஏதாவது வீதி விபத்து
...ந்துவிட்டதோ அல்லது சில மாதங்களின் முன்னர் வீதிகளில்
...ந்திருந்த துப்பாக்கிச் சூடோ? எதற்கும் அருகில் சென்று
...னாவியபோது ஒருவரிடம் ''அண்ணே என்ன நடந்தது?''
...பறொன்றும் இல்லத்தம்பி ஒருவர் சீன்போட மற்றவர்
...மெடுக்கிறார்.'' எனக்கு ஒன்றுமா விளங்கல்ல. ''சரி'' என்றுவிட்டு
...னக்கூட்டத்தின் மேலால் எட்டிப் பார்த்தேன்.
அட என்ன அதிசயம்! ஒரு சிறிய குரங்கார் வித்தைகாட்ட
...ாகபாம்புகள் சில படமெடுத்தன. இதைப் பார்த்து இரசிக்கவே
...க்கள் படை எடுக்கின்றன.
...தற்போது தென்னிலங்கையில் இருந்து வரும் குரங்கு
...காரர்கள் யாழ்.நகரின் பல வீதிகள்தோறும் தமது வித்தைகளைக்
...னர்.
...ாதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைக்கிறது.




...நடந்தது என்று நீங்கள் சிந்தித்து
...ப்பது எமக்குப் புரிகிறது.
அந்த மண்டபத்தின் மேடையில்
...நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்கு மூன்று
...விரிவுரையாளர்களும், நிகழ்விற்குத் தலைமை வகிப்பவரும்
அத்துடன் மண்டபத்தின் பார்வையாளர் பகுதியில் சுமார் 8
...பேர் மட்டுமே உட்கார்ந்திருந்தனர்.
இந்த விடயம்தான் அதிர்ந்து போகவைத்தது.......
யாழ்ப்பாணத்தில் அதிஉயர் கல்விச்சாலையினை
...ருவாக்குவதற்குத் தன்னை அர்ப்பணித்த ஒரு மகான்
...ல்விக் கொடைவள்ளலின் நினைவு தினத்தில்
...ங்குகொள்ளும் பார்வையாளர்களின் எண்ணிக்கை இதுவா?
...னைக்கும்போது வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.
இந்த நிகழ்வில் அதிகளவிலானவர்கள்
...ங்குகொள்ளாமைக்கு ஏது காரணமாக இருக்கலாம்?
...கழ்வின் ஏற்பாட்டாளர்கள் உரிய தகவலை மாணவர்கள்
...த்தியில் வழங்கி அவர்களை ஒன்று திரட்டாமல்
...ட்டார்களா? அல்லது தகவல் கிடைத்தும் மாணவர்கள்
...சண்டையாக விட்டுவிட்டார்களா? இது
...நபுறமிருக்கட்டும்.
அந்தக் கல்விச்சாலையில் நடைபெறுகின்ற ஆடம்பர,
...ியாட்ட நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானவர்கள்
...துகொள்வ... அதீத ஆர்வம் காட்டுகின்றார்கள்,
அத்தகைய ஆர்வத்தினை இத்தகைய வரலாற்றுப்
...ருந்தகைகளை நினைவு கூறுகின்ற நிகழ்வுகளில்
...டாமல் விடுவதுதான் மனவேதனைக்குரியது.....
இனிமேலாவது இத்தகைய விடயங்களில் தாம்
...கறையுள்ளவர்களாக எமக்கு வரலாற்றுப்
...க்கிஷங்களைத் தந்து மறைந்துள்ள பெரியார்களின்
...னவு தினங்களில் தவறாது கலந்துகொண்டு அவர்தம்
...களுக்கு மதிப்பளிக்க இளம் சமூகம் முன்வர வேண்டும்.
...காலத்தின் தேவை மட்டுமல்ல; வரலாற்றுக்
...மையுமாகும்.

கவிநேசன்

# ...டிய நாடகங்கள் பற்றி...

வித்துவானின் ''சத்யம்-சிவம்-சுந்தரம்'' என்னும் நாட்டிய நாடகம் சிவன், உமை, ஸ்கந்தன் ஆகியோரின் சிறப்பினைக் கூறுபவை. இப்பகுதியில் நாட்டிய நாடகத்திற்கு அழகூட்டும் அம்சங்கள் காணப்படுகின்றன. எம்பெருமானின் சிறப்புகளைக் கூறும் பகுதியினூடாக அவர் ஆடிய 7 வகைத் தாண்டவங்கள் பற்றியும் அதன் சந்தர்ப்பங்கள் பற்றியும் பாடியிருக்கிறார். ''தோற்றம் துடியதனில்....'' என்ற உண்மை விளக்கப் பாடலில் ஆரம்பித்து கானடா ராகத்தில் ஏனைய ஆறு தாண்டவங்களைப் பாடியிருக்கிறார். இது ஒரு சப்த தாண்டவக் கீர்த்தனையாக அமைந்திருப்பது இதன் விசேட அம்சமாகும். இதே நாட்டிய நாடகத்தில் சக்தியின் சிறப்புக்கூறும் பகுதியினூடாகத் தேவியை நவரஸத்தில் நாயகியாக்கி நவரஸங்களையும் அதன் இலட்சணங்களையும் ராகப் பொருத்தத்துடன் வெளிப்படுத்தியிருக்கிறார். இதே பகுதியில் முருகனின் சிறப்புக்கூறும் பகுதியை சப்தமாகப் பாடியிருக்கிறார். சப்தங்கள் இராகமாலிகையாகவும், மிஸ்ரசாபு தாளத்தில் இரண்டுக்கு மேற்பட்ட கண்டிகைகளாக இறைவன் புகழ் பாடுவதாக அமைக்கப்பட்டிருக்கும். அதுபோன்று சப்தத்திற்குப் பெயர்போன காம்போதி ராகத்தில் முருகனின் சிறப்புக்களைச் சப்தமாகப் பாடியுள்ளார்.

(வளரும்)

நாட்டியக் கலாவித்தகர் உ.மகேஸ்வரி
உடுவில் தெற்கு.

# கர்மமும் மறுபிறப்பும்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

கு.கோபிராஜ், சண்டிலிப்பாய்.

புத்தர், கடந்த கால செயலினால் மனிதர் கொலைகாரன், கள்வன், பொய்யன், வேசியர் போன்றவர்களாக பிறக்கின்றனர். புத்தர் தனது வாழ்வில் ஒரு முறை தேவதத்தன் என்பவனின் கல்லடியினால் காலில் காயப்பட்டார். இதற்கு காரணம் முற்பிறப்பில் தான் செய்த ஏதோ ஒரு வன்செயலும் அத்துடன் தேவதத்தனின் செயலும்சேர்ந்து கன்ம காரியப்பட்டது என்றார். இனி ஒருவன் விதைத்த விதையை எல்லாவற்றையும் அறுவடை செய்தேயாக வேண்டுமா? என்பது கேள்வி. இதற்கு அங்குத்தர நிகாயாவில் புத்தரது பதில் விதைத்ததை அறுவடை செய்தே ஆக வேண்டும். இருப்பினும் பௌத்த மதம் ஒருவரது கர்ம வினையே செப்பனிட தகுந்த சந்தர்ப்பம் கொடுக்கின்றது.

உ+ம்:- அங்குலிமாலானின் வாழ்க்கை அங்குலிமாலா ஒரு கொலைகாரன், வழிப்பறிக்கள்வன் இவன் மனிதரை கொன்று விரல்களை மாலையாக போட்டு இருந்த அவனே புத்தரது உபதேசத்தால் ஞானியாக மாறினான். பழைய கர்ம வினைப்படி அசோகன் கலிங்கத்து போரிலே பலரைக் கொன்றான். ஆனால் நிகழ்கால கர்மத்தின் படி தர்ம அஷோகனாக மாறியதாக பௌத்தம் கூறுகிறது.

உழைப்பு என்பது முயற்சி. ஒருவன் உழைத்து உழைத்து கடனை குறைத்து விடுகின்றான். பின் பணத்தை சேர்க்கிறான். அதேபோல ஊழினால் துன்பப்படுகின்றவன் முயற்சி செய்யாமல் இருந்தால் அதிக துன்பத்திற்கு ஆழாவான். முயற்சி செய்ய அதற்கேற்ப தண்டனையும் குறையும்.

நாம் இந்தப் பிறவியில் நடத்தும் வாழ்க்கை முந்தைய பிறவியில் நாம் செய்த வினைகளை பொறுத்தது. நமக்கு அடுத்த பிறவியில் கிடைப்பவை நாம் இப்போது செய்யும் வினைகளைப் பொறுத்தது. நமது முற்பிறவியில் செய்தவற்றால் கிடைக்கும் பலனை தவிர்க்க முடியாது. மாற்றவும் முடியாது. இதற்கு லௌகீகமான உதாரணத்தைக் கூறலாம். நாம் பணம் சம்பாதித்து சேமித்து வங்கிக் கணக்கில் போடுகின்றோம். நாம் எப்படி சம்பாதிக்கின்றோம் என்றோ? எப்போது போட வேண்டும் என்றோ? எப்போது திரும்ப எடுக்க வேண்டும் என்றோ வங்கி முகாமையாளர் சொல்வதில்லை. ஆனால் நாம் போடுவதை ஏற்றுக் கொள்ளவும் ஏஜெட்டின் கையெழுத்து வேண்டும்.

எடுத்த பணத்தை எப்படி செலவு செய்கின்றோம் என்பது வங்கி முகாமையாளரின் பொறுப்பல்ல. நாம் அந்தப் பணத்தில் தான தர்மம் செய்யலாம். அல்லது வியாபாரம் செய்து பணத்தை கூட்டலாம். பந்தயம் ஆடி தோற்றுவிடலாம். அதன் பலன் மறுபடி வங்கி கணக்கில் ஏறுகிறது அல்லது இறங்குகிறது. அதை மட்டுமே வாங்கி முகாமையாளர் பதிவு செய்கிறார். ஆனால் இந்தப் பாதிப்பு அவருக்குத் தெரியும். ஆனால் அவர் இதை ஏற்பதோ தடுப்பதோ இல்லை.

இதைப் போலவே கடவுள் நமது வாழ்வில் செயற்படுகின்றார். நமது காரியங்களின் நன்மை தீமைகளை அவர் கணக்கில் வைத்து வகுத்து கொள்கிறார். நாம் அதனால் நன்மை பெறுவதாகும். அவர் வசதி செய்து தருகின்றார். ஆனால் பலனை அடையும் பொறுப்பு நம்முடையது.

விளக்கை ஏற்றித் தருவது கடவுளின் கடமை அதனை ஞானநூலை படிக்கவோ, சீட்டாட உபயோகிப்பதோ நம்முடைய வசம் தான் இருக்கின்றது. கடவுள் எங்கும் வியாபித்துள்ள சக்தி. அவர் நமக்கு உடம்பு, உள்ளம், சூழ்நிலை எல்லாவற்றையும் கொடுத்துள்ளார். அதனை நல்ல முறையில் பயன்படுத்துவது நம் கையில் தான் உள்ளது.

நமது வாழ்வை ''பிறிட்ஜ்'' விளையாட்டுக்கு ஒப்பிடுகின்றார் பேராசிரியர் ராதகிருஷ்ணர். இவ் விளையாட்டில் நமக்கு கிடைக்கும் சீட்டுக்களைப் போல நமது பழவினைகளை வைத்துக் கொள்ளலாம். இச்சீட்டுக்கள் நாம் நம் விருப்பப்படி தேர்ந் தெடுப்பதில்லை சீட்டுக்களை தேர்ந்தெடுக்க எமக்கு உரிமை இல்லாவிடினும் அச்சீட்டுக்களைக் கொண்டு வெற்றி, தோல்வி ஈட்டும் வாய்ப்பு நமக்குண்டு. இதைப்போலவே பழவினையை தெரிந்தெடுக்க அதிகாரம் இல்லாவிடினும் அதை வைத்தது போலே ஆக்கவோ அழிக்கவோ யாவும் நமது கையிலேயே உள்ளது.

கர்மங்களைச் செய்யும் போது அதை ஒரு பாரமாகவோ சுமையாகவோ கருதிச் செய்யாமல் அது ''கடவுளினால் இட்ட கட்டளை'' எனும் பாவனையில் மனத் திருப்தியோடு செய்ய வேண்டும். கிருஸ்ணன் ''நான் கர்மத்தைச் செய்து கொண்டு தான் இருக்கிறேன்'' எனும் தத்துவத்தை விளக்குகின்றார். இதில் மனித அவதாரமாகவோ, ராமனாகவோ, வாமணராகவோ, பலராமனாகவோ, பரசுராமனாகவோ, கிருஸ்ணராகவோ தோன்றி கர்மங்களுக்கு தன்னையும் ஆழாக்கி அருள் புரிந்துள்ள ஸ்ரீமத் நாராயணன் ஆவார். கிருஸ்ணர் அருச்சுனனை நோக்கி ''கர்மங்களை எல்லாம் எனக்கு அர்ப்பித்து சித்தத்தை சைதன்யத்தில் வைத்து ஆசைகளையும் நான் எனும் மமதையையும் அகற்றி மனக்கொதிப்போ கலக்கமோ இன்றி போர்புரிந்து உன்கடமையை ஆற்றுவாயாக'' என்று பகவான் அர்ச்சுனனுக்கு போர்க்களத்திலே உபதேசித்தார். வினையை விலங்காக பேசுவது வழமை. தீவினையை இரும்பால் செய்த விலங்காகக் கொண்டால் நல்வினையை பொன்னால் செய்த விலங்காகக் கொள்ளலாம்.

பற்றோடு கர்மங்களைப் புரிபவன்

பாமரன் அல்லது சாதாரண மனிதன். பற்றற்று கன்மங்கள் புரிபவன் ஞானி அல்லது யோகி ''கர்ம'' ,''அகர்ம'' , ''நகர்ம'' என 3 சொற்கள் உண்டு.

கர்ம - நல்ல செயல்

அகர்ம- தீய செயல்

நகர்ம- ஒன்றுமே செய்யாமல் சும்மா இருப்பது ஆகும்.

மேலும் பற்றற்ற வினை தான் பிறப்பை ஒழிக்க வழி அதாவது நல்வினையைத் தான் வைத்தேன் என்றவாறு செய்யாது அதன் பலனை எதிர்பாராது எல்லாம் திருவருள் என்ற [illegible] பற்றற்ற வினையாகும். இதனை [illegible] மேலானதாகக் கொள்கிறது. கர்ம பலன்கள் தம்மை அணுகாமல் செய்வதற்கு இதுவே வழியாகும். தீவினைப் பயன்களில் வெறுப்பும் நல்வினைப் பயன்களில் விருப்பும் கொள்ளாத ஒரு நிலையை அடையவேண்டும். இது தான் சைவ சித்தாந்த இருவினையொப்பு என்ற பெயரால் குறிப்பிடுகின்றது. துன்பம் பலவற்றையும் துடைக்க இதுவே வழி. மூலகை விளக்கமும் விதியை ஒப்புக் கொள்வதனால் முயற்சிக்கு இடமில்லை என்பது பொருந்தாது. பற்றற்ற வினையே நல்வினையை விட மேலானது பிறப்பை அழிக்கும் ஒரே வழி ஆகும்.

**விதியின் பயணம்**

யதார்த்தத்தில் விதியின் ஒத்துழைப்பு முக்கால் பங்கு, முயற்சி கால் பங்கு இந்துக்கள் பெரும்பாலும் கூறுவார்கள். எல்லாவற்றுக்கும் கால நேரம் வரவேண்டும் இதில் இதற்கு என்ன காரணம்? இன்ன காரியங்கள் உனக்கு இன்ன காலங்களில் நடக்கும் என விதிக்கப்பட்டு இருக்கின்றது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஹிட்லருக்கு இருந்த ஆயுதபலமும் வேறு எந்த நாட்டிலும் இல்லை. ஒரே நாளில் போலந்தைப் பிடித்தான் வெறும் மிரட்டலிலே தான் செக்கோஸ் வாலியாவை பிரபுத்தான் அவன். விரும்பியிருந்தால் ஆறு நாள்களில் ஐரோப்பாவையும் பிடித்திருக்கலாம். வெறும் வாய் வேட்டுக்களை விட்டுக் கொண்டு இருந்த சர்ச்சிலை அவன் கனடாவுக்கு துரத்தியடித்திருக்கலாம் அகில ஐரோப்பாவைப் பிடித்துவிட்டால் உலகத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு காலனிகளாக இருந்த ஆசியா,ஆபிரிக்கா, அரேபிய நாடுகள் அவன் கைக்கு இயற்கையாகவே வந்திருக்கும். இது சுலபமாக நடக்கக்கூடியது. ஆனால் ஹிட்லரின் விதி ஹிட்லரின் ஆணவத்தையே ஆட்சி புரிந்தது.

பிரிட்டனை ''கோழிக்குஞ்சு'' என்று அவன் கேலி செய்து விட்டு ''யானையை சாப்பிட்டால் தான் என் பசி அடங்கும்'' என சோவியத் யூனியனுக்குள் நுழைந்தான். அவனது சவக்குழி அங்கே தான் தோண்டப்படுகிறது என்று விதி சிரித்தது. சோவியத் யூனியனின் பருவகாலத்தில் அவன் சக்தி சிக்கி இழுபட அமெரிக்காவும் பிரிட்டனும் தங்களைத் தயார் செய்துகொண்டு விட்டன. எச்சரிக்கையாக இருந்திருந்தால் உலகத்தையே ஆண்டு இருக்கக் கூடிய ஹிட்லர் தன் பிணத்தை கூட பிறர் பார்க்க முடியாதபடி இறந்து போனான். உலக வரலாற்றை கடந்து நோக்கும் போது இது புரிந்து கொள்ளப்பட்டது.

''நினைப்பவன் நீ; முடிப்பவன் அவன்''

இந்துக்களின் தத்துவத்தில் இது முக்கியமானது. பிச்சைக்காரி ராணியான கதையும், ராஜா பிச்சைக்காரனான கதையும் அதிர்ஷ்டம் என்ற பெயரிலோ துரதிர்ஷ்டம் எனும் பெயரிலோ விதியின் பரிசளிப்பாகும். ராமனையும் விதி ஆண்டது. சீதையையும் விதி ஆண்டது. சோழ நாட்டுக் கோவலனின் விதி மாதவியின் மயக்கத்தில் இருந்தது. கண்ணகியின் விதி மதுரையிலும், பாண்டிய நெடுஞ் செழியனின் விதி ஒரு காற்சிலம்பில் அடங்கியிருந்தது. யூலியஸ்சீசரின் விதி சொந்த நண்பரின் கையில் இருந்தது. நெப்போலியனின் விதி அவனது பேராசையிலும், காந்தியின் விதி கோட்சேயின் கைத்துப்பாக்கியிலும் அடங்கியிருந்தது. கடவுள் இல்லை என்று வாதிடுவோரை நீண்ட காலம் வாழவேண்டும் என இறைவன் ஏன் விதிக்கின்றான்? தங்கள் கொள்கைகள் தங்கள் கண்முன்னாலே தோல்வியடைவதைக் கண்டு சாக வேண்டும் என்பதற்காகும்.

எனது அனுபவத்தின் உண்மையாது எனின் மதியையே விதிதான் ஆட்சி செய்கிறது. சக்தியும் சிவனும் பூமியில் பல வேடங்களில் பிறந்ததாக இந்துக்கலைகள் கூறுவது இறைவன்

தானும் விதிக்கு ஆட்பட்டு அதன் சுவையை அனுபவிக்கின்றான் என்பதைக் காட்டுவதேயாகும்.

ஒரு மாணவன் பரீட்சைக்கு நன்றாகப் படிக்கிறான், சிறந்த கெட்டிக்காரன், அவன் அனைத்துப் பாடத்தையும் சிறப்பாக கற்று முடித்து பரீட்சைக்கு தயாராக உள்ளான். பரீட்சைக்கு முதல் நாள் நோய் வாய்ப்பட்டு பரீட்சை எழுத முடியாமல் போகின்றது. இது அவனது கன்மமேயாகும். இன்னொரு மாணவன் பரீட்சையில் சிறப்பாக எழுதி அதன் சிறந்த பெறுபேற்றுடன் காணப்படுகின்றான். இறுதியாக மாணவ நிலையைத் தீர்மானிக்கும்போது பட்டப்படிப்பை மேற்கொள்ளும்போது மாணவன் நான்கு வருடத்தில் சிறப்பாகக் கற்று சிறந்த பெறுபேற்றுடன் காணப்பட இறுதியாக புதிய கல்வி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விடய அறிவை அறியாமல் போதல் அதற்கேற்ப தன்னையும் தனது பாட நெறியையும் தீர்மானிக்கத் தவறுகிறான் இது அவனது கன்மமே அகும். ஒருவன் உயர் பதவிக்கு விண்ணப்பிப்பதும் அது சில காரணங்களால் தவறிப்போவதும் இன்னொருவர் வேலை தேடி பல நேர்முக பரீட்சைக்கு செல்வதும் அனைத்து நேர்முகப்பரீட்சையிலும் தோல்வியடைந்தால் அது அவரது கன்மமே ஆகும்.

ஆபிரகாம் லிங்கனது வாழ்வின் அனைத்தும் தோல்வி - எதை எடுத்தாலும் அவரால் எதையும் ஜெயிக்க முற்காலத் தில் முடியவில்லை. ஆனால் பின்னர் ஜனாதிபதியானார் இதுவும் அவரது கன்மமேயாகும். (நிறைவு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் 2006 இல் கைதான

## பாஷையூர் யுவதிக்கு எதிரான வழக்குகள் தள்ளுபடி

யாழ்ப்பாணம்.ஜன.16

பயங்கரவாத மற்றும் அவசரகாலத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அம்பாந்தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண யுவதியின் வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

பாஷையூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மரியதாஸ் நந்தசுயா (வயது 28) என்பவரது வழக்கே யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜாவினால் போதிய சாட்சிகள் இன்மையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெண்ணின் கைது தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றில் 3 வழக்குகளும், அம்பாந்தோட்டை நீதிமன்றில் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகளில் யாழ்.மேல்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது போதிய சாட்சிகள் இன்மையால் நீதிபதி வழக்குகளைத் தள்ளுபடி செய்தார். எனினும் அம்பாந்தோட்டை நீதிமன்றில் பதிவு செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

(1-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**துரைராசா சரஸ்வதி**

தோற்றம்
08.04.1936

மறைவு
15.12.2009

(93886)

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த
உங்கள் நினைவுகளும்
இல்லத்தின் வளர்ச்சிக்காய் வழிகாட்டிய உங்கள் வாழ்வும்
முப்பதியொரு நாள்கள் போனால் என்ன? ஏழேழு ஜென்மங்கள்
ஆனாலும்
அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்.......!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாரதிபுலம், கலாசாலை வீதி,திருநெல்வேலி.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் சக ஆசிரியர்
திரு.திருவிளங்கம் ஐங்கரன்
அவர்களின் தந்தையார்

**அமரர் இளையதம்பி திருவிளங்கம்**

(இளைப்பாறிய நடத்துனர்,இ.போ.ச.)

அவர்களின் 23ஆம் நாளில் எமது நினைவஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ஊர்காவற்றுறை புனித மரியாள்
(றோ.க) ம.வித்தி.

(93861)

## 6ஆம் வருட நினைவுப் பூக்கள்

அவனியில்
28 ★ 10 ★ 1924

ஆண்டவன்
அடியினில்
16 ★ 01 ★ 2004



**திருமதி லில்லி கிறேஸ் தேவசகாயம்**

எங்கள் இதயக் கோயிலில்
கொலு வீற்றிருக்கும் அம்மா!
தூண்டா மணிவிளக்காய் -நீயிருந்து
எம் வாழ்விற்கு ஒளியூட்டிடுவாய்

(93875)

28, நக்கா லேன்,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

கணவர்,
பிள்ளைகள்.

## தேவை

ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கும்

★ பிலிப்நேசிங்ஹோம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
★ சன்றைஸ் மெடி கிளினிக், பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

என்பனவற்றுக்குப் பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை.

01. தாதியர் (பயிற்றப்பட்ட) - பெண்
02. தாதிய உதவியாளர் (பழக விரும்புபவர்கள்) - பெண்
03. மேற்பார்வையாளர் - ஆண் (40வயதுக்கு மேல்)
04. வரவேற்பாளர் - (பெண், கணனி அறிவுள்ள A/L படித்த)

(மாநகர சபை எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது)

நேர்முகத்தேர்வு :- *17.01.2010 ஞாயிறு காலை 9மணி முதல் 12மணி வரை*

இடம் :- சன்றைஸ் மெடி கிளினிக்,
பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

(C/564036)

## கல்விச் சேவை

விவேகானந்த அக்கடமி, பலாலி வீதி, இல 3, 2ஆம் ஒழுங்கை, யாழ் நகரில் ஜேர்மன் டொஜ், நெதர்லாந்து டச், பிரெஞ், ஆங்கில மொழி வகுப்புக்களுக்கான பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன்.

விவரங்களுக்கு: 0213216928, 0771040805, 0779927117.

(93872)

## தவறிவிட்டது

பண்ணாகம், சுழிபுரம் என்னும் முகவரியுடைய சிவரத்தினம் ஜெயகாந்தன் என்பவரின் தேசிய அ.அட்டை (793402244V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(93881)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

வேள்ட்விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அச்செழு கிராம அலுவலர் பிரிவில் போயிட்டி கிராமத்திலும், புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் கிராமத்திலும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் அண்மையில் நடத்தப்பட்டன.

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.தபேந்திரன் இதில் கலந்து கொண்டு அரச துறை நிறுவனங்கள் பொதுமக்களுக்கு இலவசமாக எத்தகைய சேவைகளை வழங்குகின்றன என்ற விடயம் குறித்த விழிப்புணர்வுக் கருத்துரையை வழங்கினார். போயிட்டி, திடற்புலம் ஆகிய கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

(04-224)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடு பிடிக்கும் தேர்தல் வன்முறைகளால் ஆபத்தான நிலைமை உருவாகும் சூழல்

## கடுமையாக எச்சரிக்கின்றது ஆசிய மனித உரிமைகள் குழு

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் கடந்த சில நாள்களில் வன்முறை மிகுந்ததாக மாறியுள்ளதை அவதானிக்கும்போது, அடுத்த இரு வாரங்களில் மீண்டுமொரு பயங்கரமான - ஆபத்தான - காலம் உருவாகும் அபாயம் தென்படுவதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் கடந்த சில நாள்களாகத் திடீரென மிகுந்த வன்முறையானதாக மாறியுள்ளது.

தங்காலை கொலை மற்றும் பொலன்னறுவ நகரில் அரசின் மூத்த அரசியல்வாதிகள் சிலரின் தூண்டுதலால் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

இரு சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளும் ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் உள்ளன.

முதல் சம்பவம் தென் மாகாணத்திலும், மற்றையது வட மத்திய மாகாணத்திலும் இடம்பெற்றமை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திட்டமிட்ட முறையில் வன்முறைகளைத் தூண்டுவதற் கான நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளமையைப் புலப்படுத்தியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை 1978 முதல் சகல தேர்தல்களும் பாரியளவு வன்முறைகளுடனேயே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல்கள் இவ்வாறான சூழ்நிலையிலேயே இடம்பெற்றுள்ளன.

எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தி அவர்களை வாக்களிக்கச் செல்லாமல் தடுக்கும் நிலைமையை உண்டுபண்ணுவதற்காகவே பிரசார காலத்தில் வன்முறைகள் திட்டமிட்ட முறையில் இடம்பெறுகின்றன.

மேலும் இது பாரியளவில் வாக்கு மோசடிகள் இடம்பெறவும் வழிவகுக்கின்றது.

கடந்த காலங்களில் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெறுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளில் காணப்பட்ட சகல அம்சங்களையும் தற்போதும் காணமுடிகின்றது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா விடுத்துள்ள அறிக்கை மூலம் அவரால் தேர்தல் சட்டங்களில் குறிப்பிட்டுள்ளபடி தேர்தலை நடத்த முடியாதளவிற்குத் தலையீடுகள் நிலவுவது புலனாகியுள்ளது.

(சி)

# இந்தோனேஷியப் படகில் உள்ளவர்களை பலவந்தமாக இறக்குவதற்கு முயற்சியா?

## தகவல் தவறானது என்கிறது அந்நாட்டு அரசு

கொழும்பு, ஜன. 16

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இந்தோனேஷியாவின் மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகிலுள்ள இலங்கையர்களை அந்த நாடு பலவந்தமாக இறக்கப்போவதாக வெளியான செய்திகளை ஜகார்த்தா நிராகரித்துள்ளது.

பேச்சுக்கள் மூலமாகவே அவர்களைப் படகிலிருந்து இறக்க முயற்சிக்கிறோம் என இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் வேளை தடுக்கப்பட்ட படகில் விடுதலைப்புலிகள் உள்ளனரா என்பதை உறுதிசெய்ய முடியவில்லை என அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை சில அதிகாரிகள் படகில் உள்ளவர்கள் விடுதலைப்புலிகளாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

படகில் உள்ளவர்களைப் பலவந்தமாக அதிலிருந்து இறக்க வேண்டியமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'என்னைப் பொறுத்தவரை பலவந்தமாக அவர்களை இறக்குவதே ஒரே வழி மனிதாபிமான வழிமுறைகள் பயனளிக்கவில்லை' என்று குடிவரவுத்துறையின் மூத்த அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னை இனங்காட்ட விரும்பாத இந்தோனேஷிய கடற்படை அதிகாரியொருவரும் படகில் உள்ள தமிழர்கள் தொடர்பாக தாம் பொறுமையிழந்து விட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(சி)

# பட்டாசு வெடித்து இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஜன.16

பட்டாசு தவறுதலாக வெடித்ததில் இருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈர்க்குவாண வெடிகளைக் கையில் வைத்திருந்தவாறு மற்றொரு வெடியைக் கொளுத்தியபோது அவை வெடித்ததில் கையில் காயமடைந்தார் ஒருவர்.

கச்சேரியடியைச் சேர்ந்த த.கருணாகரன் (வயது-47) என்பவர் பட்டாசு வெடித்துக் கண்ணில் காயமடைந்தார். கொட்டடியைச் சேர்ந்த ம.விதுசன் (வயது-12) என்ற சிறுவன் பாதிப்புக்கு உள்ளானார். இச் சிறுவர்கள் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-16)

# 4,288 வாகனங்களுக்கு வரி அனுமதிப் பத்திரங்கள்

நவாலி, ஜன.16

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த ஆண்டில் 4,288 வாகனங்களுக்கு வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் ஆயிரம் பேர் இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)

# அரசியல் வன்முறைகளை கண்டிக்கிறது ஹெல உறுமய

## குண்டர்கள் அட்டகாசம் குறித்துச் சீற்றம்

கொழும்பு, ஜன. 16

குண்டர்களைக் கொண்டு அரசியல் கட்சிகள் புரியும் தேர்தல் வன்முறைகள் காரணமாக இந்நாட்டு மக்கள் அனைவரும் சர்வதேசத்தின் முன்பாக வெட்கித் தலை குனியும் நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் அக்கட்சி நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. வண. ஒமல்பே சோபித்த தேரர் இப்படிக் குறிப்பிட்டார். அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை ஒழித்து நாம் பெற்ற வெற்றியை என்றென்றும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அது இந்நாட்டு மக்கள் அனைவரினதும் கட்டாய கடமையாகும்.

இதற்காக நாம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் அமைதியாகச் செயற்பட வேண்டும். மக்கள் விரும்பும் ஒருவரை ஜனநாயக ரீதியாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை நாம் மக்களுக்கு வழங்கவேண்டும்.

தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் குண்டர்கள் புரிந்துவரும் தேர்தல் வன்முறைகள் காரணமாக நாம் மிகுந்த கவலையடைகின்றோம். இந்நிலைமை காரணமாக எமது நாட்டு மக்கள் அனைவரும் சர்வதேசத்தின் முன்பாக வெட்கித் தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரிய பயங்கரவாதம் முடிவுற்ற நிலையில் சிறு சிறு பயங்கரவாதம் தலைதூக்க நாம் இடமளிக்கக்கூடாது. தேர்தலை மிகவும் சுதந்திரமானதாக நடத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இந்த விடயத்தில் அதிகூடிய கவனம் செலுத்துமாறு நாம் அரசிடமும், எதிர்க்கட்சிகளிடமும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றார். (சி)

# பத்திரிகையாளர்களுக்கும் கடும் அச்சுறுத்தல் நிலை

## ஊடகவியலாளர் பாதுகாப்பு அமைப்பு கவலை

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் தேர்தல் வாக்களிப்பு தினம் நெருங்கி வருகின்ற நிலையில் பத்திரிகையாளர்களும் கடும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர் எனப் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் பிரசாரம் மற்றும் வாக்களிப்பு நிலைமை பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் பத்திரிகையாளர்களுக்கு உள்ள பொறுப்பை சகல தரப்பும் மதிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ள நியூயோர்க்கைத் தளமாகக்கொண்ட இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொலன்னறுவையில் பி.பி.ஸியின் சிங்கள சேவையின் செய்தியாளரான பெண்மணி தாக்கப்பட்ட சம்பவம் குறித்துப் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு ஆழ்ந்த கவலை வெளியிடுகின்றது.

விவசாய அமைச்சரின் ஆதரவாளர்களுடன் தொடர்புபட்ட அரசியல் கும்பலொன்று குறிப்பிட்ட செய்தியாளரை, அவர் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தாக்கியதாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் கள் அவரைத் துரத்தித் தடியால் தாக்கியுள்ளனர்.

தக்ஷிலா டில்ருக்ஷி மீதான தாக்குதலை நாங்கள் கண்டிக்கிறோம். அரசையும், அரசியல் கூட்டங்களை ஏற்பாடு செய்பவர்களையும், பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கோருகிறோம் எனப் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவின் ஆசியாவிற்கான ஒருங்கிணைப்பாளர் பொப் டையட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாடு விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திலிருந்து மீண்டுவரும் இந்த தருணத்தில் பத்திரிகையாளர்கள் தேர்தல் செய்தி சேகரிப்பில் அச்சுறுத்தலின்றி ஈடுபடக்கூடிய சூழலை சகல தரப்புகளும் உருவாக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

(சி)

# நோர்வேயின் முதன்மை வெளிநாட்டவராக இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் தெரிவு

நோர்வேயின் பத்து முதன்மை வெளிநாட்டவர்களில் ஒருவராக, தமிழரான பேராசிரியர் வேலாயுதபிள்ளை தயாளன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நோர்வே சமூகத்தின் சமூக, கலாசார மற்றும் தொழில்சார் விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய 10 முதன்மையான வெளிநாட்டவர்களை வருடந்தோறும் சுயாதீனமாக ஓர் அமைப்பு தெரிவு செய்து வருகின்றது.

16 வயதிற்கு மேல் நோர்வே நாட்டுக்குப் புலம்பெயர்ந்து மற்றைய வெளிநாட்டவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட வெளிநாட்டவர்களையே இந்த அமைப்பு தெரிவு செய்து வருகிறது.


இவ்வகையில் நோர்வே, பேர்கன் பல்கலைக்கழக பொறியியல்துறையில் பேராசிரியராகக் கடமைபுரியும் வேலாயுதபிள்ளை தயாளனை இவ்வமைப்பு 10 முதன்மையான வெளிநாட்டவர்களில் ஒருவராகத் தெரிவு செய்துள்ளது.

பேராசிரியர் தயாளன் 1984ஆம் ஆண்டிலிருந்து நோர்வேயில் வசித்து வருபவர். தாம் பிறந்த மண்ணையும், மக்களையும் நேசிக்கும் ஒருவரான இவர் பேர்கனில் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் அக்கறையோடு செயற்பட்டுவருவதோடு, பேர்கன் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் அதிபராகவும் சேவையாற்றி வருகிறார்.

இளைய சமூகம் பல்வேறு ஆளுமைகள் கொண்ட வளம்மிக்க சமூகமாக வளரவேண்டுமென்பதில் அக்கறையுடன் செயற்படும் பேராசிரியர் தயாளன் நோர்வே ரெச் அமைப்பின் தலைவராகவும் இருந்து தனது மண் வளம்பெற தனது பங்களிப்பைச் செய்துள்ளார். அத்துடன் நோர்வேஜிய அரசுக்கு, குடியேறியவர்களுக்கான விடயங்களில் ஆலோசனை வழங்கும் கிம் அமைப்பின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

தமிழர்களுக்குப் பெருமைதரும் விதத்தில் அமைந்துள்ள இத்தெரிவையிட்டு தமிழ் மக்கள், குறிப்பாக மாணவர் சமூகம் மகிழ்ச்சி அடைந்துள்ளது.






வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2010 ஆம் ஆண்டுக்கான முதலாவது போட்டியாக நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான கிராமங்களுக்கிடையே ஊடறுத்து ஓடும் போட்டி அண்மையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதில் கலந்து கொண்ட வீரர்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 07 . 1931



மறைவு 26 . 01 . 2009

### அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை

(முன்னாள் வர்த்தகர், முருகன் ஸ்ரோர்ஸ், மாவத்தகம & சுன்னாகம்)

திதி: பிரதமை

பாரினிலே பன்னிரண்டு மாதங்கள் கழிந்தாலும்
பாசங்கள் எம்மை விட்டு அழியா
பாசமுள்ள தந்தையே!- உம்மை
என்றும் நாம் மறப்போமா?

'மங்களம்',
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர். (93907)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நல்லதம்பி



(அராலி அம்மன் கோயிலடி)

அராலி கிழக்கு, அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நல்லதம்பி 11.01.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- செல்லி தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா- காலஞ்சென்ற இராசமுத்து ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இராசமலரின் பாசமிகு கணவரும் ஜெயசுதா (பிரான்ஸ்), ஜெயலதா, ஜெயசீலன் (இந்தியா), ஜெயபாலன், ஜெகதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்) பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும் சச்சின், சந்தோஷ், சங்கீத், பிரவீனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி செல்வ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை. (93902)

தகவல்:
குடும்பத்தினர்.

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.16

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் தரம் ஒன்று மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்கால்கோள்விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்விப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் இ.இராமச்சந்திரன் கலந்துகொள்வார். (ஒ-10)

* * *

யாழ்ப்பாணம், ஜன. 16


சுன்னாகம், ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையின்தரம் ஒன்று மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் கால்கோள் விழா நாளை மறுதினம்திங்கட்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. ரி.தயாபரராஜா கலந்து கொள்வார். ஆசியுரையை சிவத்திரு. சிவசண்முக வடிவேல் வழங்குவார்.

(ஒ-10)

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி தங்கம்மா (சங்கானை)



அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கானை, சிங்கப்பூர் ஆலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர் அமரர் A.T.V.கனகசபாபதி (A.T.வேலுப்பிள்ளை அன்சன்ஸ் - உரிமையாளர், சங்கானை) அவர்களின் அன்பு மனைவி தங்கம்மா நேற்று (14.01.2010) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை-பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், வீரவாகு (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர், உரிமையாளர், Uni Lanka Tea Traders, MI Grounf Mezzanine floor, Centre Supper market Complex, Colombo - 11, ஆலோசகர் Polo Traders, சங்கானை), இரத்தினேஸ்வரன் (ஓய்வுபெற்ற அதிபர், பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை), ஆறுமுகராஜா (இத்தாலி, ஓய்வுபெற்ற ஆசிரியர், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), தவதேவி, செல்வராணி, செல்வரத்தினம் (உரிமையாளர், சங்குசக்கரம் வியாபார நிலையம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரி, இராஜேஸ்வரியம்மா, இந்திராணி (இத்தாலி, ஓய்வுபெற்ற ஆசிரியை, சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்), சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், நில அளவையாளர் திணைக்களம்), விஜயநாதன், பூவர்ணமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் அரவிந்தன் (Q.A Consultant, Virvusa Indian Ltd, India), ஜெயந்தன் (Accounting Assistant VDO Partner Colombo), சுகிர்தராஜ் (இத்தாலி), சிந்துபாரதி (2nd Physical Education, University of Jaffna), மிதுனராஜ், திருமதி அன்ரன் யூனியஸ் இந்துஷா (இத்தாலி), சர்மிலா (4th Ayurvedic College, Jaffna), ஜெயமோகன் (G.C.E.- ஓமான்), ஜெயகீதன் (கணனித்துறை Meddle Sex University England), ஜெயராகன் (Queens land University of Technology Australia) சுருதிகா (பயிற்சி ஆசிரியர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), வீணுகா (முதலாம் வருடம் கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அகிபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கெனிஷாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.01.2010) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்தில்தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிங்கப்பூர் ஆலய வீதி,
சங்கானை. (சி/564135)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் லதுர்ஜிகாந்த் (லது)

(உரிமையாளர், வதனி ஜூவலறி, கொடிகாமம்)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் லதுர்ஜிகாந்த் நேற்று முன்தினம் (14.01.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினம்- காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் பாசமிகு பேரனும் சண்முகலிங்கம்- ஈஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் இதயரஞ்சினியின் பிரியமான கணவரும் சிவப்பிரியா (ஆசிரியை), மதிவதனி (ஆசிரியை- கொழும்பு), பிரதாப் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் செந்தில்குமரனின் (சிவகுமரன் ஜூவல்லறி, யாழ்ப்பாணம்) மைத்துனரும் சிவதேனுஜன், சுகிவர்ணவி ஆகியோரின் பாசமிகு மாமனும் துரைராஜசிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), தர்மகுலசிங்கம் (வதனி ஜூவலறி- சாவகச்சேரி), சகுந்தலாதேவி (அதிபர்), பாக்கியராஜா (முன்னாள் உத்தியோகத்தர்- பரந்தன் இராசயனக் கூட்டுத்தாபனம்), வசந்தகுமாரி (ஆசிரியை), சுப்பிரமணியம், நஞ்சனாதேவி (ஆசிரியை), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி- பாக்கியமலர் மற்றும் மகாதேவன்- சறோஜாதேவி, பாஸ்கரன் (ஆச்சாரியார்), திவ்யமலர் ஆகியோரின் பெறாமகனும் சிதம்பரநாதன் மரகதாம்பாள், தங்கேஸ்வரன்- இதயராணி ஆகியோரின் மருமகனும் திலீப்குமார், பிரியறஜனி, ஞானரதன், ஜெயப்பிரதீபா, அனுராதா, முகுந்தன், மஞ்சுசீத்தா, கோபன், கரன், லக்சி, தயானி ஆகியோரின் மைத்துனரும் அருள்பிரசாத், ஜெயப்பிரசாத், ஜான்சி, ரவி, மாலா, ராதா, சுதன், கிரிதரன், சிவாஜினி, கரன், பாமினி, வாணி, பிரபு, தாரணி, விமலேஸ்வரி, அனுசா, புஸ்பநாதன், இராசரத்தினம், கணேசன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற சந்தனம் மற்றும் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வகுமார், பன்னீர்ச்செல்வம், உதயகுமார், சசிகுமார், தமிழ்ச்செல்வி, பாஸ்கரன், மலர்விழி, செல்வராணி, உதயமலர், சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நேற்று (15.01.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கத்தானை,
சாவகச்சேரி. (93993)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண வானியல் இரவு - 2010 நிகழ்வு நேற்றுப் யாழ். பல்கலைக்கழக பிரதான விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நேற்று இடம்பெற்ற சூரிய கிரகணத்தை விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் ந.சண்முகலிங்கன் ஆகியோர் நவீன தொலைக்காட்டி மற்றும் விசேட பாதுகாப்புக் கண்ணாடிகள் மூலம் அவதானிப்பதையும் அமைச்சர் திஸ்ஸ விதாரண உரைற்றுவதையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம். நிகழ்வில், துணைவேந்தர் ந. சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி நா. சிவயோகன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் பார்ப்போரை ஆச்சரியப்பட வைத்த சூரிய கிரகணத்தையும் அதனால் உண்டான நிழலையும், இரண்டாவது வரிசைப்படங்களில் காணலாம். சூரிய கிரகணத்தைப் பாதுகாப்புக்கண்ணாடி பொருத்தப்பட்ட நவீன தொலைகாட்டிகள் மூலம் கண்டுகளிப்போரை இறுதி வரிசைப்படங்களிலும் காணலாம்.

(படங்கள் : உமா, சுகந்தன், லக்ஸ்மன்)

# வேகமாகப் பரவும் டெங்கு நோயைக் கட்டுபடுத்த அனைத்துத் தரப்பினரும் ஒன்றினைய வேண்டும்

## ஆலோசனைக் கூட்டத்தில் அரச அதிபர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன.16



டெங்கு என்னும் உயிர்கொல்லி நோய் யாழ். மாவட்டத்தை பெரிதும் உலுக்கி வருகின்றது. இதனை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அனைத்து அரச திணைக்களங்களும், பாடசாலைகளும், பொது அமைப்புக்களும், கீழ்மட்ட நிறுவனங்களும் ஒன்று திரளவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் நேற்று தெரிவித்தார்.

டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான அவசர கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரசாங்க அதிபர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேலும் தெரிவித் தவை வருமாறு:

2010 ஜனவரி முதலாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை 9 இறப்புகள் இடம் பெற்றுள்ளன. மேலும் 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய், நல்லூர் ஆகிய மூன்று பிரிவிலும் இதன் தாக்கம் கடுமையாக உள்ளது.

அதிலும் 2010 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான கணக்கெடுப்பின் போது யாழ்ப்பாணத்தில் 80 பேரும், சண்டிலிப்பாயில் 45 பேரும், நல்லூரில் 45 பேரும் கூடுதல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்- என்றார்.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் கூறுகையில், யாழ். மாவட்டத்தில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோய் பரம்பலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த ரீதியில் அனைத்து நிறுவனங்களும் துரித கதியில் செயற்பட வேண்டும்.

இதன் முதற்கட்டமாக சர்வதேச அரச சார்பற்றநிறுவனங்கள் இத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளனர். உள்ளூராட்சி நிறுவனங்கள் பாடசாலைகள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக வைத்தியசாலைகள் பாடசாலைகள், பாடசாலைச் சூழல்கள், பொது இடங்கள், வடிகால்கள், வீதிகள் வீடுகள், கைவிடப்பட்ட இடங்கள், மயானங்கள், கடற்கரையோரங்கள் என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்படல் வேண்டும் -என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மாகாண கல்வி பணிப்பாளர், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், படைஅதிகாரிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (50-302)

## பேட்டுக்குஞ்சுகள் எனக்கூறி சேவல் குஞ்சுகள் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன, 16

தற்போது தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் ஒருநாள் சேவல் கோழிக்குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள் என அடையாளப்படுத்தப்பட்டு குறைந்த விலைகளில் வர்த்தகர்களினால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

எனவே பண்ணையாளர்கள் விழிப்பாக விருந்து இத்தகைய கோழிக்குஞ்சுகளைப் பெற்று ஏமாறவேண்டாம் எனக்கேட்டு கொள்ளப்படுகின்றார்கள். குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் அருகிலுள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களிற்கு சென்று கால்நடை வைத்தியரது உறுதிப்படுத்தலுடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50)

# படையெடுக்கும் பாம்பாட்டிகளால் இடையூறுகளைச் சந்திக்கும் பொதுமக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்.நகரில் பாம்பாட்டிகளின் தொல்லையால் பாதசாரிகள் மற்றும் வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்துள்ள பாம்பாட்டிகள் தம்முடைய பாம்புகள், குரங்குகள் போன்றவற்றை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பிரதான வீதியோரங்களில் வைத்து வித்தைகளைக் காட்டி வருகின்றனர்.

இவற்றைப் பெருமளவு மக்கள் குவிந்து நின்று பார்வையிட்டு வருகின்றனர்.

பாம்பாட்டிகளின் இத்தகைய செயற்பாடுகளினால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதாக வர்த்தகர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேசமயம் யாழ்.கஸ்தூரியார் வீதியில் நேற்று முன்தினம் பாம்பு வித்தையைக் காண்பித்துக் கொண்டிருந்த பாம்பாட்டிகளை பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

கடந்த வாரத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பாம்பாட்டிகள் குடாநாட்டிற்கு படையெடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

### யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

### விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி

ஒருவருட கால விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு க.பொ.த (சாதாரண) தரம் சித்தியடைந்த 16-26 வயதுக்கிடைப்பட்ட இரு பாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் விவசாய மூலதத்துவம், பயிர்வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும். பயிற்சிநெறி இலவசமாக வழங்கப்படுவதுடன் உதவித் தொகையும் வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 19.01.2010 காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரங்கள், கிராம அலுவலரின் நற்சான்றிதழ் அத்துடன் வேறு இரு நற்சான்றிதழ் பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.

(93903) (93908)

## ஊர்காவற்றுறையில் டெங்கு விழிப்புணர்வுப் பிரசாரம்

ஊர்காவற்றுறை, ஜன. 16

ஊர்காவற்றுறையில் தீவிரமாகப் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக ஊர்காவற்றுறை பிரதேசசபையும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதுவரை ஊர்காவற்றுறையில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது மேலும் தீவிரமாவதைக் கட்டுப்படுத்தும் முகமாக ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி நிலையங்களில் மருந்து விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - சிரட்டைகள், தகரப் பேணிகள் போன்றவற்றில் மழைநீர் தேங்கி நிற்பதால் அவை நுளம்பு பெருக்கத்துக்கு வழிசமைப்பதாக அமையும். எனவே வீட்டு சுற்றாடலில் மழைநீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்வதையும் சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்குமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(50-21)

## கொடிகாமம் பனை தென்னை வள அ. கூ. சங்கத்தின் பணியாளர் நலன்புரிச் சங்கம்

### அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவு

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் நலன்புரிச் சங்கம் 14.01.2010 அன்று நடத்திய அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு இலக்கம்: 4716
02 ஆம் பரிசு இலக்கம்: 2671
03 ஆம் பரிசு இலக்கம்: 3156

ஆறுதல் பரிசுகள் பெற்ற இலக்கங்கள்:
*0963, 1987, 4724, 2958, 1854, 1636, 4270, 4875, 0805, 4602*

கொடிகாமம் ப. தெ. வள அ. கூ. சங்க
பணியாளர் நலன்புரி சங்கம்,
கண்டி வீதி, கொடிகாமம்.

(93909)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் செல்வி காஞ்சனா துரைராஜா அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி திலகவதி துரைராஜா

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

(93908)

## Computer Courses

**IBMS**

புதிய தொழில்நுட்ப அறிமுகங்களுடன்
கல்வியாண்டு 2010க்குறிய புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1: 10.01.2010 பிரிவு 2: 23.01.2010
காலை 8.00மணி

Courses
1. Diploma in Microsoft Office
2. Diploma in Desk Top Publishing
3. Diploma in Internet Technology
4. Diploma in Hardware Technology
5. Certificate in Java Programming




மேலதிக விபரங்களுக்கு

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES**
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232 Fax: 021 222 6933

## புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

**அன்புடையீர்!**

*நிகழும் மங்களகரமான விரோதி வருடம் தை மாதம் 5ம் நாள் (18.01.2010) திங்கட் கிழமை பகல் 9.45மணி முதல் 11.33மணிவரையுள்ள மீன லக்கினமும் அவிட்ட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்,*

இல 388, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில்

### பரகத் பேப்பர் றேடிங் கம்பனி

எனும் வியாபார நாமத்தைக் கொண்ட புதுக்கடை திறப்பு விழா நடத்த நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.
தொ.பே. 0777769231

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
பரகத் பேப்பர் றேடிங் கம்பனி பங்காளர்கள்.

(c/564137)

# Join the Leader in Higher Education


## Enroll Now in Edexcel Courses

## HND Civil Engineering / Quantity Surveying



COURSES COMMENCING IN
**January 2010**

**IIS CITY CAMPUS**
200, Sivan pannai Road,
Jaffna.
Tel: 0212228060
Fax: 0212226933
E-mail: iiscc@sltnet.lk
Web :www.iiscitycampus.com



Our Engineering and Quantity Surveying Students on training at a Colombo Worksite

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூகம்பத்தால் சிதைவடைந்த ஹெய்ட்டியில் மந்தகதியில் நிவாரண, மீட்புப் பணிகள்

## ஜனாதிபதி நடுவீதியில் தங்கவேண்டிய அவலம்



வாஷிங்ரடன், ஜன.16

ஹெய்ட்டியில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் பலியானோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டிவிட்டது. ஜனாதிபதி மாளிகை படுமோசமாக சேதமடைந்துள்ளது. இதில் ஜனாதிபதி ரெனி பிரேவல் மாத்திரமே உயிர் பிழைத்துள்ளார். அவரோடிருந்த ஏனையோர் பலியாகியுள்ளனர்.

ஜனாதிபதி ரெனி பிரேவல் தற்போது, பாதுகாப்பாக தங்குவதற்கு வழியின்றி நடுத் தெருவில் தங்கவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளார். வீடுகளை இழந்தவர்கள் இராக்காலத்தில் தெருக்களில் துயில்கிறார்கள். மீட்பு, நிவாரணப் பணிகள் முழுவீச்சில் இடம்பெறவில்லை.

கரீபியன் கடல் பகுதியில் அமைந்துள்ள சிறிய நாடான ஹெய்ட்டியில் கடந்த 12 ஆம் திகதி இரவு 7.3 ரிச்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. தலைநகர் போர்ட் ஒப் பிரின்ஸ் அருகே ஏற்பட்ட இந்தப் பூகம்பத்தால் பெரும்பாலான கட்டடங்கள் தரைமட்டமாயின.

கட்டட இடிபாடுகளில் சிக்கி ஏராளமானோர் பலியாகியுள்ளனர். ஜனாதிபதி மாளிகை, நாடாளுமன்றக் கட்டடம், அலுவலகம், வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், அரச அலுவலகங்கள் ஆகியவை உள்ளிட்ட கட்டடங்கள் இந்தப் பூகம்பத்தால் சேதடைந்தும், நிர்மூலமாக்கப்பட்டும் உள்ளன.

ஏழை நாடான ஹெய்ட்டியில் முழுவீச்சில் மீட்புப் பணிகள் இடம்பெறவில்லை. கட்டட இடிபாடுகளில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டி விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதை ஜனாதிபதி ரெனி பிரேவலும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் ஹெய்ட்டிக்கு விரைந்துள்ளனர். அமெரிக்க நிவாரணக் கப்பலும் போர்ட் ஒப் பிரின்ஸ் விரைந்துள்ளது.

தகவல் தொடர்பு கோபுரங்கள் சேதமடைந்து விட்டன. இதனால் கையடக்கத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தகவல்களை சேகரிக்க முடியாத நிலை உள்ளது. மின்நிலையங்கள் பூகம்பத்தில் சேதமடைந்துள்ளன. தலைநகர் போர்ட் ஒப்பிரின்ஸ் இருளில் மூழ்கியுள்ளது.

மோப்ப நாய்கள் மூலம் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் கண்டறியும் பணி தொடர்கிறது. வீடுகளை இழந்தவர்கள் இராக்காலத்தில் தெருக்களில் படுத்து உறங்குகின்றனர். தண்ணீர், உணவு, மருந்துப் பொருள்கள் ஆகியவை கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஹெய்ட்டி பூகம்ப நிவாரணத்துக்குத் தாராளமாக உதவும்படி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கேட்டுக்கொண்டுள்ளார். ஹெய்ட்டியில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கர்கள் உள்ளனர். இவர்கள் நிலைமையை ஆராய்வதற்காக வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தமது ஆசியப் பயணத்தை இரத்து செய்துள்ளார்.

கட்டட இடிபாடுகளில் சிக்கிய பலர் முதலுதவி சிகிச்சை பெற இயலாமல் தவித்தப்படி உள்ளனர். பெரிய கட்டட இடிபாடுகளை அகற்றுவதில் மீட்புக் குழுவினர் கடும் சவால்களை சந்தித்து வருகிறார்கள். இதனால் மீட்புப் பணிகள் மெதுவாகத்தான் நடைபெறுகின்றது.

# அமெரிக்கத் தாக்குதலிலிருந்து தலிபான் தலைவர் தப்பினார்

அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானின் தலிபான் தலைவர் ஹகிமுல்லா மெகூத் தப்பிவிட்டார் என பாகிஸ்தானிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் குறைந்தது தீவிரவாத சந்தேக நபர்கள் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானை ஒட்டிய பாகிஸ்தானின் பழங்குடியினர் பிரதேசமான வடக்கு வசிரிஸ்தானிலிருக்கும் பயிற்சி முகாம் என்று கூறப்படும் இடத்தின் மீது இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடப்பதற்கு முன்னரே தாக்கப்பட்ட இடத்திலிருந்து தங்கள் தலைவர் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டார் என்றும் அவர் தற்போது பாதுகாப்பாக இருக்கிறார் என்றும் பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் சார்பில் பேசவல்லவர் தெரிவித்திருக்கிறார்.

# தென் ஆப்கான் சந்தையில் குண்டுத்தாக்குதல்: 20 பேர் பலி

தென் ஆப்கானிஸ்தான் யூருஷ்கான் மாகாணத்திலுள்ள டிஹ்ராவுடன் நகர சந்தைப் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 20 பேர் பலியானதுடன் 13 பேர் காயமடைந் தனர். மக்கள் நடமாட்டமிகுந்த பகுதியில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

தற்கொலைக் குண்டுதாரி, இராணுவ வாகன அணியையோ, பொலிஸ் வாகன அணியையோ இலக்கு வைத்து குண்டுத் தாக்கு தலை நடத்த வந்திருக்கலாம். எனினும், குண்டு முன்கூட்டியே வெடித்துள்ளது. இக்குண்டு வெடிப்புக்குப் பின்னரே இவ்விரு வாகன அணிகளும் இப்பகுதியைக் கடந்துள்ளன என பிரதிப் பொலிஸ் ஆணையாளர் தெரிவித்தார்.

''சமீப மாதங்களில் இடம்பெற்றுள்ள குண்டுத் தாக்குதல்களில் இது மிக மோசமான தாக்குதலாகும். இதில் மரணித்துள்ளவர்கள் அனைவரும் அப்பாவி சிவிலியன்களாவர். காயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயர்வடையலாம்'' என காபூலிலுள்ள பி.பி.ஸி. நிருபர் மார்க்டுமெட் தெரிவித்தார்.

தலிபான் தலைவர் முல்லா ஒமரின் சொந்த வாசஸ்தலம் யூருஷ்கான் மாகாணத்திலேயே அமைந்துள்ளது. இம்மாகாணம் தலிபான்களின் கோட்டையாக இருந்துவருகிறது. இந்த வருட ஆரம்பத்தில் இம்மாகாணத்துக்கு மேலதிக மேற்கத்தேய துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# புலிகள் இயக்கத்தின் எமில் காந்தனுடன் மஹிந்தவின் மகனுக்குத் தொடர்பாம்!

## புகைப்படத்தை ஆதாரம் காட்டுகின்றது எதிரணி



கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ புலிகளின் முக்கியஸ்தரான எமில் காந்தனுடன் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளார் என்று தெரிவித்து, அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து எடுத்துக் கொண்டது எனத் தெரிவிக்கப்படும் புகைப்படம் ஒன்றை சரத் பொன்சேகாவின் ஊடகப் பேச்சாளர்களான மங்கள சமரவீர மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நேற்று வெளியிட்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி அல்லது பிரதமர் இரண்டு நாள்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று அவர்கள் அவசர வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அநுரகுமார திஸாநாயக்க கூறியவை வருமாறு:-

எமது ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா மீது அரசு பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதால் கூட்டமைப்புக்கும் பொன்சேகாவுக்குமிடையில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ளது என்று அரசு தொடர்ச்சியாகக் கூறிவருகின்றது.

ஆனால், அரசு புலிகளின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு செயற்பட்டு வருகின்றமை எமக்குத் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ, புலிகளின் முக்கியஸ்தர் எமில் காந்தனுடன் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளார். அவருடன் சேர்ந்து ஹோட்டல் ஒன்றில் வைத்துப் புகைப்படம் எடுத்துள்ளார்.

நாட்டுக்குத் தேசப்பற்றாளர்கள் போல் தம்மைக் காட்டிக்கொண்டு மஹிந்தவின் குடும்பம் புலிகளுடன் தொடர்பை வைத்துள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கும் எமில் காந்தனுக்குமிடையில் இருக்கின்ற தொடர்பு பற்றி அரசு தெளிவுபடுத்த வேண்டும். நாமல் ராஜபக்ஷ நடத்திவரும் 'இளைஞர்களுக்கான நாளை' என்ற அமைப்புக்கு எவ்வாறு நிதி கிடைக்கின்றது என்று அரசு கூறவேண்டும் - என்றார். (சி)

## பட்டாசு வெடிகளால் நேர்ந்த விபரீதங்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

உயர்த்தி எறியப்பட்ட பட்டாசு கர்ப்பிணிப்பெண்ணின் சட்டைக்குள் வீழ்ந்து வெடித்ததில் பெண் அதிர்ச்சியில் மூர்சையுற்றார்.

இந்தப் பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வீட்டுக்குள் விடப்பட்ட சக்கர வாணம் படித்துக் கொண்டிருந்த சிறுவனின் காலிற்குள் புகுந்ததில் அவர் எரிகாயங்களிற்கு இலக்கானார்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சதீஸ்வரன் (வயது 11) என்ற அந்தச் சிறுவனும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-207)

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை வரை இரண்டு நாள்கள் புதுடில்லியில் தங்கியிருந்து இந்திய அரசுத் தலைமையோடும், அதிகாரிகளோடும் பேச்சு நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவில் மாவை சேனாதிராஜாவும் ஒருவர். அவருடன் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.பிக்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் அந்தப் பேச்சுகளில் பங்குபற்றினர்.

நேற்று முன்தினம் இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் நிருபமா ராவ் மற்றும் வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரிகளைச் சந்தித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்ட அக்குழுவினர் நேற்றும் இந்திய அரசின் உயர் வட்டாரங்களுடன் கலந்தாலோசனையில் ஈடுபடவிருந்தனர்.

இதுவரை இடம்பெற்ற சந்திப்புகள் குறித்து மாவை சேனாதிராஜா எம்.பி. நேற்று 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:-

முக்கியமாக மூன்று விடயங்களை இந்தியத் தரப்புக்கு எடுத்துரைத்தோம்.

ஒன்று - தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களோடு சேர்ந்து எடுத்த முடிவு, அதன் பின்புலம் போன்றவற்றை விளக்கினோம்.

அடுத்தது - தற்போதைய அரசியல் களநிலைவரம், தமிழ்மக்களின் எண்ணக் - கருத்து, நிலைப்பாடுகள், எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள் என்பவற்றைக் கூறினோம்.

மூன்றாவது - இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம், நீதி கிட்டுவதற்காக நாம் எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள், இலக்குகள், அதற்காக இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு ஆகியன.

நம்பிக்கை தருவதாக அமைந்தது

இந்த விடயங்களை மிகக் கவனமாக செவிமடுத்த புதுடில்லித் தரப்பு, எங்களுடைய கருத்துகளை உள்வாங்கி ஏற்றுக் கொண்டுள்ளது. மிகவும் ஆரோக்கியமானதாகவும், நம்பிக்கை தருவதாகவும் இந்தத் தொடர்பாடல் இடம்பெற்று வருகின்றமை குறித்து நாம் முழுத் திருப்தி அடைந்துள்ளோம்.

இன்று (சனியன்று) நாம் சென்னை திரும்பி, அடுத்த நாள் கொழும்பு செல்வோம்.

நாளை 17 ஆம் திகதிமுதல் வடக்கு, கிழக்கில் எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முழு மூச்சாக ஒரு வாரத்துக்கு இடம்பெறும்.

கிழக்கில் முஸ்லிம் தரப்புடன் சேர்ந்து பிரசாரக் கூட்டங்களை நடத்தவும் உத்தேசித்துள்ளோம்.

வடக்கு கிழக்குக்கு வெளியிலும் - கொழும்பிலும் - பிரசாரக் கூட்டங்களை நடத்துவது குறித்துப் பரிசீலித்து வருகின்றோம்.

- என்றார் அவர்.

இதேநேரம், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தரப்பு வேட்பாளரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான் நிலைப்பாட்டை வெளிப்படையாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள கையோடு, கூட்டமைப்பின் மூத்த தலைவர்களை அரசியல் பேச்சு நடத்துவதற்காக புதுடில்லி அழைத்தமை, இலங்கை அரசுத் தரப்புக்குக் காட்டப்பட்ட தவறான சமிஞ்ஞை என்ற சாரப்பட இவ்விடயத்தைக் கொழும்பு கவனத்தில் எடுத்திருப்பதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், இவ்விடயம் தொடர்பில் கொழும்புத் தரப்பில் இருந்து அத்தகைய உத்தியோகபூர்வ கருத்து வெளிப்பாடு ஏதும் இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தென்மராட்சி கிழக்கு தனங்களப்பு அறுகு வெளி பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 523 ஆவது படையதிகாரி லெப்டினன்ட் பி.எம்.பி. ரட்ணசிறி ஆகியோர் வரவேற்கப்படுவதை முதல் படத்திலும், அமைச்சர் டக்ளஸ் பொதுமக்களுடன் உரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

மீள்குடியமரவுள்ள மக்களில் ஒரு பகுதியினரையும், ஏற்கனவே மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட தனங்களப்பு பிரதேசத்தில் உள்ள வயலில் வேலைசெய்து கொண்டிருந்த விவசாயிகளுடன் அமைச்சர் உரையாடுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# மீள்குடியமர்ந்த வேலணை மக்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.16

வன்னியில் இருந்து மீள்குடியேறியுள்ள வேலணைப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஜேர்மன் நாட்டு அரசின் நிதியுதவியுடன் சேவாலங்கா நிறுவனம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

## 6 மாதங்களுக்கு உபஉணவுகளும் கிடைக்கும்

வடபகுதியில் மீள் குடியமர்வோருக்கான துரித மீட்சித்திட்டத்தின் கீழ் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் அரை நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு 230பயனாளிகளும் , அரை நிரந்தர மலசலகூடங்களை அமைப்பதற்கு 230 பயனாளிகளும் வீடுகள் அல்லது மலசலகூடங்கள் திருத்த வேலைகளுக்கு 70 பயனாளிகளும், கிணறுகள் புனரமைத்தலும், துப்புரவு செய்தலுக்கு 50 பயனாளிகளும் மற்றும் நம்பிக்கையை கட்டி வளர்த்தல் பயிற்சிகளுக்கு 2 பயனாளிகளும், தெரிவு செய்யப்படட்டுள்ளனர்.

இத்தகைய அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை இப்பிரிவில் ஆயிரத்து 500 அங்கத்தவர்களுக்கு ஆறு மாதங்களுக்குரிய உப உணவுப் பொருள்களும், நிவாரணமாக வழங்கப்படவுள்ளன. (ஒ - 9)


## மூன்றாம் ஆண்டின் நினைவலைகள்



மலர்வு 18 ★ 10 ★ 1934

உதிர்வு 20 ★ 01 ★ 2007

கந்தையா கனகரத்தினம்
(K.K ஐயா)

*பாசத்தை பொழிந்து அன்பாய் வளர்த்து*
*நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது*
*எம்மை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?*
*ஆண்டுகள் மூன்று ஆனாலும்*
*ஆறவில்லை எம் மனம்......*

(C/564143)

**82/7, கண்டி வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

- குடும்பத்தினர் -


## வன்னி பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜன.16

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவு இன்று மு.ப. 10 மணிக்கு அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியை லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையும் மனித நேயநிதியமும் இணைந்து வழங்குகின்றன.

என்வே சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் மு.ப. 9.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகன் கேட்டுள்ளார். (ஒ - 10)

## சோசலிச கட்சி வேட்பாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.16

சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான விஜே டயஸுக்கு ஆதரவு கோரி பிரசாரக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனமும் இக் கூட்டத்தில் வைத்து வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)


## சாரதி தேவை

பிரபலமான கம்பனி ஒன்றுக்கு சகல வாகனங்களும் செலுத்தக்கூடிய, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி உடன் தேவை.

* அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களில் பணியாற்றி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* ஆங்கிலம், சிங்களம் பேசக்கூடியவராக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகளுடன் 18.01. 2010ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விளம்பர இலக்கம்: 3975,
C/O: உதயன், யாழ்ப்பாணம்.

(C/564142)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 ★ 06 ★ 1913

உதிர்வு 17 ★ 12 ★ 2009

அமரர் க.இ.குமாரசாமி

[ஓய்வுபெற்ற அதிபர்,தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் செயலாளர்,கூட்டுறவாளர்]

17.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று சனிக்கிழமை (16.01.2010) மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் ஆரம்பமாகி நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(564145)

'இரத்திவவாசா'
திருவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,கோப்பாய்.

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 19 ★ 06 ★ 1927

மறைவு 15 ★ 12 ★ 2009

அமரர்

சின்னத்தம்பி கந்தசாமி

**(முன்னாள் முகாமையாளர் - வளலாய் கிழக்கு ப.நோ.கூ. சங்கம், முன்னாள் கிளை முகாமையாளர் - அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்)**

*எமது பெரிய தந்தையாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். மேலும் இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**மானிப்பாய் வீதி,**
**உடுவில்.**

(C/564153)

*கு.எழிற்செல்வன்,*
*கு.திருச்செல்வம்*
*(பெறாமகன்மார்)*

## மரண அறிவித்தல்

### திருமதி முருகன் ஆச்சாரி வள்ளியம்மாள்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகன் ஆச்சாரி வள்ளியம்மாள் (15.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவன் ஆச்சாரி (நியூ கார்த்திகா நகை மாடம், சுன்னாகம்), சிவலிங்கம் ஆச்சாரி (சுகனியா நகை மாடம், சுன்னாம்)
(மகன்மார்).

Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (93917)

## விற்பனைக்கு

TH- L 32 C10M 32" Panasonic LCD T.V யும் Sony Cybershot Camera DSC -T 500 (Touch Screen Japan) Emergency Rechargable Light(Japan) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.0714829215,0777222515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள்புனரமைக்கும் திட்டத்தின்கீழ் பாதிப்புற்ற சிறார்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் வைபவம் நேற்று இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத கே.கம்லத் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சுகத கே.கம்லத் கொடுப்பனவு வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் எவ்வாறு வாக்குகளை அடையாளம் இடுவது?

## தேர்தல் ஆணையாளரின் விவரக்குறிப்பு இது

கொழும்பு, ஜன.16

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் வாக்காளர்கள் எவ்வாறு வாக்குகளை அடையாளம் இடுவது என்பது குறித்த ஒழுங்கு முறை சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க விளக்கக்குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

* ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் போட்டியிடுகின்றமையால் வேட்பாளர் ஒருவருக்கு வாக்கு ஒன்றையும் இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாம் விருப்பையும், மூன்றாம் விருப்பையும் அடையாளமிடுவதற்கு அவகாசமுண்டு.

* வாக்குச்சீட்டொன்றில் வாக்காளர் அவரது இரண்டாம், மூன்றாம் விருப்புகளை அடையாளமிடாதவிடத்தும், வேட்பாளரொருவருக்கு முறையாக அடையாளமிடப்பட்ட வாக்கொன்று காணப்படுமாயின் அது செல்லுபடியான வாக்கொன்றாக ஏற்றுக்கொள்ளப்படும்.

* ஆயினும் வாக்கொன்று அடையாளமிடப்படாத இரண்டாம், மூன்றாம் விருப்புகள் மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டொன்று வாக்கொன்று அடையாளமிடப்படாமை காரணமாக நிராகரிக்கப்படவேண்டி ஏற்படும்.

வாக்குச் சீட்டொன்று அடையாளமிடப்படவேண்டிய நடைமுறை ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

● "1" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளர் ஒருவருக்கு தமது வாக்கினை அளிக்க முடியும்.

● "2" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதனூடாக வேட்பாளர் ஒருவருக்கு தமது இரண்டாம் விருப்பினை அளிக்க முடியும்.

● "3" என்ற இலக்கத்தை அடையாளமிடுவதனூடாக வேட் பாளர் ஒருவருக்கு தமது மூன்றாம் விருப்பினை அளிக்க முடியும்.

* வாக்காளர் ஒருவர் வாக்குச்சீட்டில் வாக்கு ஒன்றினை மாத்திரம் அடையாளமிட எதிர்பார்ப்பாராயின்:

● அவ்வாறான வாக்குச்சீட்டொன்றில் உள்ள அடையாளத்தினால் வாக்காளரின் விருப்பம் வெளிப்படுமாயின், அதில் வாக்காளரின் ஆளடையாளம் வெளிப்படாத வரையில் அது ஒரு செல்லுபடியான வாக்குச்சீட்டொன்றாக இருக்கும்.

● வாக்காளரினால் அவ்வாறு வாக்குச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அடையாளம் "2" என்ற இலக்கமாகாவோ "3" என்ற இலக்கமாகவோ இருக்காதவிடத்தும், வேறு எந்த அடையாளமாகவிருந்தாலும் அதை செல்லுபடியான வாக்குச்சீட்டு ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடியும்.

* ஏதேனுமொரு வாக்குச்சீட்டில் வாக்காளரினால்,

● வேட்பாளர் ஒருவருக்கேனும் வாக்களிப்பட்டில்லாத அல்லது

● ஒருவருக்கு கூடுதலான வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ள அல்லது

● இரண்டாம் விருப்பு அல்லது மூன்றாம் விருப்பு மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு எண்ணப்படவும் மாட்டாது. (ஒ)

## இணுவில் குடும்பத்தினர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜன.16

வீதியோரமாக நின்றிருந்தவர்களை அவ்வழியால் வந்த கார் மோதியதாகக் கூறப்படும் விபத்துச் சம்பவம் ஒன்று நேற்று மாலை எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் நிகழ்ந்துள்ளது.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மோட்டார் சைக்கிளில் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்பட்டது.

கனகரத்தினம் ஜெயரூபன் (வயது33), ஜெயரூபன் சர்வாஜினி (வயது 34), ஜெ.பிரதீஷா (வயது 07), ஜெ.பிரதீஷன் (வயது 3) என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து - அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ-207-14)

## தண்ணீர் எனக்கருதி மண்ணெண்ணெய்யை குடித்தார் யுவதி!

யாழ்ப்பாணம், ஜன.16

பச்சை சோடாப் போத்தலுக்குள் வைக்கப்பட்டிருந்த மண்எண்ணெய்யை தண்ணீர் என நினைத்து மடமடவென குடித்தார் இளம் குடும்பப் பெண். தற்போது இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மீசாலை வடக்கில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த யோகதீபன் மிதுனா (வயது 22) என்பவரே பாதிக்கப்பட்டுள்ளார். (ஓ-207)

## மானிப்பாயில் இன்று டெங்கு ஒழிப்பு கருத்துரை

யாழ்ப்பாணம், ஜன.16

மானிப்பாய் சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் 'டெங்குநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு' இன்று மாலை 4மணிக்கு வலி.தென் மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் சாயி நிலைய உபதலைவர் வை.செகராசசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பதில் தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி திருமகன் சிவசங்கர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தினேஷ் ஜெயக்குமார், வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலர் திருமதி சிவலிங்கம் புஸ்பமலர் ஆகியோர் கருத்துரை வழங்கஉள்ளனர். (ஓ-6)

## டெங்கு ஒழிப்பு குறித்து மாநகர சபை ஊழியருடன் மேயர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ்.மாவட்டத்தில் தீவிரமாக பரவிவரும் டெங்கு நோயியைக் கட்டுப்படுத்த யாழ்.மாநாகரசபை எல்லைக்குள் எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாநகர சபை மேயர் மாநகரசபை ஊழியர்களுடன் இன்று சனிக்கிழமை கலந்துரையாடவுள்ளார். (ஓ-6)

# உடுவிலில் மீளக்குடியமர்ந்த மக்களை நேற்று சென்று சந்தித்தார் டக்ளஸ்

உடுவில் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேற்றுக் காலை சந்தித்து அவர்களது குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்து கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் 10மணியளவில் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வின் போது மீளக்குடியமர்ந்த மக்கள் தற்போதைய நிலைமையில் தாங்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து அமைச்சரிடம் எடுத்து விளக்கினர். அவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து ஏற்றுக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கோரிக்கைகளைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றித்தருவதாக அங்கு உறுதியளித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் யாழ்.குடாநாட்டில் இந்த மக்கள் மீண்டும் குடியமர்த்தப்பட்ட ஆரம்ப காலத்தில் அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்ததன் பின்னர் அவர்களது தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக தான் அப் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்வதாக முன்னர் அமைச்சர் கூறியிருந்தார். அதன்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியேறிய மக்களைச் சந்தித்து கலந்துரையாடியதாக அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# குமுதினியின் சேவை இன்று முதல் நாளாந்தம் மூன்று தடவைகள்

யாழ்ப்பாணம், ஜன.16

குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் குமுதினிப் படகின் சேவை இன்று சனிக்கிழமை தொடக்கம் மூன்று தடவைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அரச அதிபர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு ஏற்ப குமுதினிப்படகின் சேவை இரண்டில் இருந்து மூன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

குமுதினிப்படகு சேவையில் ஈடுபடும் நேர அட்டவணை வருமாறு:-

* நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவை
முதலாவது சேவை-காலை 7மணி,
இரண்டாவது சேவை-முற்பகல் 11மணி,
மூன்றாவது சேவை-பிற்பகல் 3மணி

* குறிகாட்டுவான் - நெடுந்தீவு சேவை
முதலாவது சேவை-முற்பகல் 9மணி,
இரண்டாவது சேவை-பிற்பகல் 1மணி,
மூன்றாவது சேவை-பிற்பகல் 4.45மணி. (ஓ-6)

## யாழ்.நகரில் சனச அபிவிருத்தி வங்கி

யாழ்ப்பாணம், ஜன.16

சனச அபிவிருத்தி வங்கியின் 54 ஆவது கிளை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இலக்கம் 212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இந்த வங்கிக் கிளை இயங்கவுள்ளது.

சனச அபிவிருத்தி வங்கியின் தலைவர் 'விஸ்வ பிரசாதினி', கலாநிதி பீ.ஏ.கிரிவந்தெனிய மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரின் தலைமையில் இந்த திறப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்த வங்கியானது "வடக்கின் வசந்தம்" அபிவிருத்தி திட்டத்தில் பங்காளியாக இணைந்து கொள்வதாக சனச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் கூறுகிறார். (ஓ-10)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.16

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2198ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'Y' என்ற ஆங்கில எழுத்தும் இடமிருந்து வலமாக 6/4/8/3/8/4 என்ற இலக்கங்களும் அதிஷ்டத்திற்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. இந்த ஒழுங்கில் 6/4/8/3/8/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாவது பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/8/3/8/4 என்ற இலக்கங்களைக் சரியாக கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15பேருக்கு இரண்டாவது பரிசாக தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

8/3/8/4 என்ற இலக்கங்களைச் சரியாக கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 147பேருக்கு மூன்றாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/8/4 என்ற இலக்கங்களை சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1363பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/4/ என்ற இலக்கங்களைச் சரியாக கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13988 பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

4என்ற இலக்கத்தை கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 138247பேருக்கு ஆறாம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான வடிவமைப்பில் 6/4/8/3/8 என்ற இலக்கங்களைச் சரியாக கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 16பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

6/4/8/3 என்ற இலக்கங்களை கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 142பேருக்கு எட்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/4/8 என்ற இலக்கங்களை சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1391பேருக்கு ஒன்பதாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

6/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,907 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'Y' என்ற ஆங்கில எழுத்து மட்டும் சரியாக உள்ள சீட்டுக்களை வைத்திருக்கும் 55,405பேருக்கு பதினோராம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# இணையக் குற்றச் செயலில் ஈடுபட்ட தமிழர் ஒருவர் இங்கிலாந்தில் கைது!

கொழும்பு, ஜன. 16

திட்டமிடப்பட்ட இணையக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவரைப் பிரிட்டிஷ் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய வலையமைப்பின் மூலம் பாரியளவு மோசடி நடவடிக்கைகளை குறித்த இலங்கையர் உள்ளிட்ட கும்பல் மேற்கொண்டுவந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த ரேணுகாந் சுப்ரமணியம் (வயது-33) என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடன் அட்டை எண்கள் மற்றும் மோசடி நடவடிக்கைகளுக்கான தகவல்களை இணையமூடாக பரிமாறுவதற்கு இவர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நீதிமன்றத்திற்குப் போலியான தகவல்களை வழங்கியமை உள்ளிட்ட ஐந்து குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடுமெனவும் கூறப்படுகிறது.

ரோணுகாந் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனவும், 2002ஆம் ஆண்டு முதல் லண்டனில் வசித்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மோசடிக்காரர்கள் தகவல்களை பரிமாறிக் கொள்ளக் கூடிய இரகசிய இணைய தளமொன்றையும் ரேணுகாந் பராமரித்து வந்தாராம்.

(அ-சி)

## சூடாநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை மருத்துவபீட மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வின் போது பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்டு சூரிய கிரகணத்தைப் பார்வையிட்டனர்.

யாழ். பல்கலைக்கழகம், ஆதர்சிகிளாக் மையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் கலந்து விசேடமாக ஏற்பாடு செய்திருந்த நிலையம் ஊடாக சூரிய கிரகணத்தைப் பார்வையிட்டனர்.

தெற்கில் இருந்து வந்த நூற்றுக்கணக்கானவர்களும் சூரிய கிரகணத்தை விசேட கருவிகள் மூலம் பார்வையிட்டதை அவதானிக்க முடிந்தது.

நேற்று முற்பகல் 10மணிக்கு மருத்துவபீட மைதானத்தில் ஆரம்பமான நிகழ்வில், விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண, உலகெங்கும் உள்ள மக்கள் சூரிய கிரகணத்தை பார்க்க வசதியாக accint.lk என்ற இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் திஸ்ஸவிதாரண உரையாற்றினார்.

அதன் பின் ஆதர் சி.கிளார்க் மையத்தின் தலைவர் பேராசிரியர் எஸ்.பெரேரா எவ்வாறு சூரிய கிரகணத்தை பார்வையிட வேண்டும் என விளக்கம் அளித்தார்.

சூரிய கிரகணத்தை கருவிகள் ஏதும் இன்றி வெறும் கண்ணால் பார்க்கக் கூடாது. வெற்றுக்கண்ணால் பார்த்தால் 15 வருடங்களின் பின் கண்கள் பாதிப்படையும் எனத் தெரிவித்தார்.

முற்பகல் 11மணிக்கு பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடி மூலம் சூரிய கிரகணத்தை அமைச்சர் பார்வையிட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதைத் தொடர்ந்து அங்கு பெரும் திரை ஒன்றில் சூரிய கிரகணத்தின் ஒவ்வொரு கட்டமும் காண்பிக்கப்பட்டது.

நண்பகல் 1.20முதல் 1.30வரை பூரண சூரிய கிரகணம் அங்கு நேரடியாகக் காட்சிப்படுத்தப்பட்டது.

(ஒ-1-14-16-236-72)

## தவறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டாஞ்சேனை, தந்தூரி மற்றும் கம்புறுபிட்டிய ஆகிய பகுதிகளிலேயே இந்த வாக்காளர் அட்டைகள் தவறவிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் தந்தூரி பகுதியில் தவறவிடப்பட்ட வாக்காளர் அட்டைகளே கண்டுபிடிக்கப்பட்டன எனத் தபால் மா அதிபர் கூறியுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கொலன்னாவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்தியுள்ளனர்.

தலையிலும், வயிற்றிலும் காயங்களுக்குள்ளான நாவுல, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

துப்பாக்கிகள், கத்திகள் சகிதம் வந்த குழுவினரே தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவித்துள்ள நாவுலவின் மனைவி, தன்னையும், குழந்தைகளையும் எரித்து விடப்போவதாக அவர்கள் அச்சுறுத்தினர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொலன்னாவைப் பகுதியில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் கூட்டத்தை ஜானக நாவுலவே கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தார்.

இதேவேளை, வியாழக்கிழமை இரவு 12.45 மணியளவில் மூன்று வாகனங்களில் வந்த இனந்தெரியாத ஆயுதமேந்திய கும்பலொன்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொலன்னாவை நகரசபைத் தலைவர் சித்திரா டயஸின் வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

கொலன்னாவை ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் சுனிலின் வீட்டின் மீதும் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தொடர்புடைய ஒன்பது பேரைத் தாங்கள் கைது செய்துள்ளதாகப் எனப் பொலிஸார் கூறினர் (அ-சி)

# தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது நல்லது? அலசுகிறது 'த ரெலிகிராப்' பத்திரிகை

கொழும்பு, ஜன. 16

தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிப் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கலாம் என்று கருதப்படும் வகையிலான செய்தி ஒன்றை லண்டனிலிருந்து வெளிவரும் 'த ரெலிகிராப்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய எதிர்க்கட்சி பொதுவேட்பாளரும் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா ஆகியோர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கு தனித் தமிழீழம் அவசியம் என்பதை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு தமிழ் மக்கள் ஒரே இலங்கையில் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### தமிழர்கள் குழப்பத்தில்

இந்நிலையில், தற்போது இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்குக் களத்தில் போராடுகின்றனர். இந்த நிலையில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்த தீர்மானத்தை எடுப்பதில் தமிழ் மக்கள் குழப்பத்தில் காணப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் சரணடைய வெள்ளைக் கொடிகளுடன் வந்த விடுதலைப் புலிகளை சுடச்சொல்லி உத்தரவிட்டது மஹிந்த அரசு என்பது தற்போது உறுதியாகியுள்ளது. யுத்தக் களத்தின்போது சரத் பொன்சேகா ஏவப்பட்டவராகவே காணப்படுகிறார். எனினும், ராஜபக்ஷ ஏவியவராகக் காணப்படுகின்றார். அத்துடன், யுத்தத்தின் போது பிடிபட்ட பல தமிழர்கள் பாதுகாப்புத் தரப்பினரினால் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவித்துக்கொள்ள முடியும் எனத் தமிழர்கள் கருதுகின்றனர். இந்த நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவா அல்லது சரத் பொன்சேகாவா என்று தீர்மானிக்கும் பொறுப்பில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இதில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க முன்வந்தால், அந்த முடிவு வரவேற்கத்தக்கது. எனினும், அவர் சிங்கள வாக்குகளின் அடிப்படையில் தோல்வியுற்றால், இந்த ஆதரவு பாரதூரமானதாக அமைந்துவிடக் கூடும் - என்றுள்ளது. (சி)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலானவர்களின் வாக்குரிமை இல்லாமல் போயுள்ளது. அரசு இதற்காக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. தற்காலிக அடையாள அட்டைகள் கிடைக்காத சுமார் 10 லட்சம் பேர் வடக்கில் இருக்கின்றனர் - என்றார். (அ-சி)

## தபால் மூல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களையும் தன்னிடம் வைத்திருக்கிறார் எனக் குற்றஞ்சாட்டியவர் பொன்சேகா.

பொன்சேகா தனிநபர் ஆட்சிக்குத் திட்டமிடுகின்றார் என்பதையே என்னால் கூறமுடியும்.

எனினும், பொன்சேகா வெல்லப்போவதில்லை என்பதால் இது குறித்து நாம் அச்சமடையத் தேவையில்லை.

ஜனாதிபதி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவார். அவருக்குள்ள மக்கள் ஆதரவு குறையவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வென்ற பின்னர் அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக ஐக்கிய தேசியக்கட்சிக்குஅழைப்பு விடுப்போம்.

அவர்கள்அதனை எதிர்த்தால் புதிய தேர்தல் இடம் பெறும். பொருத்தமான தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்படும் - என்றார்.

(அ-சி)

## விடுதலையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருந்து வெளியே சென்று வந்தார் என்பதற்கான தகவல் எதுவுமில்லை.

நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள அவரை அரசு தற்போதைய தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு வசதியாகப் பயன்படுத்துவதற்காக இவ்வாறு வைத்திருக்கின்றதோ என்ற சந்தேகமும் கூட்டமைப்பு வட்டாரங்களில் நேற்று நிலவியதை அறிய முடிந்தது.

## ஆணையாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பிரதமர் நீதியரசர் அசோக் என். சில்வா, நீதிபதிகள் ஷிராணி திலகவர்த்தன, நிஹால் ஜி .அமரதுங்க, சலீம் மர்சூக், கே.சிறிபவன் ஆகிய ஐந்து நீதியரசர்கள் அடங்கிய ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2011 A/L
சடப்பொருள் நிலைமைகள் (அலகு - 3)
ஆரம்பம்: 17.01.2010 (ஞாயிறு)
SAT, SUN - 4.30 - 5.30 P.M
BY:RAJAH

MIS (O/L)
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
100% Practical
Diploma in MS-Office
Diploma in Desktop Publishing
Diploma in Hardware Technology
Diploma in Web Development
Diploma in Java Programming
Diploma in VB.Net Programming
Certificate in Visual Basic
Certificate in Web Designing
Certificate in Digital Video Editing
Certificate in 2D Animation
#74, Sabapathy Lane,Thalaiyaaly, Jaffna. TPNO:021 321 6083

நாளை ஆரம்பம்.........
பிறைறின் கல்வி நிலையம் சாவகச்சேரி
தரம் 4, புலமைப்பரிசில் வகுப்புக்கள்
17.01.2010 ஞாயிறு 10 a.m
ஆசிரியர் : சந்திரமோகன்

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
(சி/5626226)
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
2009ம் ஆண்டு யூன் - டிசம்பர் காலப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு லண்டன் student Visa பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதை மாணவர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
★ யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
★ பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்திற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
★ சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!

தங்குமிட ஒழுங்குகள், விமான நிலைய அழைப்பு ஏற்பாடுகள் மற்றும் விசா சம்பந்தமான மேலதிக ஆலோசனைகள் என்பன எமது லண்டன் ஆலோசகரால் நேரடியாக வழங்கப்படும்.
அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை7.00 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.
021 222 3818
021 567 3818
077 452 8818
தொடர்புகளிற்கு:
இல: 148, கோயில்வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

சிங்கள ஆசிரியர் தேவை
சிங்கள மொழி மற்றும் பேச்சுப் பயிற்சிக் கற்கை நெறிகளை நடாத்தும் ஆற்றலும், துறை சார் அனுபவமுமுடைய விரிவுரையாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
கல்வித் தகைமைகள், அனுபவம், தொடர்பு முகவரி, தொலைபேசி எண் முதலான விவரங்களுடன் தபால் மூலம் அல்லது நேரடியாக விண்ணப்பிக்கவும்.
GATEWAY LANGUAGE & ICT CENTRE JAFFNA
347, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 567 5555 / 021 222 7967
E - Mail : gatew[illegible].lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.